59

59

சித்ரபாநு ஹூ
கார்த்திகை - மார்கழிமீ

ஸம்புடம் - 1
ஸஞ்சிகை - 12

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JAN 1943
MADRAS

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	பாசுரங்களின் பகுதி : அமலனாதிபிரான்	410
2.	விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் பெருமை	416
3.	சராசர முக்த்யுபாயம்	421
4.	ஸ்ரீ ஜயந்தி உத்ஸவம்	426
5.	காரயித்ருத்வ நிரூபணம்	431
6.	செய்திகள்	439
7.	ஸம்பாதகரின் குறிப்புகள்	442
8.	கேனோபநிஷத்	9

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபன

1. ஐந்து அல்லது ஆறு பக்கங்களுக்
சுப் பதிப்பிக்கும்படியாக வ்யாஸங்ச

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை]

1942

[விஷு — சித்ரபாநு]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JAN 1943
MADRAS

ஸம்புடம் — 1

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

நெ. 5, இராமஸ்வாமி தெரு, தியாகராயநகர், சென்னை

லிபர்ட்டி அச்சகம், சென்னை.

1942

விஷய ஸூசிகை

[அகராதி]

ஸஞ்சிகை 1

அர்ச்சாவதார வைபவம் 33, 72, 108, 148
அபிநந்தநப் பத்ரிகைகள் 59
ஆசார்ய மஹிமை 9, 39
ஆஸ்திக்யம் 25
ஆண்டாள் வைபவம் 233, 263
இராம வேழம் 167
உருவெளித் தோற்றம் 137
உபநிஷத் பகுதி 155
கடிதங்கள் 400
காணும் காட்சி 250, 390
சரணாகதி 300
சராசர முக்த்யுபாயம் 421

செய்திகள்

ஒப்பிலியப்பன் ஸந்நிதி உபந்யாஸங்கள் 403
கத்தவாலில் ஸ்ரீமுக ஸேவை 141
களத்தூர் அழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் 246
காரயித்ருத்வ நிரூபணம் 288, 320, 362, 392, 431
கோபாலப்பேட்டை ஸம்ஸ்தானத்தில் ஸ்ரீமுக ஸேவை 247
தஞ்சை மாமணிக்கோயில் - வெண்ணாற்றங்கரை
ஸ்ரீ தேசிகன் உத்ஸவங்கள் 368
திருக்கோவலூர் மங்களாஶாஸனம் 439
திருவஹீந்த்ரபுரம் மங்களாஶாஸநம் 439
திருவஹீந்த்ரபுரம் உபந்யாஸங்கள் 368
திருக்குடந்தை ஸ்ரீ ஆதிவண்சடகோப மஹாதேசிகன்
உத்ஸவம் 403
திருவெவ்வுளூர் உபந்யாஸங்கள் 404, 441
மதிப்புரை: ஸ்ரீ பக்தவத்ஸல மாஹாத்ம்யம்,
ஸ்தோத்ராவளி, ஸ்ரீ அழகியசிங்கரின் புகழ்மாலை 277
மாலோல வித்வத் ஸபா 61
மன்னார்குடி ஸதஸ் 178
ஸ்ரீ மதுராந்தக மங்களாஶாஸனம் 440
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப
யதீந்த்ர மஹாதேசிகன் 27

40-ம் பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் 19-வது வார்ஷிக
மஹோத்ஸவம் 61
41-ம் பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் வர்ஷாராதநம் 441
ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா (மதிப்புரை) 97
ஸ்ரீ அழகியசிங்கரின் யாத்ரோத்ஸவம் 139
ஸ்ரீ அழகியசிங்கரின் சோளதேச யாத்ரை 176
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ர மஹோத்ஸவம் 179
ஸ்ரீ பாஷ்ய பரீக்ஷை 180
ஸ்ரீ அழகியசிங்கரின் சோளதேசத் திருப்பதிகளின்
மங்களாசாஸநம் 220, 222, 223, 285, 322
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத பாடசாலை,
மதுராந்தகம் 248
ஸ்ரீரங்க சடஜித் யதீந்த்ர நவமணி மாலா 249
ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சார க்ரமம் 283
ஸ்ரீ அழகியசிங்கரின் உத்ஸவம் 287
ஸ்ரீ அழகியசிங்கரின் ஸ்ரீ ஸங்கல்ப மஹோத்ஸவம் 325
ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் ஸ்ரீ ஸங்கல்ப
மஹோத்ஸவம் 326
ஸ்ரீ அழகியசிங்கரின் உத்தாந வைபவம் 367
ஸ்ரீ பாஷ்ய ஸ்ரீ பகவத்கீதா பரீக்ஷைகள் 367
ஸ்ரீ அழகியசிங்கரின் பௌண்டரிகபுர விஜயம் 369
ஸ்ரீ அழகியசிங்கர் விஷயமான மூன்று ஶ்லோகங்கள் 369
தர்ம ப்ரமாணங்கள் 76
திருமாமகளின் திருமணம் 205
திருப்பாவை 345, 378
தேவாலய தர்மம் 114, 161 195, 228, 256
'ந்ருஸிம்ஹ ப்ரியா' எனும் பத்ரிகையின் பெயர்க் காரணம் 23
பத்ரிகையின் வரலாறு 1
பகவத் வைபவ ஸல்லாபம் 127
பதயோஜநா ரஸங்கள் 188, 240

பாசுரங்களின் பகுதி:
'தாயே தந்தை' 21
அமலனாதிபிரான் 49, 83, 121, 199, 296, 334, 374, 410
மானிடப் பேறு 56
வாக்கின் வைபவம்.... 135
விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் பெருமை 416
வேதாந்தாசார்யனும் வேதாந்தோபதேச வைலக்ஷண்யமும் 89
வேனிற் கனவு 387

வைஷ்ணவி விஜயம் 271, 311, 339
ஜ்ஞாந தாநம் 15, 46
ஸாரதமம் 358
ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமி வைபவம் 3
ஸ்ரீ அழகிய சிங்கருடைய பட்டாபிஷேக வ்ருத்தாந்தம் 18
ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய யாத்ரோத்ஸவம் 69
ஸ்ரீ ஜயந்தி உத்ஸவம் 425
ஸ்ரீரங்க வண்சடகோப யதீந்த்ர மஹாதேசிக விஜய விம்சதி 173
ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீரங்க சடமதநாஷ்டகம் 219
ஸ்ரீ பாஞ்சராத்ரங்கள் 244
ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் விஷயமான
அந்தாதியின் பதவுரை 278, 308, 354, 383
ஸ்ரீந்ருஸிம்ஹ ஜயந்தீ 350

ஸம்பாதகரின் குறிப்புக்கள் :

அஹிம்ஸையின் உண்மை 31
ஆசார்யர்களுள் அபிப்ராய பேதங்களும் ஸமாதாநமும் 103
ஆசார்யர்களின் ஸாமரஸ்யம் 144
ஓர் மஹோத்ஸவம் 406
கலியின் கொடுமை 30
கோரமான யுத்தம் 293
சாஸ்த்ர பாடசாலா ஸ்தாபநமும் அதன் முறையும் 101, 102
த்வேஷமும் மோக்ஷ ஸாதநமாகுமோ ? 327
பகவானுடைய மோஹநேச்சை 252
பகவானுடைய விசித்ர சேஷ்டிதங்கள் 332
வேதாந்தரக்ஷாமணி விமர்சம் 370
வைராக்ய பஞ்சகம் 444
ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய யாத்ரோத்ஸவம் 63
ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையின் அப்த பூர்த்தி 442
ஸ்ரீஹம்ஸ ஸந்தேசம் 64
ஸ்ரீ மதுராந்தகம் பாடஸாலா க்ருஹப்ரவேஸம் 443
ஸ்ரீ மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத பாடசாலை 143, 182, 224, 251
ஸ்ரீ அழகிய சிங்கருடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் 292
ஸ்ரீ அழகிய சிங்கரின் ஜைத்ர யாத்ரை 405
ஜகத்தின் க்ஷோபம் 181
ஜீவன்களின் ப்ரதம ப்ரவ்ருத்தி.... 183
ஷடசீதி ஸங்க்ரமணம் 226



𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 1	சித்ரபாநு ௵ கார்த்திகை - மார்கழி ௴	ஸஞ்சிகை 12

"𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 |
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ||"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆஶாஸந அநுஶாஸநங்கள்

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 |
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ||
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 |
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

பாசுரங்களின் பகுதி

அமலனாதிபிரான்

[வித்வான் ஸ்ரீ உப. ஏ. வி. கோபாலாசார்யர், எம். ஏ., பி. எல்.]

[ஸஞ்சிகை 11 : பக்கம் - 377 தொடர்ச்சி]

10. கொண்டல் வண்ணனைக் கோவல னாய்வெண்ணெ
யுண்ட வாயனென் னுள்ளங்க வர்ந்தானை
அண்டர் கோனணி யரங்கனென் னமுதினைக்
கண்ட கண்கள்மற் றொன் றினைக் காணாவே.

முதல் ஒன்பது பாசுரங்களும் ஜ்ஞாந ஸாக்ஷாத்காரம். இப் பாசுரம், 'லோக ஸாரங்க மஹாமுனிகள் தோள் தனிலே வந்து புகுந்து விண்ணப்பஞ் செய்கிறார்' என்று பிள்ளை. அப்படியே நாயனாரும். முன் பாசுரங்கள் காவிரி நடுபால் மாநஸாநுபவ மென்றும், 'ஶ்ருணுஷ்வ ஹரிஶ்ரேஷ்ட' என்ற க்ரமத்தில் இவரை மாமுனியைக் கொண்டு தருவித்து, இவருக்குக் காட்சி தந்து, இவர் இன்புற்றுப் பாடி முத்தி பெற்றாரென்று பணித்தார். 'பின்பு பரமபதத்திலே பெறும் பேற்றை இங்கே பெரியபெருமாள் திருவருளாலே பெற்று, இப்பேற்றை அடிதொடங்கி அமலனாதிபிரான் முதலான பத்துப் பாட்டாலே அநுபவ பரீவாஹமாக அருளிச்செய்கிறார்' என்று தொடக்கத்தில் போகம். இவ்வாழ்வார் ஸஹஸ்ரநாம த்யாந ஶ்லோகங்களைத் திநமும் அநுஸந்தித்திருப்பார் போலும். 'பேரு மோராயிரம் பலபல வுடைய வெம்பெருமான்' என்றதை அநுஸரித்து மாநஸ ஸஹஸ்ர நாமார்ச்சநை. 'நாமமொன்று மோராயிரமாம்' என்றபடி ஸஹஸ்ர குணிதோத்தர க்ரமமாக அநுபவம் பெருகும்.

'ஶாந்தாகாரம்' என்றதை 'அமலன்' என்றும், 'புஜகஶயநம்' என்றதை 'அரங்கத் தரவி னணையான்', 'அரவி னணைமிசை மேய மாயனார்' என்றும், 'பத்மநாபம்' என்றதை 'அயனைப் படைத்ததோ ரெழிலுந்தி மேலதன்றோ' என்றும், 'ஸுரேஶம்' என்றதை 'விண்ணவர் கோன்', 'துண்டவெண் பிறையன் துயர்தீர்த்தவன்' என்றும், 'விஶ்வாதாரம்' என்றதை 'அண்ட ரண்ட பகிரண்டத் தொருமாநில மெழுமால் வரை முற்றும் உண்ட கண்டம்' என்றும், 'ககநஸத்ருஶம்' என்றதை 'அமலன்', 'நீதிவானவன்' என்றும், 'மேகவர்ணம்' என்றதைக் 'கொண்டல் வண்ணனை' என்றும், 'ஶுபாங்கம்' என்றதை 'முடி

வில்லதோ ரெழில் நீலமேனி' என்றும், 'ருக்மாபம்' என்றதைத் 'திருவார மார்பு' என்றும், 'கமலநயநம்' என்றதைப் 'புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி' என்றும், 'யோகிஹ்ருத்த்யாநகம்யம்' என்றதை யோகத்தால் ஸாக்ஷாத்கரிப்பதான பல பாசுரங்களாலும், 'ஸகலபய ஹரம்' என்றதைப் 'பாரமாய பழவினை பற்றறுத்து' என்றும், 'வந்தே' என்றதை 'என்னைத் தன் வாரமாக்கி', 'என்னைப் பேதைமை செய் தனவே' என்றும் துதிசெய்யும் முழு ப்ரபந்தத்தாலும், 'மேகவர்ணம்' என்றதை 'நீலமேனி', 'கொண்டல் வண்ணனை' யென்றும், 'பீதகௌ ஶேயவாஸம்' என்றதை 'அரைச் சிவந்த வாடை', 'அந்திபோல் நிறத் தாடை' என்றும், 'ஸ்ரீவத்ஸாங்கம்' என்றதை ஸ்ரீவத்ஸாங்கம்ஶ ரான தம்மை 'என்னைத் தன் வாரமாக்கி வைத்தான்', 'அரங்கத் தம்மான் திருவார மார்பதன்றோ' என்றும், 'கௌஸ்துபோத்பாஸி தாங்கம்' என்றதைக் 'கோலமா மணியாரமும் முத்துத் தாமமும் முடி வில்லதோ ரெழில் நீலமேனி' என்றும், 'புண்யோபேதம்' என்றதை 'என்னுள் புகுந்தான் கோர மாதவம் செய்தனன் கொல் அறியேன்' என்றும், 'புண்டரீகாயதாக்ஷம்' என்றதை 'நீண்ட வப்பெரியவாய கண்கள்' என்றும், 'ஸர்வலோகைகநாதம்' என்றதை 'அண்டர் கோன்' என்றும், 'விஷ்ணும்' என்றதை, 'விஷ்ணும் க்ராந்தம் வாஸு தேவம் விஜாநந்', 'விஷ்ணோர்நுகம் வீர்யாணி' என்றபடி 'உலக மளந்து அண்டமுற நிவந்த நீண்முடியன்' என்றும் பாடியுள்ளார். 'அம லன்' என்றது, 'ஶாந்தாநந்தமஹாவிபூதிபரமம் யத் ப்ரஹ்மரூபம் ஹரே:', 'அவிகாராய ஶுத்தாய' என்றும் ஸ்வரூபம். 'ஶாந்தம்' 'அமலம்' என்று தொடங்கி, 'அண்டர்கோன்' 'ஸர்வலோகைகநாதம்' என்று முடிந்தது; 'என் கண்ணி னுள்ளன' என்று தொடங்கி, 'என் கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்று முடிவு. முதலில் அயோக வ்யவச்சேதம்; முடிவில் அந்யயோக வ்யவச்சேதம்.

கோண்டல் வண்ணனை—(1) மேக வர்ணன்; மேக ஸ்வபாவன். 'மேக நியாயற்கு' என்று நம்மாழ்வார் அநுபவம். (2) 'க்ஷீரார்ணவ ஶயாநோ ப்யவ ஸ்பீதஶ்யாமோதமேக:' என்றதை உதாஹரித்தனர் பிள்ளையும் நாய னாரும். 'கடலிலுள்ள நீரெல்லாம் வாங்கிக் காவேரீ மத்யத்திலே படிந்த தொரு காளமேகம்போலே கண்டார்க்கு ஶ்ரமஹரமான திருமேனி யுடையவனை' என்று போகம். காவிரி நடுபால் வேதகிரி ஶ்ருங்கமான ப்ரணவ ரங்கத்தில் படிந்துள்ள மேகமென்று திருவுள்ளம். 'ஆதிமறை யெனவோங்கு மரங்கத்துள்ளே யருளாருங் கடலைக்கண் டவன்நம் பாணன்' என்று பாடியது, 'ஓத வண்ணன்' என்பதை நினைத்தது. அருளாருங் கடல் முழுவதையும் உறிஞ்சின மேக மென்றும் திருவுள்ளம். அகஸ்த்ய ஸேவிதமான தமிழ்நாட்டில் அகஸ்த்ய துல்ய ஸ்வபாவமாக

ஸமுத்ரத்தை முழுவதும் பாநம்செய்த ஓர் கொண்டல். 'ஆராத வருளமுதம் பொதிந்த கொண்டல்.' அருட்கடலேச் சுளகீகரித்து உட்கொண்ட கொண்டல். (3) 'ஜல ஸ்தல விபாகமறக் காருண்ய ரஸத்தை வர்ஷிப்பதொரு காளமேகத்தின் ஸ்வபாவத்தை யுடையவ னென்னவுமாம்' என்றும் போகம். 'மேகங்கள் ஸமுத்ர ஜலத்தை வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராக வர்ஷிப்பதுபோல' முத்திபெறும் ஞானிகளுக்குச் சூழ்ந் தகன் ருழ்ந்த முடிவில் பெரும் பாழெல்லாம் தன் ஆநந்த ஸ்வபாவ வ்யாப்தமாகி இனிக்கும்படி இன்ப ரஸத்தை வர்ஷிக்கும் கொண்டல். அமுதாகிய தனது இன்ப ரஸ வ்யாப்தமாக விஸ்வத்தையும் இனிக்கச் செய்யும் முத்திப் பேரின்பம் பெறும் அவஸரம். உப்பு நீரெல்லாம் கங்கை நீராயும் காவிரி நீராயும் ஆவதுபோல், ஹேய விரஸ துக்கமய ப்ரக்ருதிப் பாழெல்லாம் சுடர்ஞான வின்பமாய் அநுபவிக்கப் போகும் தருணம். இங்கே பூம வித்யையில் ஶ்ருதி மகிழ்ந்து பாடிய அநுபவம் வரப்போகிறது. (4) க்ருஷ்ண மேகம்—க்ருஷ்ண மேகத்தைக் கண்ட மயில்கள் மேகமென்றே நினைத்து ஆடின வென்ருர் சுகர். 'கமலக்கட் கனிவாய்க் காளமேகத்தை யன்றி மற்றென்றிலங் கதியே' என்று பரமபதம் செல்லும் பத்தாம் பத்துத் தொடக்கப் பாசுரம். (5) 'கஷ்யாணஃ காலமேவோ ஹவதூ ஶஶமதி ஷ்லாதகா நதஷ்யஹ்ரேத்தஃ' என்றபடி இக் கொண்டலேயே தனக்குத் யாரக ரஸ ப்ரதமாகக் கொண்ட வாதக வ்ருத்தி ஸூசிக்கப்படுகிறது. (6) 'ஸாம உஜ்வயொஷவள ஹமழ' என்று சுகர் அநுபவம். (7) 'கண்ணனையே கண்டுரைத்த கடிய காதல்'. தீவ்ர க்ருஷ்ண த்ருஷ்ண தத்வமே வடிவெடுத்து உதித்தவர் இவ்வாழ்வார். 'கடிய காதற் பாண்பெருமாள்.'

கோவலனுய் வெண்ணேயுண்ட வாயன்—(1) 'கொண்டல் வண்ணனை' என்றதால் மட்டும் 'கண்ணன்' என்று நிச்சயம் ஏற்படாது. 'கோவலன்' என்று ஸம்ஶயமறக் கண்ணனைக் குறிக்கிருர். "கஜகாமெதூ ஶாஶவஷ்ரநுஶூக்ஷாகஶெஷவாம| யஃ வ்யாதிவஶஹாவம யாதிநாஷ்யத்ருவஸம்ஶயஃ" என்று பாடியதை நினைக்கிருர். 'கோவலனும் கோமானு மானவந்நாள் குரவைபுணர் கோவியர்தம் குறிப்பே கொண்டு'. வோரமான ப்ரஹ்மசர்ய வ்ரதம் அநுஷ்டித்த பீஷ்மர் தம் அந்திம ப்ரயாணவஸத்தில் "ஜஷிதமதிவிஸாஸவஷூஹாஸவ்யணயநிரீக்ஷண கஷ்பிதொராஶாநாஃ| க்ருதகீநூக்ருதவத்ய உஷ்டாநாஃ ப்ரக்ருதிமஹநுகிஃயஸ்ய ஹொவவஷ்ஃ"|| என்று கோபிகள் அநுபவத்தை ரஸித்தார். (2) 'பெஷேதஹூஜமமஶயநெஷஹஹாஹூஜமமஃ' புஜங்கத்தின் (பாம்பின்) மேல் ஒரு மஹாபுஜங்கம். ப்ருந்தாவநத்தில் வ்ரஜஸுந்தரிகளே ஸ்வவஶ மாக்கின அந்த மஹாவிடனே சயநித்திருக்கிருர் என்று ஸ்வாமியின் ரஸப்ரதர்சநம். (3) 'வெண்ணெய்' என்பது, உருகத் தொடங்கும் நவநீதம் போன்ற ஹ்ருதய மென்பர். 'ஹொவீஶநாம்ஷி

நவநீதசௌர்யோஷி:' என்று அதிமாநுஷஸ்தவத்தில் ஆழ்வான் ப்ரஶ்நம். கோபியர் மனத்தைத் திருடினுயோ? நவநீதத்தைத் திருடினுயோ? ஹ்ருதயம் உருகத் தொடங்குகையிலேயே திருடிவிடுகிருர். 'தடுவ ஜஷாதி'; 'என்னுள்ளம் கவர்ந்தானை' என்ற அடுத்த வார்த்தைகளால் ஆழ்வார் இக்கருத்தை ஸ்பஷ்ட மாக்குகிருர். (4) இப்பொழுதும் பெரிய பெருமாள் திருவாயில் வெண்ணெய் மணக்குமென்று பிள்ளை. பரிவுட னுண்ட நவநீதம் நித்ய நவம்.

என்னுள்ளம் கவர்ந்தானை—(1) என் மனத்தை ஆசைப்பட்டு அந்நம்போல் உண்டான். இங்கே ஆழ்வார் ஆநந்தமாக முக்த ஸாம கீதம் பாடுகிருர் 'ஹாவுஹாவுஹாவு' என்று. 'எனக் காரா வமுதா யெனதாவியை யின்னுயிரை மனக்காராமை மன்னி யுண்டிட்டாய்' என்று கடைசித் திருவாய்மொழியில் ஆழ்வார் முக்த காநம். 'தம்முடைய ஆத்மாவதியான அநந்யாநுபவ ரஸத்தை முக்தனுடைய ஸாமகாநத்தின்படியிலே பாடி க்ருதார்த்தராகிருர்' என்று இந்தப் பாசுரத்திற்குப் போகத்தில் அவதாரிகை. 'என்னின் முன்னம் பாரித்துத் தானென்னை முற்றப் பருகினன்' என்றபடி தான் முன்பு தனக்குப் ப்ரிய மான ஆத்மாவை உண்ணும் ஸ்வபாவம். அவனுண்டு இனிப்பேற்றி நம்மை உண்ணச் செய்யும் காந்தன். ஆநந்தவல்லியும் 'ஹாவு' என்பதை முதலில் பாடிப் பிறகு 'ஹாவு:' என்று பாடிற்று. ஞானியான முக்தனைப் பதியாகிய பரமாத்மா முன்பு புஜிக்கிருன். நம் ஸ்வரூபமும் நமக்குப் போக்யமே; அதுவும் பரமாத்ம சேஷமாக அவன் புக்த சேஷமாக ப்ராப்யமான இன்பத்தில் சேர்ந்ததே. 'ஹாஂஸஷு ஷஸோமவிஷு வதிஸோமஶெஷு' என்கிற க்ரமத்தில் சேஷியான அவன் உண்டதை அவன் புக்த சேஷமாக நாம் உண்ணவேணும். பரமாத்மாவுக்குத் தம் ஸ்வரூபமும் போக்யமே. அவனுல் புஜிக்கப்படுமவன் ஸ்வரூபத்தையும் அப்படியே பதிபோக சேஷமாக நாம் புஜிப்பது. அவன் புஜிக்கும் போகம் நமக்கு அநுக்ருதியாய் ப்ரதிபிம்பிதம்போல் அப்படியே ஸங்க்ரமிப்பது. அவன் போகமே ப்ரதிபலித்து ஸங்க்ரமிப்பதால் போகம் ஸமாநமே. ஆனுல் அவன் போகம் மூலம்; முக்தனது போகம் அதை மூலமாக உடையது. 'ஜநாஸ்ய தெஷலஹூவ' என்கிற ஸூத்ரத்தை ஸூத்ரகாரர் ஸூசித்தார். நம்முடைய பதி ஜாயா புத்ர வித்தாதிகளெல்லாம் தரும் ஸுகம் பரமாத்மாவான விஸ்வபதிக்கே போக்யமென்று நாம் அநுஸந்தித்து அவனுக்கு அர்ப்பித்துவிடவேணும். அவன் புஜித்து அவன் போக சேஷமாக நமக்கு இன்ப ரஸம் பெருகவேணும். 'ஆத்மநஸ் காமாய' என்கிற ஶ்ருதி 'பரமாத்மாவின் போகத்திற்காக நம்முடைய ப்ரிய வஸ்து போகங்களெல்லா மென்கிற ப்ரதாந பலித்வ சாஸ்த்ரார்த்தத்தையும் உட்கொண்டது. அவன் ஆசைப்பட்டு அவன் ஸங்கல்பத்தால் நம்மிடமுள்ள ஆசையால் வஸ்துக்களை நமக்கு ப்ரியமாகச் செய்கிரு னென்னும் ரஸப்பொருளு முளதே.

'அஹமந்நாத:' என்கிற ஸ்ருதியின் க்ரமமும் பதிபோக சேஷமான போக ரஸத்தைக் காட்டுகிறது. இங்கே இப்பாசுரத்திலும் 'வெண்ணெயுண்ட வாயன் என் னுள்ளம் கவர்ந்தான்' என்று முதலில் பாடிப் பிறகு, 'என் னமுதினைக் கண்ட கண்கள்' என்று தம்முடைய கண்களாலார ஆராவமுதைப் பருகிப் பேரின்ப லயம் பெறுவதைப் பாடுகிறார்.

அண்டர்கோன்—(1) இடையர் சேரியில் வெண்ணெ யுண்ட கோவலனே அண்டர் கோன்; விஸ்வபதி. (2) கோபாலக் கோனே அண்டர்கோன். (3) அண்டாதிபதிகளின் கோன். (4) அவனே விண்ணவர் கோன்; அயர்வறு மமரர்க ளதிபதி.

அணி யரங்கன்—(1) இப்ரக்ருதி மண்டலத்திற்கு அணி - அலங்காரம் - அரங்கம். (2) 'ரதிம் கதோ யதஸ்தஸ்மாத் ரங்கமித்யுச்யதே'. பாற்கடலிலும் ஸூர்யமண்டலத்திலும் மேற்பட்டு, அரங்கத்தில் மிக்க ரதியை அடைவதால் ரங்கமென்று திருநாமம். ப்ரணவத்திலு மினிய ஆயதநமில்லை. 'ஸதேதேநைவ ஸ்யதநே'. அரங்கம் மிகவினிய ஆயதநம். ஆரா வாயதநம்.

என் அமுதினை—(1) பரமாத்மாவிடம் மமத்வபுத்தி. 'அகிலஜகத் ஸ்வாமிந்; அஸ்மத் ஸ்வாமிந்'. (2) இவ்வமுது ஆராதவமுது என்று அடுத்த அடியால் விளங்குகிறது. (3) கோலமலர்ப் பாவைக்கு அன்பாவதுபோல, முக்தனுக்கும் இன்பம் பயப்பது. (4) தேவர்கள் விரும்பும் அமுதமல்ல.

கண்ட கண்கள்—(1) இவ்வமுது கண்களால் பருகுவது. 'லோசநாப்யாம் பிபந்நிவ', 'ஏததேவாம்ருதம் த்ருஷ்ட்வா த்ருப்யந்தி' 'ஸதா பஶ்யந்தி ஸூரய:' என்று ஸர்வ காலமும் கண்களுக்கு ஆராத அநுபவமாயிருப்பது. (2) இந்தக் காட்சி பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம். (3) 'தவாம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே நிவேஶிதாத்மா கதமந்யதிச்சதி' என்று முதலடியில் தேன்பெருகும் தாமரைத் திருவடிகளில் மனம் லயித்தவர் மற்றொன்றை எப்படி விரும்புவார் என்று கேட்கப்பட்டது. பின் பாதியில் தேன் நிரம்பிய தாமரையில் உட்கார்ந்திருக்கும் வண்டு மற்றொன்றினைக் காணாதே என்று கூறப்பட்டது. இங்கே முதல் பாசுரத்தில் 'திருக் கமலபாதம் என் கண்ணி னுள்ளன' என்ற திருக் கமல பாதாநுபவத்தைப் பாடி, முடிவில் 'இவ்வமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்று பாடியுள்ளது.

மற்றொன்றினைக் காணாவே—(1) 'யத்ர நாந்யத் பஶ்யதி நாந்யச்ச்ருணோதி நாந்யத்விஜாநாதி ஸ பூமா' என்ற பூம வித்யையின் அநுபவம். 'உத்க்ருஷ்டதாம் நயநயோர்விஷயாந்தராணாம்' என்றதும் இதைப்பற்றி. (2) பரமாத்மாவின் விசேஷணமாக அவ

னின்று தனிமையில்லாத ஓர் அவிபக்தப் பொருளாய்ப் பரமாத்மாவின் ஆநந்த ஸ்வபாவ முடையதாய் விஸ்வம் முழுவதையும் அநுபவிப்ப துளதே. 'न दृष्टेर्द्रष्टारं पश्येः' 'द्रष्टृत्वम्' (2) 'காண்பனவு முரைப்பனவும் மற்றொன்றின்றிக் கண்ணனையே கண்டுரைத்த கடியகாதல் பாண்பெருமாள்'. காண்பதெல்லாம் அவனின்றி வேறில்லாத தென்ற தத்வாநுபவம். எல்லாம் ப்ரஹ்மாத்மகமாக ப்ரஹ்மாநந்யமாக ப்ரஹ்ம ஸ்வபாவமான ஆநந்தமயமாக அநுபவிக்கும் முக்தி தசை கைகூடுவதைப் பாடி ஒய்கிறார். 'ஏ, ஏ, ஏ, ஏ' என்று திருவாய்மொழி கடைப் பாசுரம் முடிந்தது. 'ஹாவுஹாவுஹா' என்பது போல அவ்யக்தமான ஆநந்த காரமென்பர். இங்கும் 'ஏ ஏ' என்று முடிவு. 'तादृशं वाङ्मनसापरिच्छेद्यं ज्ञानबलैश्वर्यवीर्यशक्तितेजसां | सदाजनैश्वर्यविशिष्टानवधिकातिशय सुखस्वरूपं ब्रह्मानुभवन् तदानुभवविपश्यति, ऊर्ध्वं च न पश्यति' என்று ஸ்ரீ பாஷ்யத்தில் பூம வித்யா ப்ரதர்சநம். (3) 'पश्यसूर्यादीनां नाशे नानुपश्यति'. (4) த்ருதராஷ்ட்ரருக்குத் துர்யோதந ஸபையில் விஸ்வரூப ஸேவையைக் காணக் கண்ணனவர் கேட்காமலே கண்களை அநுக்ரஹித்தார். விரும்பினல் கண்கள் அப்படியே யிருக்கலாம் என்று கண்ணன் கூறியதும், 'त्वाऽहं दृष्ट्वा नान्यं सन्द्रष्टुमिच्छे' 'உம்மைக் கண்டு நான் உளனுகி யுளன். மற்றொன்றினையும் காண மனமில்லை.' என்றார். (5) 'रामं मेघश्यामं दृष्टिर्दृष्ट्वापि न निवर्तते' அங்கே கண்களுக்கு ராமனிடமிருந்து மீளாமையென்கிற அநாவ்ருத்தி காட்டப்பட்டது. அந்த க்ரமத்தில் இங்கும் அநாவ்ருத்தியைக்கொண்டு சாரீரகத்தின் முடிவுபோல் கொள்ளலாம். (6) 'குரவைபுணர் கோவியர் தம் குறிப்பேகொண்டு சேவலுடன் பிரியாத பெடைபோற் சேர்ந்து தீவினையோர் தனிமையெல்லாந் தீர்ந்தோம் நாமே'. 'காவலனும் கணவனுமாய்க் கலந்து நின்ற காரணனைக் கருத்துறநாம் கண்ட பின்பு'. கணவனுக்கும் பத்நிக்கும்போன்ற அவிபாகம். அப்ருதக்த்வம். தனிமை என்பது ப்ருதக்த்வம். 'நேசஞ்செய் துன்னோ டென்னை யுயிர் வேறின்றி யொன்றாகவெ கூசஞ்செய்யாது கொண்டாய்'. ஸூத்ரகாரர் ப்ராப்தியில் அறுதியிட்ட 'अविभागेन'. 'ஆதிமறை யெனவோங்கு மரங்கத்துள்ளே யருளாருங் கடலைக்கண் டவனம்பாணன் ஓதியதோ ரிருநான்கு மிரண்டுமான வொருபத்தும்'; 'பாண்பெருமா ளருள்செய்த பாடல்பத்தும் பழமறையின் பொருளென்று பரவுகின்றோம்'. ப்ரணவ ரங்கத்திற்குள் பாடிய பாடல். 'பழமறையின் ஸாரம்' என்று வேதாந்தவாரியர் நிஷ்கர்ஷம்.

அமலனுதிபிரான் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் பெருமை

[ஸ்ரீ உப. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், அம்பாள்புரம், புதுக்கோட்டை]

"श्रीमन्नपर्याप्तसुधासमुद्र श्रीशार्ङ्गपाणे जय चक्रहस्त।
श्रीभक्तिसारादिमुनीन्द्रचित्त पीयूषहेमाब्जरमापतेऽव ॥"

"तस्य पुत्रा दायमुपयन्ति सुहृदस्साधुकृत्यां द्विषन्तः पापकृत्याम्" என்கிற ஶ்ருதியின்படி, நம் முன்னோர்கள் செய்த ஸுக்ருத விசேஷமானது, நம்மை உலகில் அநேகராலும் மிகவும் மேன்மையானதென்று கொண்டாடப்படுகிற இந்த விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைச் சேர்ந்தவர்களாகச் செய்திருக்கிறது. அப்படியிருக்க: நாம் அந்த ஸித்தாந்தத்தின் கொள்கை என்ன வென்பதை அறியவேண்டியது அவஶ்யம். லோக ரீதியாக எவரும் அவஶ்யம் அநுஷ்டிக்கவேண்டிய காரியங்களுக்குள், தான் சார்ந்திருக்கும் ஸித்தாந்தத்தின் கொள்கை என்ன வென்பதை அறியவேண்டியதும் முக்யமானதாகும்.

பகுத்தறிவு என்பது ஜீவராசிகளுக்குப் பொதுவானாலும், அவற்றுள் மனிதன் சில கொள்கைகளைக் கடைப்பிடித்து அதன்படி நடக்கும் தன்மையுடையவனாதலால் அவன் ஜீவராசிகளுள் மேன்மைப்பட்டவனாகிறான். உலகில் அநேகமாக ம்ருக ப்ராயமாக இல்லாத எந்த மனிதனும், சில கொள்கைகளோடு கூடிய ஏதாவது ஒரு மதத்தைச் சேர்ந்தவனாகவே இருப்பான். நாஸ்திகவாதம் செய்கிறவர்களும்கூட நாஸ்திக வாத மதத்தைச் சேர்ந்தவர்களே.

மேலே சொன்ன விஷயம் மனித வாழ்க்கைக்குப் பொதுவாயிருக்க, பாரத நாட்டைப் பற்றியவரைக்கும் பல மதங்களைச் சேர்ந்தவர்கள் அநேகர் இருந்தாலும், தக்ஷிணத்தில் ப்ரபலமாக விளங்கும் ஹிந்து ஸித்தாந்தங்கள், அத்வைதம் விசிஷ்டாத்வைதம் த்வைதம் என்ற மூன்றுதான். தக்ஷிணத்தில் ஹிந்துக்கள் அநேகம் ஸமூஹங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், எல்லாம் இந்த மூன்றில் அந்தர்க்கதங்களே. இப்படி நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஸித்தாந்தத்தைச் சேர்ந்தவரானாலும், யாரையாவது ஒருவரை நோக்கி, 'நீர் எந்த ஸித்தாந்தத்தைச் சேர்ந்தவர்?' என்றால், 'நான் அத்வைதி; விசிஷ்டாத்வைதி' என்று சொல்லி, அதற்கு அறிகுறியாகத் தம் திர்யக் புண்ட்ரத்தையாவது ஊர்த்வ புண்ட்ரத்தையாவது காட்டுகிறாரே யொழிய, அநேகர் தமது மதத்தின் கொள்கை என்னவென்பதை அறிந்தவர்களாகக் காணப்படவில்லை. வாஸ்தவத்தில் திர்யக் புண்ட்ரமாவது ஊர்த்வ புண்ட்ரமாவது

தரித்துக்கொள்வதோடு மாத்ரம் அந்தந்த மதத்தின் கொள்கை நின்று விடவில்லை. ஊன்றிப் பார்த்தால் இந்த மதங்களெல்லாம் உயர்ந்த தத்வங்களோடு கூடியவையா யிருக்கின்றன. ஆனதால், யாரா யிருந்தாலும், தான் சார்ந்திருக்கும் மதத்தின் தத்வம் என்னவென்பதை சக்த்யாநுஸாரம் அறிந்திருக்க வேண்டியது அவஶ்யம்.

அவற்றில் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைச் சார்ந்த நாம், அதன் தத்வங்களைக் கவனித்து, மற்ற மதங்களைவிட இதுவே மிகவும் பெருமை வாய்ந்தது என்கிற முடிவுக்கு வருவதற்கு, அதைப்போலுள்ள மற்ற சில மதங்களின் ப்ரக்ரியைகளை என்னவென்று தெரிந்துகொள்வது நலம். அவற்றைச் சற்றுக் கவனிப்போம்.

வெகு காலத்துக்கு முந்தி ப்ரத்யக்ஷமொன்றுதான் ப்ரமாணமென்றும், கண்ணுக்குத் தெரியாததெல்லாம் இல்லை யென்றும், பரலோகமே கிடையாதென்றும், "**किण्वादिभ्यो मदशक्तिवत्**" வெற்றிலை பாக்கு சுண்ணும்பு இம்மூன்றையும் சேர்த்து உபயோகித்தால் எப்படி சிவப்பான நிறம் மதம் இவைகள் உண்டாகின்றனவோ, அப்படி பூமி ஜலம் தேஜஸ் வாயு இவைகள் சேர்ந்தால் சரீரம் முதலியவை ஆகி, அதற்குத் தக்கபடி பேச்சு முதலான தன்மைகள் உண்டாகின்றன வென்றும், அவை தனித்தனியாகப் போய்விட்டால் ஆத்மா சரீரம் என்கிற எதுவுமில்லாமல் போய்விடுகிறதென்றும்,

"**अहं स्थूलः कृशोस्मीति सामानाधिकरण्यतः।**
देहस्थौल्यादियोगाच्च स एवात्मा न चापरः॥"

"**अग्निरुष्णो जलं शीतं शीतस्पर्शात्तथाऽनिलः।**
केनेदं चित्रितं तस्मात् स्वभावात्तद्व्यवस्थितिः॥"

"**न स्वर्गो नापवर्गो वा नैवात्मा पारलौकिकः।**"

*　　　　*　　　　*　　　　*

"**यदि गच्छेत् परं लोकं देहादेव विनिर्गतः।**
कस्माद्भूयो न चायाति बन्धुस्नेहसमाकुलः॥"

*　　　　*　　　　*　　　　*

"**भस्मीभूतस्य देहस्य पुनरागमनं कुतः॥**"

என்று இம்மாதிரியாகப் பலவிதமாக சார்வாகர்கள் சொல்லி வந்தது போல அநேக மதங்கள் தலைத்தோங்கி வந்தன.

பிறகு ஸ்ரீ சங்கராசாரியர் "**स्मृतिः प्रत्यक्षमैतिह्यमनुमानश्चतुष्टयं**" என்கிற ஶ்ருதிப்படி ப்ரத்யக்ஷம் அநுமாநம் ஆகமம் முதலியவைகூட ப்ரமாணமென்றும், ஷை ப்ரமாணங்களால் ப்ரத்யக்ஷத்துக்குத் தெரியும் வஸ்துவைவிட அப்ரத்யக்ஷமான வஸ்துக்கள்கூட உண்டென்றும், ப்ரத்யக்ஷத்துக்குத் தெரியும் இந்த சரீரத்தைவிடக் கண்ணுக்குப் புலப்

படாத ஆத்மாவென்பது ஒன்று உண்டென்றும் உபபாதித்தார். அந்த ஆத்மாவும்,

“न भूमिर्न तोयं न तेजो न वायुर्न खं नेन्द्रियाणां न तेषां समूहः।
अनैकान्तिकत्वात् सुमत्यैकसिद्धस्तदेकोऽवशिष्टश्शिवः केवलोऽहं॥”

என்று ஆத்மாவானது பூமியு மல்ல; ஜலமு மல்ல; தேஜஸ்ஸு மல்ல; வாயுவு மல்ல; இவைகளின் சேர்க்கையு மல்ல; இவைகளைத் தவிர்த்து வேறானதாகும் என்றும் உபபாதித்தார்.

ஸூத்ர பாஷ்ய மெனப்படும் சங்கராசார்யரால் எழுதப்பட்ட ப்ரஹ்மஸூத்ர பாஷ்யத்தின் ப்ரகாரம், ‘ஸத்’ என்பது ஒன்றுதான் ஸத்ய மானதென்றும், அதுவும் புத்திக்கும் கண்ணுக்கும் புலப்படாததென் றும்; “**अवचनेन प्रोवाच**” என்கிறபடி அது **ज्ञेयं** அல்லவென்றும், கண் ணுக்குப் புலப்படும் ஜகத் “**मिथ्या**” என்றும், “**यद्दृश्यं तन्मिथ्या**” என் றும், ‘ஸத்’ என்னும் மெய்ப்பொருள் ஞான ஸ்வரூபமானது, ஸ்வயம் ப்ரகாசம் நிர்க்குணமானது என்றும் உபபாதித்தார். இதற்கு, “**सदेव सोम्येदमग्र आसीत् एकमेवाद्वितीयम्**” “**विज्ञानमानन्दं ब्रह्म, न दृष्टेर्द्रष्टारं पश्येः,**” “**नेह नानास्ति किंचन,**” முதலிய ஸ்ருதிகளை ப்ரமாண மாக எடுத்தார். ‘ஸத்’ எனப்படும் ப்ரஹ்மம் நிர்க்குணமானதென்று சொல்லப்படும்பக்ஷத்தில், ஜகத் எப்படி உண்டாயிற்று என்று கேட்கும் பக்ஷத்தில், சித் ரூபமான ப்ரஹ்மம் அநாதியான அவித்யையால் மறைக் கப்பட்டு அதனுல் ஜகத் மாதிரி தோற்றம் (**अध्यास**) உண்டாகிறது. இதற்கு ப்ரமாணமாக, எப்படி ஒரு பளிங்குக் கண்ணுடிக்கு எதிரில் ஒரு செம்பருத்திப் புஷ்பத்தை வைத்தால், அதன் காரணமாக அந்த ஸ்வயம் ப்ரகாசமான கண்ணுடி சிவப்பாகத் தோற்றுகிறதோ, (வாஸ்த வத்தில் சிவப்பு முதலிய தர்மங்கள் கண்ணுடியி லிருக்கவில்லையோ) அப் படியே ப்ரஹ்மம் ஸ்வயம் ப்ரகாசமானுலும் அவித்யையின் கார்யமாக உலகம் தோற்றுகிறதென்றும், இதற்கு ப்ரமாணமாக, “**अनृतेन प्रत्यूढाः। तमसा गूढमग्रे प्रकेतं; अज्ञानेनावृतं ज्ञानं तेन मुह्यन्ति जन्तवः। अनादिमायया सुप्तो यदा जीवः प्रबुध्यते।**” முதலிய ஸ்ருதி ஸம்ருதிகளை எடுத்துரைத்தார். இதன் கருத்து கீழே வரும் ஸ்லோகத்தால் வெகு அழகாக அபியுக்தர் களால் உபபாதிக்கப் பட்டிருக்கிறது.

“ब्रह्मैव सर्वं जगदेव मिथ्या जपाप्रसूनं स्फटिके यथा वा।
अज्ञानरूपं विविधं विभाति ज्ञाने ह्यविद्या विनिवर्तनीया”॥

அப்படிப்பட்ட ஸ்வயம் ப்ரகாசமான ப்ரஹ்மம் மாயா ஸம்பந் தத்தால் ஜகத்காரண ப்ரஹ்மமான ஈஸ்வரனுகவும், மாயையின் அவாந் தரமான அவித்யையின் ஸம்பந்தத்தால் ஜீவன் முதலிய ஜகத்தாகவும் தோற்றுகிற தென்றும் சொன்னுர். அப்படிப்பட்ட மாயா ஸம்பந்தத் தால் ஏற்பட்ட ஜகத்காரண ப்ரஹ்மம்தான் “**अथातो ब्रह्मजिज्ञासा**” என் கிறபடி கண்டுபிடிக்கத்தக்கது. அதுதான் ‘**उपास्यम्**’ என்றும் சொன்னுர்.

இப்படி அவித்யா ஸம்பந்தத்தால் தேவ திர்யங் மநுஷ்ய ஸ்தாவ ரங்களாகத் தோற்றும் ஜீவன்களுக்குப் பக்வ காலத்தில் "**तत्त्वमसि**" என்கிற ஆப்தோபதேசத்தால் அவித்யை நீங்கி ஸ்வஸ்வரூப ஜ்ஞாநம் ஏற் பட்டு விடுகிறதென்று,

"**अनाद्यविद्याविहृतिः प्रसाध्या यद्रज्जुसर्पादि विशेषबोधात् ।**
निवर्तते तत्त्वमसीति बोधात् जगत् विशुद्धा चितिरेव शेषा ॥"

என்கிற ஶ்லோகத்தால் உபபாதிக்கப்பட்டது. அப்படி ஸ்வஸ்வரூப ஜ்ஞாநம் ஏற்பட்டவன் உடனே முக்தனாகிவிடுகிறான். ஆனால் சரீரம் விழுந்துபோகும் வரை அவன் ஜீவன்முக்தன் என்று சொல்லப்படுகிறான். ஸ்வரூப ஜ்ஞாநம் வந்து முக்தனானவனுக்குச் சரீரம் உடனே விழுந்து விடவேண்டாமோ வென்றால், எப்படி ஒரு செடியின் வேரைக் களைந்து விட்டாலும்கூட மேலேயுள்ள கிளை இலை இவைகள் உடனே வாடாமல் கொஞ்ச நாழிகை கழித்து வாடுகின்றனவோ, எப்படி குயவன் சக்க ரத்தை ஒருதரம் சுற்றிவிட்டுப் பிறகு சுற்றுவதை நிறுத்தினாலும் அது கொஞ்ச நாழிகை சுற்றிக்கொண்டே யிருக்கிறதோ, அப்படி ஸ்வரூப ஜ்ஞாநம் வந்து முக்தனானாலும் அவித்யா ஸம்பந்தத்தால் ஏற்படும் சரீரம் கொஞ்ச நாள் கழித்து விழுகிறது.

பிற்பட்டு நம் பாஷ்யகாரர் இம்மாதிரியான கொள்கைகளைக் கண்டித்து, எந்த ஶ்ருதி ஸ்ம்ருதியைக் கொண்டு சங்கரமதம் ஸ்தாபிதம் செய்யப்பட்டதோ, அவைகளுக்கு ஸரியானபடி வ்யாக்யாநம் செய்து, இதர ஶ்ருதி ஸ்ம்ருதிகளைக் கொண்டும் ஸ்ரீ பாஷ்யம் எழுதி விசிஷ்டாத் வைத ஸித்தாந்தத்துக்குப் புத்துயிரளித்தார். "**विशिष्टंच तत् अद्वैतं**" என்கிற வ்யுத்பத்தியால் ப்ராப்தமானது '**विशिष्टाद्वैतं**' என்கிற பதம். அதன்படி ப்ரஹ்மம் ஒன்றேதான். அதுவும் சித் அசித் இரண்டையும் சரீரமாக வுடையது. அந்த ப்ரஹ்மமும் ஸகுணமானது என்று பின் வரு மாறு உபபாதித்தார். சங்ராசாரியரால் "**यद्दृश्यं तन्मिथ्या**" என்று சொன்ன பக்ஷம் தவறு என்றும், '**यद्दृश्यं तन्नाश्यं विकार्यं वा**' என்று 'எது கண்ணுக்குப் புலப்படுகின்றதோ அது பொய்யல்ல; ஆனால் நாச மடையத் தகுந்தது' என்று சொல்லித் தம் ஸித்தாந்தத்தைப் பின்வரு மாறு ஸ்தாபித்தார்.

ஜீவன், ப்ரக்ருதி, பரமாத்மா என்று தத்வ த்ரயம். பரமாத்மா ஸகல கல்யாணகுண விசிஷ்டன்; ஹேயப்ரத்யநீகன்; ஸர்வ நியந்தா; ஸர்வ பலப்ரதன்; எல்லாருக்கும் ப்ராப்யன். ஜீவன்கள் அநந்தமானவை. நித்ய ரென்றும் முக்தரென்றும் பத்தரென்றும் மூவகைப்பட்டவர்கள். ப்ரக்ருதி என்பது ஸத்வ ரஜஸ் தமஸ். மூன்றும் ஸமமான அவஸ்தையி லிருப்பது. ஜீவ தத்வமும் ப்ரக்ருதி தத்வமும் பரமாத்ம சரீரம். ப்ரக்ருதியானது எந் தப் பரமாத்ம இச்சையால் ஸ்ருஷ்ட்யுந்முகியாக ஆகிறதோ, அப்படி மூல

ப்ரக்ருதி, அவிக்ருதி, மஹத், அஹங்காரம் முதலான பலவிதமாக மாறுகிறது. ப்ரக்ருதியும் ஜீவனும் பரமாத்ம சரீரமென்று ஒப்புக்கொண்டால் சரீரத்துக்கு ஏற்படும் ஸுக துக்கங்கள் பரமாத்மாவுக்கு ஏற்படாவோ வென்றால், இல்லை; ஏனெனில்: ஸுக துக்கங்கள் என்பவை கர்மத்தால் ஏற்பட்ட சரீரத்துக்குத் தான்; கர்ம வஸ்யனு யில்லாத பகவானுக்கு இவை இல்லை. அந்தந்த ஜீவன்களின் அநாதி கர்மாவுக்குத் தக்கபடி ஸ்ருஷ்டி முதலியவற்றைச் செய்வித்துப் பகவான் விஹாரம் செய்கிறார். ஸ்வாபாவிகமான தர்ம பூத ஜ்ஞாநத்தோடு கூடிய பரமாத்மாதீநமான ஜீவன்கள் ஸ்வபாவத்தில் ஸ்வாதந்த்ரிய மற்றவர்களானாலும், பரமாத்மாவால் கொடுக்கப்பட்ட ஸ்வாதந்த்ரியத்தால் கர்மாவைச் செய்து, அதற் கநுகுணமாகப் பகவானால் கொடுக்கப்பட்ட பலத்தை யடைகிறார்கள்.

“ आदावीश्वरदत्तयैव पुरुषः स्वातन्त्र्यशक्त्या स्वयं
तत्तज्ज्ञानचिकीर्षणप्रयतनान्युत्पादयन् वर्तते ।
तत्रोपेक्ष्य ततोनुमत्य विदधत्तन्निग्रहानुग्रहौ
तत्तत्कर्मफलं प्रयच्छति पुनस्सर्वस्य पुंसो हरेः ”॥

ஜ்ஞாந ஸ்வரூபமான ஜீவன்களுக்குள்ள தர்மபூத ஜ்ஞாநம் அவரவர்கள் கர்மாவுக்குத் தக்கபடி ஸங்கோச விகாஸத்தோடு கூடியது. இவர்கள் இந்தக் கர்மாவைக் கடப்பதற்குப் பக்தி ப்ரபத்தி என்கிற இரண்டு உபாயங்கள்தான் உண்டு. **“तमेवं विद्वानमृत इह भवति”** இப்படி இவர்களுக்கு ப்ராப்யமாகிய பரமாத்மாதான் ‘**ब्रह्म**’ ப்ரஹ்ம சப்த வாச்யன். இவன்தான் “**अथातो ब्रह्मजिज्ञासा**” முதலிய ஸூத்ரங்களால் விசாரிக்கப்படுகிறான். இதுதான் நம் ஸித்தாந்த ஸங்க்ரஹம். ‘இந்த ஸித்தாந்தம் மற்றவைகளை விட எந்த விதத்தில் ஏற்ற மடைந்தது? இதில் ப்ரஹ்ம விசாரம் செய்திருக்கும் ப்ரகாரம், உபாயம், பலம்’ இவைகளைப் பின்வரும் ஸஞ்சிகையில் விசாரிப்போம்.

[தொடரும்]

பிழை திருத்தம்

9-வது ஸஞ்சிகையில் 300-ம் பக்கத்தில் ‘சரணாகதி’ என்னும் விஷயத்தில் உள்ள தலைப்பு ஸ்லோகத்தில் உத்தரார்த்தத்தில் காணப்படும் ‘ஷுவதிஸாயு ஜியெவொ யொ ராஜதெ தஷுவாஸஹெ’ என்பதை ‘ஷுவதிஜ வஸாயெயு யொ ராஜதெ தஷுவாஸுஹெ’ என்று திருத்திப் படிக்க வேண்டுகிறேன்.

—வி. ஸ்ரீ.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

சராசர முக்த்யுபாயம்

[ஸ்ரீ. உப. வே. ஈ. ஸ்ரீநிவாஸ தாதாசார்யர்]

ஸ்ரீரங்கநாத பாதுகாஸஹஸ்ரத்தில் நிர்யாதநா பத்ததியில்,

**“उपास्य वर्षाणि चतुर्दश त्वामुत्तारिकामुत्तरकोसलस्थाः ।
सनन्दनाद्यैरपि दुर्विगाहं सान्तानिकं लोकमवापुरग्र्यम्” ॥**

[வட கோஸல தேசத்திலிருந்த ஜநங்கள் பரம புருஷார்த்த ஸித்தோபாயமான உன்னைப் பதினான்கு வர்ஷங்கள் ஆராதித்து, ஸநக ஸநந்தநாதிகளுக்கும் கிடைப்பதற் கரியதான ஸாந்தாநிகம் என்கிற சிறந்த லோகத்தை அடைந்தார்கள்.] என்று ஸூக்தி இருக்கிறது. ஸ்ரீமத் ராமாயணம் உத்தரகாண்டம் 110-வது ஸர்க்கத்தில், ஸ்ரீராமன் ஸப்ராத்ருகனாய்த் தன் க்ருபா கடாக்ஷத்தால் ஜ்ஞாந க்ரியா சக்திகளுள்ள ஸ்தாவர ஜங்கமங்களுடன் மஹா ப்ரஸ்தாந விதிப்படி அயோத்தியை விட்டுப் புறப்பட்டு, அவகாஹநத்திற்காக ஸரயூ தீர்த்தத்தை ஸ்பர்சிக்கும்போது, ப்ரம்ஹா அந்தரிக்ஷத்தில் வந்து இருந்துகொண்டு ஸ்ரீராமனைப் பார்த்து, ‘இஷ்டமான ஸ்வகீய சரீரங்களில் நீரும் ப்ராதாக்களும் ப்ரவேசிக்க வேண்டும். அல்லது ஸ்ரீ விஷ்ணு அவதார குலஸ்தாநமான ஸ்ரீவைகுண்டத்தை அடையவேண்டும்’ என்று ஸ்தோத்ர பூர்வகம் தெரிவிக்க, அதைக் கேட்டு ஸ்ரீராமனும் ப்ராதாக்களும் வைஷ்ணவ சரீரத்தை எடுத்துக்கொண்டார்கள். பிறகு அந்த விஷ்ணு ப்ரம்ஹாவைப் பார்த்து, “என்னை ஸ்நேஹத்தால் பின்தொடர்ந்தவர்களும், என்னுடைய பக்தர்களும், என்னுடைய பிரிவைப் பொறுக்காமல் ப்ராணனை விட நிச்சயித்தவர்களுமான இந்த ஜனக் கூட்டங்களுக்கு நல்ல லோகம் கொடுக்கவேண்டும்” என்று சொல்ல, அப்ரம்ஹா விஷ்ணுவைப் பார்த்து, “உம்மோடு கூட வந்த இவர்கள் ஸந்தாநம் என்று பெயருள்ள உலகங்களை அடையப் போகிறார்கள். உம்மையே த்யாநம் பண்ணிக்கொண்டு உம்முடன் பக்தியுடன் ப்ராணனை விடும் திர்யக்கும் ஸத்ய ஸங்கல்பாதி ப்ரஹ்ம குணங்கள் உள்ளதும் ப்ரஹ்ம லோகத்திற்கு ஸமீபத்தில் உள்ளதுமான ஸந்தாந லோகத்தில் வஸிக்கப்போகிறது” என்று சொன்னார். பிறகு சராசரங்கள் ஸரயூ ஜலத்தில் மூழ்கி, தன் சரீரத்தைவிட்டு ஸந்தாந லோகம் சென்றதும் விஷ்ணு ஸ்ரீவைகுண்டத்தை அடைந்தார் என்று கதை விரிவாய் இருக்கிறது. இவ்விடத்தில் ஸ்ரீமஹேச தீர்த்தர் தம் வ்யாக்யாநத்தில் ‘தன் லோகத்தை அடைய விரும்புகின்ற ஜநங்களை ஸந்தாநம் என்று பெயருள்ள தன் லோகத்தில் சேர்ப்பித்து க்ரமமாகப் பரம

பதத்தை அடைவிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்ட தயாளுவான பகவான், தன் லோகத்தைக் காட்டிலும் உத்தமமான லோகத்தை அடைவித்தார் என்று ஸந்தோஷத்தை உண்டுபண்ணுவதற்காக உபேந்த்ர லோகத்தை அடைந்து தேஜோமயமான சரீரத்தை ப்ராதாக்கள் பரிக்ரஹிக்க, தேஜோமயமான உபேந்த்ர சரீரத்தைத் தான் எடுத்துக்கொண்டார்' என்றும், விஷ்ணு ப்ரஹ்மாவைப் பார்த்து, 'சராசரங்களுக்கு க்ரமமாக உன்னுடைய லோகம் சென்று ப்ரளய காலத்தில் உன்னோடுகூட மோக்ஷத்தை அடைவிக்கும் லோகத்தைக் கொடுக்கவேண்டும்' என்று தெரிவிக்க, அதன்படி ப்ரம்ஹா அநுமதி பண்ணினதாகவும், எதற்காக இம்மாதிரி இவர்களுடைய முக்தியின் பொருட்டு யத்நம் என்கிற சங்கையை பரிஹரிப்பதற்காக,

"इमे हि सर्वे स्नेहान्मां अनुयाता मनस्विनः।
भक्ता हि भजितव्याश्च त्यक्तात्मानश्च मत्कृते॥"

என்று விஷ்ணு ப்ரஹ்மாவைப் பார்த்துச்சொன்னதாகவும் எழுதியிருப்பதால், சராசரங்கள் நேராகப் பரமபதத்திற்குப் போகவில்லை யென்றும், வெகு காலம் சென்ற பிறகு அவ்விடத்திற்குப் போனதாகவும் தெரிகிறது. இவ்விடத்தில் கார்யாதிகரணத்திலிருக்கும் "ஸ்மருதேச்ச" என்கிற ஸூத்ரத்தின் ஸ்ரீ பாஷ்யத்தில் உதாஹரிக்கப்பட்டும் சதுர்முக லோகத்திலிருக்கும் யோகிகளைப் பற்றியதாக ஶ்ருத ப்ரகாசிகாசார்யரால் வ்யாக்யாநம் செய்யப்பட்டதுமான,

"ब्रह्मणा सह ते सर्वे संप्राप्ते प्रतिसञ्चरे।
परस्यान्ते कृतात्मानः प्रविशन्ति परं पदम्॥"

என்கிற ஸ்ம்ருதி வாக்யம் ஸ்ம்ருதிக்கு வருகிறது. ஸ்ரீ கோவிந்தராஜர் தம் வ்யாக்யாநத்தில், பகவான் ப்ரம்ஹாவைப் பார்த்து,

"एषां लोकं जनौघानां दातुमर्हसि सुव्रत"

என்று சொன்னதற்கு ஆதிவாஹிகனைக் கொடுக்கவேண்டும் என்று ஸாவவர்ணநம் செய்து, ப்ரஹ்ம வித்யை இல்லாத இவர்களுக்கு ப்ரஹ்ம ப்ராப்தி எப்படி என்ற சங்கையைப் பரிஹரிப்பதற்காக "भक्ता हि …………मत्कृते' என்று பகவான் ப்ரஹ்மாவிடம் சொன்னதாக எழுதி,

"लोकान्सन्तानकान्नाम यास्यन्तीमे समागताः"

என்கிற ப்ரஹ்ம வாக்யத்திற்கு ஸந்தாந லோகத்தை அடைந்து உம்முடைய லோகத்தை அடையப் போகிறார்கள் என்று விவரணம் செய்தார்.

"प्राणांस्त्यक्ष्यति भक्त्या वै तत्सन्ताने निवत्स्यति।
सर्वैर्ब्रह्मगुणैर्युक्ते ब्रह्मलोकादनन्तरे।"

என்கிற ஶ்லோகத்திலிருக்கும் "ബ്രഹ്മലൊകാദനന്തരെ" என்கிற பதத்திற்கு ப்ரஹ்ம லோகத்திற்கு ஸமீபமான மேல் தேசத்திலிருக்கிற என்று

வ்யாக்யாநம் செய்து, ஸ்ரீ பாஷ்யத்தில் ஜ்யோதிரதிகரணத்தில் காண்பிக்கப்பட்ட விஷய வாக்யத்தின் ஏகதேசமான **"सर्वतः पृष्ठेषु अनुत्तमेषूत्तमेषु"** என்கிற வாக்யத்தை ப்ரமாணமாகக் காட்டியிருக்கிறார். இவ்யாக்யாநப்படி சராசரங்களுக்குப் பரமபதம் போவதில் அதிக விளம்பமில்லை என்று தெரிகிறது. திருவாய்மொழி ஏழாம் பத்து ஐந்தாவது திருவாய்மொழியில்,

> " கற்பார் இராமபிரானை யல்லால் மற்றும் கற்பரோ
> புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே
> நற்பா லயோத்தியில் வாழும் சராசர முற்றவும்
> நற்பா லுக்குய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே."

என்கிற பாசுரத்தின் வ்யாக்யாநங்களில், ஸ்ரீராமன் கர்மயோகாத்யுபாயங்கள் ஒன்றும் இல்லாமல் இருக்கச் செய்தேயும் பூமி ஸ்வபாவத்தாலே தன்னிடத்தில் பக்தியை வ்ருத்தி செய்கிற ப்ரதேசங்களை உடைத்தான அயோத்தியில்வாழும் சராசரங்களைக் கர்மவஸ்யனை ப்ரம்ஹாவால்ஸ்ருஷ்டிக்கப்பட்டும் அவனுடைய ஆளுகைக் குட்பட்டதுமான கர்ம பரதந்த்ரமான லோகத்தை அடைவித்தார் என்று ஸாவவர்ணநம் செய்யப்பட்டிருக்கிறது. தாத்பர்ய ரத்நாவளி, ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் 142-வது ஶ்லோகம், ரகுவீரகத்யம் முதலியவற்றில், ஸ்ரீராமன் மோக்ஷம் கொடுத்ததாக அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. அதிகரண ஸாராவளியில் அர்ச்சிராத்யதிகரணத்தில் அர்ச்சிராதி கதி யில்லாமலே சிலர் பரமபதம் செல்வதுண்டு என்பதற்கு இவ் விஷயமும் உதாஹரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது. முன் சொல்லப்பட்ட க்ரந்தங்களில் ஸ்ரீராமன் நேராகவோ க்ரமமாகவோ சராசரங்களுக்கு அர்ச்சிராதி மார்க்க மில்லாமலோ மோக்ஷம் கொடுத்ததாக ஏற்படுகிறது. ஸ்ரீமத் ராமாயண வ்யாக்யாநங்களில் பக்திரூப முக்த்யுபாயம் இருப்பதாக எழுதியிருந்தாலும், யமம் நியமம் முதலிய எட்டு அங்கங்கள் உள்ளதாயும், ஏழு ஸாதநங்களால் உண்டாவதாயும், தர்சந ஸமாநாகாரமாயும், கடைசி ப்ரத்யயத்தை அவதியாக உடையதாயும், கர்மாங்கமும் தைலதாரைபோல் விச்சேத மில்லாத ஸ்ம்ருதி ஸந்தாந ரூபமுமான பக்தி யோகத்தை மோக்ஷார்த்தமாக த்ரைவர்ணிகர்கள் அநுஷ்டித்தனர் என்பதற்கு ப்ரமாணம் கிடைக்கவில்லை. அந்த த்ரைவர்ணிகர்களுக்கும் மற்ற சேதநங்களுக்கும் அசேதநங்களுக்கும் பக்தி யோகாநுஷ்டாந ப்ரஸக்தி யில்லை. இதைத் திருவுள்ளம் பற்றியே ஸ்ரீ பாஷ்யகார சிஷ்யரான கூரத்தாழ்வான் ஸ்ரீ வரதராஜ ஸ்தவத்திலும் ஸ்ரீ அதிமாநுஷஸ்தவத்திலும்,

> " त्वामामनन्ति कवयः करुणामृताब्धे
> ज्ञानक्रियाभजनलभ्यमलभ्यमन्यैः ।
> एतेषु केन वरदोत्तरकोसलस्थाः
> पूर्वं सदूर्वमभजन्त हि जन्तवस्त्वाम् ॥"

"ये धर्म माचरितुमभ्यसितुं च योगं
बोद्धुश्च किञ्चन न जात्वधिकारभाजः।
ते च त्वदाचरित भूतलबन्धगन्धात्
बन्धातिगाः परगतिं गमितास्तृणाद्याः ॥"

என்கிற ஶ்லோகங்களில் ஸ்ரீ ராமனால் கர்மயோகாத்யுபாயங்களின் அநுஷ்டாநமும், அவைகளின் அதிகாரமுமில்லாத சரங்களும் அசரங்களும், உத்தர கோஸல தேசவாஸ மாத்ரத்தாலேயே மோக்ஷத்தை அடைவிக்கப்பட்டார்கள் என்று அருளிச் செய்தார். ஜடாயு ஸ்ரீராமனுக்காக ப்ராணனை விட்டு மோக்ஷம் அடைந்தாப்போல் இவர்களும் ஸ்ரீ ராம விரஹத்தை ஸஹியாமல் ப்ராணனை விட்டபடியால் மோக்ஷமடையலாம். ஸ்ரீ கோவிந்தராஜர், ஸ்ரீ ராமனுக்காகச் செய்த ப்ராணத்யாகமே ஜடாயுவுக்கு மோக்ஷோபாயம் என்று ப்ரமாணங்களுடன் நிரூபித்திருக்கிறார். பரமார்த்த ஸ்துதியில் ஸ்ரீ தேசிகன்,

"अवधीर्य चतुर्विधं पुमर्थं
भवदर्थे विनियुक्तजीवितस्सन् ।
लभते भवतः फलानि जन्तुः
निखिलान्यत्र निदर्शनं जटायुः ॥"

என்கிற ஶ்லோகத்தில் இவ்வர்த்தத்தை அருளிச்செய்திருக்கிறார். ஆனாலும், அபயப்ரதாந ஸாரத்தில் த்ருதீயாதிகாரத்தில் **'त्वामामनन्ति'** 'புற்பா முதலா' என்கிற கூரத்தாழ்வான் ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளை உதாஹரித்து, 'ஜங்கம ஸ்தாவர விபாகமற உபாயாதிகார ப்ரஸங்க ரஹிதமான ஜந்துக்களையும் ஸ்ரீ பரதாழ்வான் பண்ணின ப்ரபத்தியினாலே அவருடைய விஷயவாஸமே பற்றாசாகப் பின்பு ரக்ஷிக்கும் ப்ரகாரத்துக்கு' இத்யாதியால் ஸ்ரீ பரதாழ்வான் அநுஷ்டித்த சரணாகதியே சராசரங்களின் மோக்ஷத்துக்கு உபாயமென்று அருளிச் செய்யப்பட்டிருப்பதால், ப்ரபத்தியையே சராசர முக்த்யுபாயமாக அங்கீகரிக்க வேணும்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

சித்ரபானு ௵ மார்கழி ௴

1௳	புதன்கிழமை	—	சாபசுக்ல நவமிதிதி
2௳	வியாழக்கிழமை	—	,, தசமிதிதி
3௳	வெள்ளிக்கிழமை	—	ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி
18௳	சனி	—	ஏகாதசி திதி
19௳	ஞாயிற்றுக்கிழமை	—	ஏகாதசி வ்ரதம்
20௳	திங்கட்கிழமை	—	தொண்டரடிப்பொடியாழ்வார் திருநக்ஷத்ரம்
22௳	புதன்கிழமை	—	அமாவாஸ்யை
24௳	வெள்ளிக்கிழமை	—	த்விதீயை—த்ருதீயை திதித்வயம்
28௳	சனி	—	சதுர்த்தி திதி
29௳	புதன்கிழமை	—	சாப சுக்ல அஷ்டமி திதி : போகிப் பண்டிகை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீஜயந்தி உத்ஸவம்

[ஸ்ரீமதி பங்களூர் ராஜலக்ஷ்மி அம்மாள்]

अथ सितरुचिलग्ने सिद्धपञ्चग्रहोच्चे
व्यजनयदनघानां वैजयन्त्यां जयन्त्याम् ।
निखिलभुवनपद्मक्लेशनिद्रापनुत्यै
दिनकरमनपायं देवकी पूर्वसन्ध्या ॥ १ ॥

अवतरति मुकुन्दे संपदामेककन्दे
सुरभितहरिदन्तां स्वादुमाध्वीकदिग्धाम् ।
अभजत वसुदेवस्थानमानन्दनिघ्नै-
रमरमिथुनहस्तै राहितां पुष्पवृष्टिम् ॥ २ ॥

210108

विधृत शङ्खरथाङ्गगदाम्बुजः
शबलितः शुभया वनमालया ।
पितुरसूत मुदं पृथुकस्तदा
जलधिडिम्भनिभो जननीधृतः ॥ ३ ॥

உத்பத்தி விநாசமற்ற ஜகதீஸ்வரன் அஸத்துக்களை அழித்து ஸத்துக்களைக் காப்பாற்றும்பொருட்டு இப்பவனிதன்னில் அவதரிக்க இச்சைகொண்டார். அத்தருணம் சந்திரன் அழகாய் உதித்தனன்; திக்குக்கள் நிர்மலமாய்ப் பிரகாசித்தன; தெளிந்த நதிகளில் மலர்ந்த தாமரைகள் விளங்கின. ஐந்து க்ரஹங்கள் உச்ச ஸ்தாநத்து இருக்குங் கால் பிறப்பவன் சக்ரவர்த்தியாவன் என்று ஜோதிஷ சாஸ்திரம் கூறுகின்றது. ஸர்வலோக நாதன் அவதரிக்கப் போகிறான் என்பதை அறிந்த மிகவும் ஸாமர்த்யமுடைய க்ரஹங்கள், "ஸர்வ மங்களங்களுக்கும் இருப்பிடமாகிய ஸர்வேஸ்வரனிடம் நம்முடைய ப்ரதிகூலம் ஒரு தினை யளவு தீங்கு இழைக்கத்தான் ஸாத்யமாமோ? ஆகவே முன்ஜாக்ரதை யுடன் நம் கௌரவத்தை நாம் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்" என் றெண்ணி, சந்திரன் வ்ருஷப லக்நத்துடன் கூடியிருக்கும் காலத்தில், அவ் வைந்து க்ரஹங்களும் உச்சமாய் அநுகூல ஸ்தாநத்தில் வந்து நின்றன.

ஸூர்யனைக் கண்டக்கால் தாமரை மலர்ந்து ப்ரகாசிக்கும்; ஆதித் தன் அஸ்தமித்தால் அது வாடி வதங்கும். அதுபோல் ஸர்வலோகங்க ளாகிய கமலங்கள், இரவில் பலமுடைய துஷ்ட அஸுரர்களிடம் அடி பட்டு வாடி வதங்கித் துக்கத்துடன் தூங்கிக்கொண்டிருந்தன. அச்சமயம் தன்னடியார்களிடம் இரக்கங்கொண்ட அஸ்தமந மற்ற ஸ்ரீக்ருஷ்ண ஸூர்யன் உதிக்க எண்ணங்கொண்டார். புண்யவதியாகிய தேவகீ தேவி யே கிழக்குத் திக்கானாள். தோஷலேசம் அணுகாத அச்சுபதிநம் புண்ய

தினங்களுக்குள் முதன்மை ஸ்தாநம் பெற்றது. ஸ்ரீஜயந்தி ஸகலலோகங்கட்கும் ஜயத்தைக் கொடுக்கக்கூடியது என்று கொடிகட்டிப் பறந்தது.

அநேக கிளைகளும், இலைகளும், தளிர்களும், மொட்டுக்களும், புஷ்பங்களும், பழங்களும், செழித்துத் தழைத்தோங்கி விளங்கும் பெரிய வ்ருக்ஷத்தினுடைய ஸகல ஸம்ருத்திக்கும் காரணமானது அடி வேர்க் கிழங்கே யன்றோ? அஃதேபோன்று, மூன்று லோகங்களுடைய ஸகல ஸம்பத்துக்களுக்கும் மற்றொரு ஸஹாயமின்றித் தான் ஒருவனே காரணமாய் விளங்கும் கண்ணபிரான் அவதரித்தவளவில், தமக்கு நல்ல காலம் பிறந்தது என்று ஆனந்தக்கடலில் ஆழ்ந்தார்கள் தேவதம்பதிகள். அவர்கள் தங்களுடைய இருகரங்களினாலும் தேனொழுகும் பரிமள புஷ்பங்களை யெடுத்துப் பகவானை அர்ச்சித்தனர். அவற்றின் மகரந்தத் தூள்கள் எட்டுத் திக்குக்களிலும் பரவின. தேவகி வஸுதேவர் வஸித்த சிறைச்சாலையானது ஸுகுமாரனை எம்பெருமானுக்குப் புஷ்பப் படுக்கை யாயிற்று. இவ்விதம் தேவலோகத்தில் கானமும் நர்த்தநமும் வாத்ய கோஷங்களும் நிறைந்திருக்க, வானோர் க்ருஷ்ணவதார உத்ஸவத்தைக் கொண்டாடினார்கள்.

கம்ஸனுக்குப் பயந்த பூலோகத்திலோ நிஸ்ஸப்தம் குடிகொண்டிருந்தது. இதனைக் கண்டது அவ்வஸுரன் வீட்டுத் துந்துபி வாத்யம். பகவதவதார காலத்தில் தன்னை ஒருவரும் எடுத்து முழங்கவில்லையே எனும் துக்கம் மேலீட்டதுபோலும். "இந்நீச அரக்கனுக்குப் பயந்து நாம் ஏன் பகவத் கைங்கர்யத்தை இழக்கவேண்டும்? ஸாதாரணமாய்க் கிட்டக்கூடியதோ இப்பாக்யம்?" என்றெண்ணி, அஃது தானாகவே மநோஹரமாய் ஜெயகோஷம் செய்தது. இவ்விதம் ஸகல சராசரங்களும் பகவதவதார உத்ஸவத்தைக் கொண்டாடின.

அத்தருணம் பரமபுருஷ லக்ஷணங்கள் ப்ரகாசிக்கப் புருஷோத்தமன் அவதரித்த அழகுதான் என்னே! நான்குவித புருஷார்த்தங்களை யருளும் கற்பகக் கிளை யொக்கும் நான்கு திருத்தோள்கள். அவைகளில் திகழும் அடியார் துயர்நீக்கும் சங்கம், சக்ரம், கதை, பத்மம் முதலிய திவ்யாயுதங்கள், திருமங்கை யுறை திருமார்பை அலங்கரித்திருக்கும் மங்களகரமாகிய திவ்ய வநமாலை, இந்த்ரநீல மணிவண்ணன்—கண்ணன்—மநோஹரமாகிய கருங்கடல் குட்டிபோல் அவதரித்தார். அப்போது தேவகீ தேவியின் மட்டிலா மகிழ்ச்சியைக் கூறத் தரமோ?, தேவாதி தேவனாகிய தன் திவ்யக் குழந்தையை எடுத்து மடியில் வைத்து மார்புறத் தழுவி யணைத்தாள். அவ்வற்புத ஸேவையை ஸேவித்த வஸுதேவர் ஆநந்தக்கடலில் ஆழ்ந்தார்.

இன்றையதினம் அம்மஹிமை வாய்ந்த ஸ்ரீ ஜயந்தி திருக்குறுங்குடியில் விசேஷ உத்ஸவமாகக் கொண்டாடப்பட்டுவந்தது. தெருக்கள் சித்ர விசித்ரமான இழைக்கோலங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வீடுகள்தோறும் பச்சை மாவிலைத் தோரணங்கள் வாழைக் கம்பங்கள்

கட்டப்பட்டு, பளபளவென மின்னும் குத்து விளக்குகள் ஏற்றி வைக்கப் பட்டிருந்தன. நகரமே ஆனந்தக் கடலில் அமிழ்ந்திருந்தது. அதில் குழந்தைகளுடைய கோலாஹலத்திற்கும் ஸ்த்ரீகளின் குதூஹலத் திற்கும் எல்லையே இல்லை. அவர்கள் வெகு நேர்த்தியான ஆடையாபர ணங்களினால் தங்களை அழகாய் அலங்கரித்துக்கொண்டு, பெருமாளை ஸேவிக்கக் கூட்டம் கூட்டமாக வந்து நின்றார்கள். கண்ணபிரானிடம் அவர்கள் கொண்ட பரம பக்தியை, அவர் தம் கைகளில் ஏந்தி நிற்கும் வெண்ணெயும் கற்கண்டும் கனிவகைகளும் விளக்கிக் காட்டின.

ஸாயங்காலம் ஸமீபித்தது. ஆதித்ய பகவான் பாரெங்கும் பக்ஷ பாதமின்றித் தன் திவ்ய கிரணங்களைப் பரப்பினான். ஸகல சராசரங் களும் பசும்பொன்மயமாய் ப்ரகாசித்தன. ஜனங்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்த உத்ஸவம் வெகு தூரத்தில் தென்பட்டது. அதிர்வெடியும், மங்கள மேளங்களின் ஒலியும், அதற்கிடையில் "பெருமாள் புறப்பா டாகிவிட்டது; அடுத்த தெருவில் எழுந்தருளுகிறார்; இதோ திரும்பி விட்டார்" எனும் வார்த்தைகளும் எங்கும் முழங்கின. மழைக் கால மேகங்களைக் கண்டு மயில் கூட்டங்கள் களிப்படங்காமல் 'கா கோ' என்று கூப்பாடு போடுவதுபோல், பெய்யு மாமுகில் வண் ணனைக் கண்டதும் ஜனங்கள் ஆநந்தம் உள்ளடங்காமல் ஆரவாரம் செய்யத் தலைப்படடனர். வேத கோஷத்தின் எதிரொலி ஊரெங்கும் பரவியது. எம்பிரான் கண்ணன் குதிரை நம்பிரான் மீது எழுந்தருளி, ஸகல ஜனங்களின் மனத்தையும் கண்களையும் அபஹரித்தார். சிலர் வாஹநத்தின் அழகை வியந்து நாலடி சென்று ஸேவித்துப் பின் திரும்பி னார்கள். ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டு கால் பூமியில் பரவாமல் ஓடோடிச் சென்று ஸேவித்தார்கள். அநேகர் திருவாபரணங்களைக் கொண்டாடிச் சென்றார்கள். மத்தாப்பு வாண வேடிக்கைகளைக் கண்டு களித்தார்கள் சிலர். திருநாள் கடைகளில் புகுந்து விளையாட்டுச் சாமான்களை வாங்கிச் சென்றார்கள் பெரும்பாலோர். உற்றார் உறவினர் களுடன் ஸுகதுக்கங்களைக் கூறிச் சென்றனர் சிலர்.

ஆனால் அப்பெருங் கூட்டத்தின் நடுவில் அழகே உருவெடுத்த ஒருத்தி உண்மை அன்புடன் எம்பெருமான் திருமேனி யழகைப் பருகிக் களித்தாள்; பக்தி வெள்ளம் உள்ளடங்காமல் புருஷோத்தமனைப் பாடித் துதித்தாள். அவள் முகத்தில்தான் என்ன தேஜஸ்! என்ன களை! வாட வாட வாசனை கமழும் மகிழ மலர்களால் கொண்டை முடித்து, ஹாரமும் கங்கணமும் அணிந்திருந்தாள். சந்த்ர ஸூர்யர்களைத் திரஸ்கரிக்கும் திவ்ய காந்தி. மலர்மகளோ கலைமகளோ என இருந்தன அவளழகும் அறிவும்.

கருவிலே திருவுடைய அச்செல்விக்குக் கண்ணபிரானை அடிக்கடி ஸேவித்தாலும் போதுமென்று த்ருப்தி உண்டாகவில்லை. அப்போதைக் கப்போது ஆராவமுதாய் இருந்தது அத்திவ்ய மங்கள விக்ரஹ ஸேவை. சுருண்டிருண்ட முன் நெற்றிக் கூந்தலும், நீண்டு வளைந்த புருவங்களும்,

சரத்காலத்தில் மலர்ந்த தாமரைமலர் போன்ற கண்களும், கண்ணுடியை நிகர்க்கும் கன்னங்களும், அழகிய கொடிபோன்ற உயர்ந்த மூக்கும், கோவைக்கனி யொக்கும் செவ்வாயும், சோகம் தவிர்க்கும் புன்னகையும் குளிர்ந்த கடைக்கண் நோக்கும் நிறைந்த திருமுக மண்டலத்தை ஸேவித்தாள். மன்மதனுக்கும் மன்மதனுகிய கண்ணனது விசேஷ ரூபலாவண்யங்கள், அந்நாரிமணியின் மனத்தையும் கண்களையும் இழுத்துத் தன் வசமாக்கின. கை நிறைந்த பொன்னைக் காட்டிலும் கண்ணிறைந்த கணவனையன்றோ கன்னியர் காமுறுவர். வகுள நாயகியும் இந்திர நீல மணிவண்ணன் கண்ணன் மேல் மையல் கொண்டாள். அவனிடம் ஆழ்ந்த மனமுடைய அவள் புருஷோத்தமனின் திவ்ய திருமேனியை மனமார அணைந்து ஆநந்தித்தாள். கங்கை காவேரி யமுனை முதலிய நதிகள் ஸாகரத்தை விட்டு வேறு எங்குப் போய்க் கலக்கும்? தனக்குத் தகுந்த இடத்திலேயே இவள் தன் காதலைச் செலுத்தினுள்.

புண்டரீகாக்ஷனின் கடைக்கண் நோக்கம் அம்மங்கையின் பரிசுத்தக் காதலை அங்கீகரித்தது. கூட வந்திருந்த அன்னையும் தோழிகளும் இவள் இருப்பை அறியவில்லை. "இவளுக்கென்ன சித்தப்ரமையா? பக்தி பரவசந்தானு? வயது சென்ற நமக்கில்லாத பக்தி இச்சிறு பெண்ணுக்கு எங்கிருந்து வரப்போகிறது? பெருமாள் ஆபரணங்களைக் கண்டு மோஹம் கொண்டனள் போலும். பெண்களுக்குப் புடவை பூஷணங்களின் மீது ஆசை உண்டாவது ஸகஜந்தானே. எது வேண்டுமோ அதைச் செய்து விட்டால் போகிறது" என்று பேசிக் கொண்டனர். வெகு நேரம் காத்துப் பார்த்தார்கள்; அவள் வரும் வழியாய் இல்லை. "வகுள நாயகீ! இது என்ன உன் செய்கை? பெருமாளை ஸேவிக்க அளவில்லையா? நாமென்ன நித்ய ஸூரிகளா பசிதாக மின்றிப் பகவதாநந்தத்தை அநுபவிப்பதற்கு? போதும் ஸேவித்தது. சீக்கிரம் வா. கூட வந்திருந்தவர்களெல்லாம் திரும்பிவிட்டனர். காரிருள் கவிந்து கொண்டது" என்று அவஸரப்படுத்தினுர்கள். இவர்கள் அழைப்பது அவள் செவிகளில் விழுந்தாலன்றோ அவள் மீண்டு வருவாள். கடைசியில் சித்திரப் பதுமை போல் தன்னை மறந்து பக்தி பரவசமாய் இருக்கும் அவளைப் பலவந்தமாய் இல்லம் அழைத்துச் சென்றனர்.

வகுளாதேவியின் உள்ளம் பெருமாளிடமே நின்று விட்டது. விரஹதாபம் பொறுக்க முடியாமல் தவித்தாள்; மேனி வெளுத்தது; அவயவங்கள் இளைத்தன; ஆனுல் அழகு அணுவளவும் குன்றவில்லை. பார்த்தார்கள் உயிர்த் தோழிகள். "தேவிக்கு மநோவ்யாதியா? அல்லது சரீர அஸௌக்யமா? இல்லை; இது காதல் நோய்தான். ஸ்ரீ ஜயந்தி உத்ஸவத்திற்குப் போய்வந்த நாள் முதல் இவ்விதம் கஷ்டப்படுகின்றனள். அர்ச்சா மூர்த்தியாகிய கண்ணபிரான் மீது காதல்கொண்டால் இவளிச்சை இந்த ஜந்மத்தில் ஈடேறுமோ? என்ன உடம்பு என்று கேட்டுப் பார்ப்போம்" என்று எண்ணி அருகில் வந்து "தேவி! உன் மனத்தில் உள்ளதை ஒளியாமல் எங்களிடம் கூறு" என்று வினவினுர்கள்.

அதற்குத் தேவி, "தோழிகளே! நீங்கள் புத்தி கூர்மையுடையவர்களாயிற்றே. என் நிலைமையைக் கண்டு இன்னமும் நீங்கள் அறிந்து கொள்ளவில்லையா? கண்டோர் மோஹிக்கத்தக்க கண்ணன் மேல் ஆராக் காதல் கொண்டேன். திரண்ட தோள்களும், அகன்ற மார்பும், ஒளி வீசும் செந்தாமரைக் கண்களின் அழகிய பார்வையும், என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. திருவடித் தாமரை நகம் முதல் திருமுடிக் கருங் கூந்தல் வரை ஒரே ஸௌந்தர வடிவமாய் விளங்கும் என் கண்ணபிரானை மறக்க முடியுமோ? என் உண்மை அன்பு அவன் உள்ளத்தை உருக்கவில்லையே. இதற்கு ஏதாவது ஓர் உபாயம் யோசித்துக் கூறுங்கள்" என்றாள்.

"சரிதான்; நாங்கள் நினைத்தது உண்மையாய்விட்டது. இது என்ன உன் குழந்தைத் தன்மை? அறியாக் குழந்தை 'சந்திரனைப் பிடித்துத் தா' என்று கேட்பது போல இருக்கின்றது. தேவி! நீ காதல் கொண்ட பரம புருஷன் அர்ச்சாவதாரத்தில் உனக்குக் கிட்டுவாரா? உன்னுடன் ஸல்லாபம் செய்வாரா? ஆலிங்கநம் செய்துகொள்வாரா? இஃது வீணாசை; பேதமைத் தன்மை; அவரை அடியோடு மறந்து விடு. மறப்பதற்கா உபாயம் இல்லை? வேறு எதிலாவது உன் புத்தியைச் செலுத்து. நந்தவனம் சென்று பூக் கொய்யலாம். சித்ரசாலை சென்று அழகிய ஓவியங்களைக் கண்டு களிக்கலாம். பந்து, கழல், அம்மானை, ஏதாவது விளையாடிக் காலங் கழிக்கலாம். உன்னுடன் நாங்களும் தான் வந்து கண்ணனை ஸேவித்தோம். அவ்வெம்பெருமானின் கடைக் கண் நோக்கமும் குறுநகையும் எங்கள் மனத்தை இழுக்கவில்லையே! புருஷோத்தமன் உலகத்திற் கெல்லாம் பதி என்பதை ஶாஸ்த்ரங்கள் முறையிடுகின்றன. அதை நாங்களும் அறிவோம். இம்மையிலேயே நீ பகவானை எவ்விதம் பதியாக அடைதல் கூடும்? நித்ய விபூதி சென்று ஆசைதீர அநுபவிக்கலாம். எட்டாப் பழத்திற்குக் கொட்டாவி விடுதல் நல்லதன்று. இப்பொழுது உலகத்தாரைப் போல் உன் மனத்திற் கிசைந்த மணாளனை மணந்து வாழ்தலே உத்தமம். பரம புருஷன் கல்யாண குணங்களையும் ரூப லாவண்யங்களையும் நினைத்து நினைத்து இவ்விதம் உருகுவதனால் புத்தி சபலித்துவிடும். அவற்றை ப்ரயத்நப்பட்டு மறப்பதே மேல்" என்று தோழிகள் பலவாறாகப் போதித்தார்கள்.

இதனைக் கேட்டாள் ஸௌகுமாரி வகுளநாயகி. அவள் இதழ்களின் அரும் புன்னகை அவர்களைப் பரிஹஸித்தது. கடைக்கண் பார்வை வருத்தத்தை வெளியிட்டது. "ஆம்; நீவிர் கூறுவது முற்றிலும் உண்மை. கிட்டாத பொருளில் காதல் கொள்வதால் துன்பத்திற்கு இடமாகும். விரும்பிய பொருளை அடையாமற் போனால் மறக்கத்தான் வேண்டும். ஆனால் அதுதான் என்னால் முடியவில்லை. ஸாமர்த்யசாலிகளாகிய உங்கட்கு அது ஸாத்யம். வேறு விஷயங்களில் மனத்தைச் செலுத்துவீர்கள். உங்கள் ஆடல் பாடல்களில் என் மனம் செல்லவில்லை. கண்ணன் இன்ப நினைவே எனதுள்ளத்தில் நிறைந்திருக்

கிறது. அதில் மற்றொரு எண்ணத்திற்கு இடம் கிடைப்பது அரிது. நித்ய ஸூரியான நாயகன்மீது காதல் கொள்வது தவறு என்று நீங்கள் கூறுகிறீர்கள். 'அவர்கட்கு மாத்ரம் நாதன்; நமக்கு இல்லை' என்றால் அவன் நித்ய விபூதியிலேயே யன்றோ வஸிக்கவேண்டும். அப்போது கிட்டாப்பழம்தான்; நான் காதல் கொள்ளவும் ஸாத்யமில்லை. இப்போது சிறு குழந்தைகளும் ஸுலபமாய் எட்டிப் பிடிக்கும் பழமாய்த் திருக்குறுங் குடியிலன்றோ வந்து நித்யவாஸம் செய்கின்றார். பரிபூர்ணனாகிய விண்ணோர் தலைவன் என்னை மணக்கும் பொருட்டே ஒப்புயர்வற்றதும் உருக்கி ஓடவிட்ட தங்கத்தை ஒத்ததுமான தன் திவ்ய திருமேனி அழகினை எனக்குக் காட்டி, எனது உள்ளத்தினைக் கொள்ளைகொண்டார். என்ன காரணத்தினால் எனக்கு அளவற்ற உபகாரம் செய்த என் நாதனை நான் மறப்பது? அவர் குணங்களில் குறைந்தவரா? கல்யாண குணாகரன். ஐஶ்வர்யத்தில்தான் குறைந்தவரா? ஸகல லோகங்களையும் ஆளும் குன்றாச் செல்வமுடைய சக்ரவர்த்தி. அழகில் குறைந்தவரா? கோடி மந்மத ரூபன்; மனத்திற்கும் வாக்குக்கும் எட்டாத தேஜோ மூர்த்தி. அவன் அழகிற்கு உவமை மற்றொரு தெய்வமுண்டோ? ஸமீபத்திலில்லை என்று மறப்பதா? அமரர்கள் அநுபவிக்கும் ஸௌந்தர்ய மூர்த்தி என்னருகில் வந்து நித்யவாஸம் செய்கிறார். மேலும் நானும் உங்களைப்போல் ஜ்ஞாநம் அஜ்ஞாநம் ஒன்றும் அறியாது ரஸமற்ற மாம்பழமாய்த்தான் இருந்தேன். மண்ணையும் மனிதராக்கவல்ல கமலக் கண்களின் அழகைக் காட்டி அவர் என்னை வசப்படுத்தினார். மறுபடியும் என்னை எங்கே அஜ்ஞாநம் மூடிக்கொள்ளுமோ என்றஞ்சி என் மனக் கோவிலில் அசையாமல் குடிகொண்டுவிட்டார்; ஆபரணங்களுக் கெல்லாம் ஆபரணமாய் ப்ரகாசிக்கின்றார். விலைமதிப்பற்ற இந்நீல மணிவண்ணனை ஒருநாளும் மறவேன். என் அன்பனையே மணந்து ஸுகமாய் வாழ்வேன்; மற்றொரு பதரைக் கனவிலும் கருதேன்'' என்றாள்.

> "நம்பி யைத்தென் குறுங்குடி நின்றவச்
> செம்பொ னேதிக ழுந்திரு மூர்த்தியை
> உம்பர் வானவ ராதியஞ் சோதியை
> எம்பி ரானையென் சொல்லி மறப்பனோ?"
>
> "மறப்பும் ஞானமும் நானொன் றுணர்ந்திலன்
> மறக்கு மென்றுசெந் தாமரைக் கண்ணொடு
> மறுப்பற வென்னுள்ளே மன்னி னான்தனை
> மறப்ப னோவினி யானென் மணியையே."

அவள் தேனினு மினிய மொழிகளைச் செவியுற்ற அன்னையும் தோழிகளும் அதன் ரஸமறியாமல் ஆயாஸமுற்றனர். "அவரவர்கள் தலைவிதியைத் தடுக்க எவரால் ஸாத்யம்? தலையெழுத்தை அழித்தல் மும்மூர்த்திகளாலும் முடியாத காரியம். வருவது வழிதப்பாது. அநுபவித்துத் தீர். நாங்கள் என் செய்வது?'' என்று அலுப்புடன் கூறி நித்திரைக்குச் சென்றனர்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்³ரஹ்மணே நம:

காரயித்ருத்வ நிரூபணம்

[வித்யாரத்நாகர கோடைவாசல் ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசார்யர்]

(திருமலை திருப்பதி தேவஸ்தாந ஆஸ்தாந வித்வான்)

[ஸஞ்சிகை 11 : பக்கம்-399 தொடர்ச்சி]

இதை இம்மட்டோடு நிறுத்திக்கொண்டு, இனி ஐந்தாவது எட்டாவது ஸஞ்சிகை யிற் சொல்லியிருக்கிற விஷய விசேஷங்களை விசாரிப்போம்.

ஐந்தாவது ஸஞ்சிகையில் ஸம்பாதக ஸ்வாமி, தமக்குள்ள ஆசயத்தை ஸ்புட மாக வெளியிட்டிருக்கிறார். முதல் பாராவில் "ப்ரதம ப்ரவ்ருத்தி காலத்தில் ஜீவன் பரமாத்மாவின் அநுமதியின்றிக்கே ஸ்வயமாகவே ப்ரவ்ருத்திக்கிறான். உத்தர ப்ர வ்ருத்தி காலங்களில் பரமாத்மாவின் அநுமதியின்பேரிலேயே ஜீவனுக்கு ப்ரவ்ருத்தி ஏற்படுகிறது" என்றொரு தாத்பர்ய வ்யவஸ்தை செய்திருக்கிறார். இதற்கு ப்ரமாண மாக, "எல்லா வகைக் கார்யங்களிலும் புருஷர் செய்யும் ப்ரயத்நத்தை எதிர் பார்த்திருந்து. அந்தர்யாமியான பரமாத்மா அவ்வாரம்பத்தை யநுமதித்து, மேலே ப்ரவ்ருத்திப்பிக்கின்றான். பரமாத்மாவின் அநுமதியின்றி இவனுக்கு ப்ரவ்ருத்தி பூர்த்தி யடைவதில்லை" என்கிற ஸ்ரீபாஷ்யம். "இதனால் ப்ரதம ப்ரவ்ருத்தி தசை யில் பரமாத்மா உதாஸீனை யிருப்பது காட்டப்படலாயிற்று. பரமாத்மாவின் அநு மதியன்றி ஜீவனுக்கு ப்ரவ்ருத்தி யேற்படமாட்டா தென்றது உத்தர ப்ரவ்ருத்தி விஷயம்" என்கிற ஶ்ருதப்ரகாசிகை. "ஸர்வாஸு க்ரியாஸு புருஷேண க்ருதம் ப்ரயத்நம் உத்³யோக³மபேக்ஷ்ய அந்தர்யாமீ பரமாத்மா தத³நுமதிதா³நேந ப்ரவர்தயதி. பரமாத்மாநுமதிமந்தரேணாஸ்ய ப்ரவ்ருத்திர் நோபபத்³யத இதி பா⁴வ: | அநேந ப்ரத²மப்ரவ்ருத்தாவுதா³ஸீநத்வம் பரஸ்ய உதா³ஸீநத்வம் த³ர்ஶிதம் | உத்தரப்ரவ்ருத்திஷு தத³நுமதிம் விநா நோபபத்³யத இதி பா⁴வ: |" இவைகளை ஆதாரமாகக் காட்டியு மிருக் கிறார். இரண்டாவது பாராவின் முடிவில், "ஸ்ரீ ஶ்ருதப்ராகாசிகாசார்யருடைய வ்யாக்யாநப்படி ஜீவாத்மாவின் ப்ரதம ப்ரவ்ருத்திக்குப் பரமாத்மாவின் அநுமதி வேண்டியதில்லை. உத்தர ப்ரவ்ருத்திகளுக்கு அது அவஶ்யம் அபேக்ஷித மென்பதே ஸ்ரீபாஷ்யகாரரின் திருவுள்ளமென் றேற்படுகிறது" என்றொரு நிர்ணயத்தைச் செய் திருக்கிறார். உதாஹரித்த ஸ்ரீபாஷ்ய ஶ்ருதப்ரகாசிகா வாக்யங்கள் இவ்வர்த்தத்தை ஸந்தேஹத்திற் கிடமின்றித் தெளிவிக்கின்றமையினால் இதன்மீது குறையொன்றும் சொல்வதற்கில்லை. இதற்குமேல் "ஸர்வஸ்ய ப்ரத²மப்ரவ்ருத்தாவபேக்ஷகத்வம் பஶ்சாத³நுமந்த்ருத்வமிதி|" முதல் ப்ரவ்ருத்தியில் பரமாத்மா உபேக்ஷகன், பிற் பாடு அநுமந்தா என்கிற ப்ரபேதத்தையும் ஸ்ரீஶ்ருதப்ரகாசிகாசார்யரின் அபிப்ரா யத்தை யநுஸரித்து ஸமர்த்தித்திருக்கிறார். இவ்வர்த்தத்தையும் குறித்த ஶ்ருதப்ர காசிகா வாக்யம் வ்யக்தமாய்க் கூறுவதால், இதிலும் ஆக்ஷேபத்திற்கு இடமொன்று மில்லை. ஸதத³நந்தரம் "ஜீவனுடைய ப்ராதமிகேச்சா ப்ரயத்நங்களில் பர மாத்மாவுக்குக் காரணத்வ முண்டா இல்லையா? இல்லை யென்றால் அவனை ஸர்வத்திற் குங் காரண மென்றதும் ஸர்வ பலங்களையும் வழங்குமவ னென்றது மழிந்துபோகும். இச்சாதிகளும் கர்மபலங்களேயான கார்யவிசேஷங்கள்தானே. ஆதலால் அவ்வி டத்திலும் அவனுக்குக் காரணத்வ முளதென் றுதான் சொல்லவேண்டும். ஈஶ்வரனுக்கு ப்ரவர்த்தகத்வமாவது, ப்ரவ்ருத்திக்குக் காரணமாகிய இச்சையை யுண்டாக்குதல்

தானே. ஆகையால் ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் பரமாத்மா இச்சையை யுண்டாக்கு கிரு னென்றல்லவோ முடியும். இனி ஆங்கவனை உபேக்ஷக னென்றது எப்படிப் பொருந்தும்! என்றொரு சங்கையை "நநு வெதந ப்ராயஜிகெஷூ ப்ரயந்தயொரு வேத்தள வரோதநஃ காரணக்வஜேவா நவா? நவெக ஸவகாரணகவஹஜுவ்ரவஸஜூஃ ஸவஹெவ்ருஃகவஹு ஹநூஂவஸ்யாக. ப்ரயஜே ப்ரவ்ருத்தீஷ்ஷூாஜநக கவஜேவெக உவெக்ஷககவஹவஸ்யாக" என்கிற வாக்ய பாகத்தால் எழுப்பிக்கொண்டு, "உவ்ஹெத ஸாயாரணொவகார விஶெஷொவகாரவெஷஜெண ஸவ்ராஸாநேவவத்தீநாஂ வரி ஹ்ஹதகவாக" சொல்கின்றோம். ஈஸ்வரன் செய்யும் உபகாரம் ஸாதாரணோபகாரம் விசேஷோபகாரமென்று இருவகையாயிருப்பதனால், எல்லா அநுபபத்திகளும் பரிஹரிக்கப்படலாகின்றன வென்க என்று ஆசிரியர் ஸமாதாநத்தையுங் கூறியிருக்கின்றார். இதை ஸம்பாதக ஸ்வாமி இவ்விருவகையான உபகாரத்தினுள் ப்ரவ்ருத்திக்கு வேண்டிய ஞானசக்தி, க்ரியா சக்தி, கரணகளேபராதி உபகரணங்கள், இவற்றைக் கொடுத்துவிட்டு ஒதுங்கி நிற்பது ஸாதாரணோபகாரம். ப்ரதம ப்ரவ்ருத்தி விஷயத்தில் ஈஸ்வரன் செய்வது இவ்வளவுதான்! இதைத் தவிர்த்து உத்தர ப்ரவ்ருத்திகளிற்போல இச்சா ஜநகத்வாதிகளான விசேஷோபகார மொன்றையும் ஸாக்ஷாத்தாகச் செய்கிறதில்லை. ஆதலால் ப்ரதம ப்ரவ்ருத்தியில் இவனை உபேக்ஷக னென்கிறது; என்றாலும் ஸாதாரணோபகாரத்திற்கு யாதும் குறையில்லை யாதலால் இவனுடைய ஸர்வ காரணத்வ ஸர்வ பலப்ரதத்வங்களுக்குப் பழுதொன்று மில்லையென்று விவரித்துவைத்து, இச்சா ஜநகத்வரூபமான ப்ரேரகத்வம் ப்ரதம ப்ரவ்ருத்தி தசையில் பரமாத்மாவுக் கில்லை, என்கிற ஸ்வப்ரதிஜ்ஞாதமான அர்த்தத்தை வற்புறுத்தி நிகமித்திருக்கிறார். இங்கும் இந்த ஸ்வாமி, ஸ்வாபிமத ஸாதகங்களாகக் காட்டியிருக்கிற ப்ரமாண வசநங்கள் யாவும் ஸந்தேஹிப்பதற்கு இடமில்லாமல் ஸ்புடார்த்தங்களா யிருப்பதால் இவை மேலும் தடஸ்த் த்ருஷ்டியில் ஆக்ஷேபத்திற்கு அவகாசம் கிடையாது.

சுருங்கப் பார்க்கையில், ஸம்பாதக ஸ்வாமி, சேதநருடைய ப்ரதம ப்ரவ்ருத்தி விஷயத்தில் ஈஸ்வரனுக்குள்ளது ஸாதாரணோபகாரகத்வ மென்கிறார். ப்ரவசந கர்த்ரு ஸ்வாமியோவெனில், ஸாதாரண காரயித்ருத்வ மென்கிறார். ப்ரதம ப்ரவ்ருத்தி தசையில் விசேஷித்து உபகரிக்காததினால் ஸாதாரணோபேக்ஷை கூடுமானாலும், எத்தகைய உபேக்ஷா தசையினோடும் காரயித்ருத்வத்தைப் பொருத்த முடியாதென்று யாம் முன் கூறியிருப்பது வாசகர்களின் ஞாபகத்திலிருக்கு மென்றே நம்புகிறோம்.

ஆனால் நம் ப்ரவசந கர்த்தா, "ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஸ்வரன் காரயிதாவன்று உபேகக்ஷகனே என்பதாக ஸ்ருதப்ரகாசிகாரிர் ப்ரப்ருதிகளின் மதமென்பதற் கில்லை" யென்று உறுதி கூறுகின்றார். ஆனால் இந்த ஸ்வாமி "ஸவ்ராஸுக்ரியாஸுவாரஷெணகூதஂ ப்ரயத்நஂ உஃவ்ஜேஂ கவெக்ஷ" எல்லாக் கார்யங்களிலும் புருஷர் தாமாகவே எடுத்துக் கொள்ளும் முயற்சியை யெதிர்பார்த்திருந்து" என்கிற ஸ்ரீ பாஷ்யம். கவெநக ப்ரயஜேப்ரவ்ருத்திஃஶாயாஂ வரஹெஸ்ராஃாஸீநகவஹஶிதஂ இதனால் முதலில் ப்ரவ்ருத்திக்கும்போது ஈஸ்வரன் உபேக்ஷித்திருக்கிறது தெளிவுபடுத்தப்படலாயிற்று என்கிற ஸ்ருதப்ரகாசிகை இவை முதலான ப்ரமாண வசநங்கள் பலவற்றுக்கு என்ன வகை சொல்வ தென்பதைப்பற்றிச் சிந்திக்கவில்லை போலும். உபேக்ஷகத்வத்தோடு காரயித்ருத்வமுங் கூடி வாழுட்டுமே யென்று நினைக்கவும் முடியாதென்று நாம் முன்னமே நிரூபித்திருக்கின்றோம்.

நல்லது ; பாதக ப்ரமாணங்களை இவர் மறந்திருக்கட்டும். ஸாதக ப்ரமாணம் எது வென்கிறு ரென்று பார்ப்போம்.

இந்த ஸ்வாமியின் மனத்தை இப்படி யொரு ஆசை அலற்றிக்கொண்டிருக்கிறது. எப்படி? ஸம்பாதகர் ப்ரதம ப்ரவ்ருத்தி விஷயத்தில் ஈஶ்வரனுக்கு கார்யோபயுக்த ஜ்ஞாந சிகீர்ஷாதிகளைக் குறித்துப் பொதுவாக ஸாதாரண காரணத்வ முண்டென்னும் வரையில் இசைந்திருக்கின்றார். இப்படிப்பட்ட ஸாதாரண காரணத்வத்தையே காரயித்ருத்வ மென்று யாம் ஸமர்த்தித்துவிட்டோ மானால், ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் காரயித்ருத்வ முண்டென்று ஸித்தித்துவிடு மாதலால், ஆங்கவன் காரயிதா அன்றென்கிற பரபக்ஷங் குலைந்து நமது பக்ஷம் நிலைத்துவிடு மென்று சிந்தித்தார். இனி ஸாதாரண காரணத்வமே காரயித்ருத்வ மென்கிறது, 'நான் தூங்குகிறே'னென்பது போலப் பரஸ்பரம் முரண்படும் சொற்களாயிருக்கின்றதே! இதைச் சாதிப்பதற்கான ப்ரமாணம் கிடைக்காதன்றோ? அதை வெகுவாகத் தேட ஆரம்பித்தார். முயற்சி பயனளிக்கு மென்பார்கள். இப்போது "உத்தர கார்யங்களைப்பற்ற ஹேதுக்களான ஜ்ஞாந சிகீர்ஷாதிகளைக் கொடுக்குமது சேதநர் பக்கல் இவனுக்கு விசேஷித்து ப்ரேரகத்வம்" என்கிற பரமதபங்கத்தி லுள்ள வாதமொன்று தற்செயலா யிவருக்குக் கோசரமாயிற்றுப் போலும்! 'கோரியது கிடைக்காவிட்டால் கிடைத்ததையே கோரியதாகப் பாவித்து திருப்தியடை' என்கிற உபதேசத்தை ஸார்த்தமாக்குவார் வேண்டி அதனை ஆவலுடன் கையிற் கொண்டார். இதுகொண்டு ஸ்வாபிமதத்தை ஸாதித்துவிடுகிற தென்று தீர்மானித்தார். இந்த வாக்யத்தினால் இந்த ஸ்வாமியின் அபிமத மெப்படி ஸித்திக்குமென்று வாசக நண்பர்கள் ஸந்தேஹிக்கின்றீர்களோ? இவர் போட்ட திட்டம் ஒத்துவந்தால் தன்னாலே ஸித்தித்து விடுகிறது. ஒத்து வருமா? வாராமற்போனால் போகட்டும்; முடிந்த வரையிற் பார்ப்போமென்று புறப்பட்டால் நீங்களேன் தடைசெய்கிறீர்கள்? விட்டு ஒதுங்கி நின்று பார்த்து கொண்டிருக்கிறதுதானே! இந்த வாக்யம், சேதநருடைய உத்தரகார்யங்களைப்பற்ற ஹேதுக்களான ஜ்ஞாநசிகீர்ஷாதிகளைக் கொடுக்குமிடத்தில் ஈஶ்வனுக்கு ஸாதாரண காரணத்வ முண்டென்னும் பொருளைத் தருவதாக வைத்துக்கொள்வோம். அங்கே காரயித்வ மிருக்கின்றதல்லவா? அதை எடுத்துக்கொண்டு அந்தக் குழாயில் கையிற் கிடைத்திருக்கிற ஸாதாரண காரணத்வத்தின் பிற்பகுதியை நுழைத்துவிடுவோம். அப்போது என்னாகும்? காரணத்வாம்சம் மறைந்து, ஸாதாரண காரயித்ருத்வம் உதயமாகும். இனி: ஸாதாரண காரணத்வத்தை ஸாதாரண காரயித்ருத்வமாக மாற்றிவிடக்கூடிய ரஸ வித்யா ஸாமர்த்யம் ஸித்தித்திருக்கையில் கவலையென்ன? ப்ரதம ப்ரவ்ருத்தி விஷயமான ஸாதாரண காரணத்வ இரும்பையும் ஸாதாரண காரயித்ருத்வப் பொன்னாக எளிதிற் செய்துவிடலாம். என்ன பலிக்கும்? ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஶ்வரனுக்கு ஸாதாரண காரயித்ருத்வ முண்டென்கிற தமது மநோரத மென்பதைச் சொல்லவேண்டுமா? ஹூ! மாயாக்காளி! ஓடிவா! ஓடிப்போ! இந்தத் திட்டத்தைத் தயாரித்துக்கொண்டு நம் ப்ரவசந கர்த்தா ஸாதாரண காரணத்வத்தை ஸங்கிரஹிப்பார் வேண்டி, ப்ரஸ்துத பரமபதங்க வாக்யத்தினிடம் சென்றார். நெருங்கிப் பார்க்கையில் அங்குள்ள 'விசேஷித்து' என்கிற பதம் இடராகத் தோன்றிற்று. அது ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஶ்வரன் ஸாதாரண காரணமா யொதுங்கி நிற்பது போலன்றி, உத்தர கார்யங்களில் அவற்றுக்கு ஹேதுக்களான ஜ்ஞாந சிகீர்ஷாதிகளை விசேஷித்து உபபாதநஞ் செய்துகொடுத்து ப்ரேரகனாகிறு னென்று ஸஹஜமாகப் பொருளுடைத்தா யிருப்பதால் அதனால் ஸ்வாபிமதம் ஸித்திக்காதென்பதோடு, அது ஸ்வாபிமத விருத்த மென்றுந் தோன்றிற்றுப் போலும். உண்மைதான். இந்த வாக்யம் ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஸாதாரண காரணத்வம், உத்தர ப்ரவ்ருத்திகளில் விசேஷ ஹேதுத்வமென்று விஷயத்தை வ்யக்தமாய் விபஜித்துக் கொடுத்து விடுகிறதன்றோ! என்றாலும் இந்த ஸ்வாமி விட்டுவிடவில்லை. இந்த

வாக்யத்துக்கு அநந்தரம், "அசேதநங்களில் ப்ரேரகத்வமாவது கார்யாந்தராநு குண விகார மாத்ர ஹேதுத்வம்" என்றொரு வாக்ய மிருக்கிறது. அதன் உதவியைக்கொண்டு 'விசேஷித்து' என்கிற முள்ளின் முனையை மழுப்பிவிடப் பார்த்தார் போலும். அம்முள்ளின் முனை த்விதீயாதிப் ப்ரவ்ருத்திகளில் ஈச்வர னுக்கு ஸாதாரண காரணத்வமில்லை யென்று வரையறுத்து விடுமென் றெண்ணினார் போலும்! இதற்காக ஒரு ஸாஹஸஞ் செய்கிறார். "ப்ரேரக ஸ்வரூபத்தை நிரூபிக்கு மிடத்தில் 'விசேஷித்து' என்கிற பதமானது அசேதந ஸாதாரண மல்லாமை யைக் குறிக்கின்றது" என்று ஒரு போடு போட்டார். இதற்கு ஸாக்ஷி கூற மேலே அசேதநங்களில் ப்ரேரகத்வத்தைத் தனித்துக் காட்டும் வாக்யத்தைக் கூட்டில் அடைக்கின்றார். அந்த ஸாக்ஷி கூறுவ தென்ன வென்பதைக்கூட விசாரியாமல் ஆகையால் இங்கு 'விசேஷித்து' என்பதனால் உத்தர கார்யங்களைப் பற்றப் பொது வான காரணத்வத்தை பாதிப்பதாகக் கொள்ளக்கூடாது என்று தீர்ப்பையும் கூறிவிட்டு, விசேஷித்துப் பிசாசின் வாயிலிருந்து ஸாதாரண காரணத்வத்தை மெல்லென மீட்டு, த்விதீயாதி ப்ரவ்ருத்திப் பேழையில் வைத்துப் பூட்டிவிட்டதாகக் கனவு கண்டு தமக்குத் தாமே த்ருப்தி யடைகின்றார். நல்லது; நாம் இம்மட்டில் இவர் கூறுகிற பொருள் சீரியதுதானாவென்று சோதித்துப் பார்ப்போம். 'உத்தர கார்யங்களைப் பற்ற' இத்யாதி வாக்கியத்தி லுள்ளதான 'விசேஷித்து' என்கிற பதம், அசேதந ஸாதாரண மல்லாமையைக் குறிக்கின்றது என்றதே மிக மிகத் தவறாகும். ஏனெனில்: அப்போது 'விசேஷித்து' என்கிற பதமே ப்ரயோஜந மற்றதாகி விடும். 'சேதநர்பக்கல் ப்ரேரகத்வ மிது; அசேதநங்களில் ப்ரேரகத்வம் இப்படிப்பட்டது' என்று சொன்னாலே ப்ரேரகத்வத்தை விபஜித்துக்கொடுத்ததாய்விடு மன்றோ? இனி அப்பத மெதற்காக? இதுமட்டு மல்ல. ஜ்ஞாந சிகீர்ஷாதிகளைக் கொடுக்குமது சேதநர் பக்கல் விசேஷித்து ப்ரேரகத்வ மென்றாலே, அசேதந ஸாதாரண மல்லாமை ஸித் தித்துவிடுமே; அப்படியிருக்க: அங்கு 'ஜ்ஞாந சிகீர்ஷாதிகளை உத்தர கார்யங்களைப் பற்ற ஹேதுக்களான' என்று விசேஷிப்பித்ததற்கு ப்ரயோஜநமென்ன? ஜ்ஞாந சிகீர்ஷாதிகள் கார்யஸாமாந்யத்துக்குக் காரணங்க ளென்கிற உண்மையை விளக்குதல் (ஸூாபிவகஷயநம்) தானெனில் அப்போது 'கார்யங்களைப் பற்ற' என்று மாத்ரம் சொன்னாற் போதுமே. அப்படியே சொல்லவும் வேண்டுமே! கார்யங்களில் 'உத்தர' என்கிற அடைமொழி உபயோகித்தது அநர்த்த மாகாதா? 'கொடுக்குமது' என்று ஜ்ஞாநசிகீர்ஷாதிகளைப்பற்றி உத்பாதகத்வ ரூபமான அஸாதாரண காரணத்வமே இவ்வாக்யத்திற் சொல்லப்படுவதால், அது உத்தர கார்யங்களை யன்றி ப்ரதம ப்ரவ்ருத்திக்குக் கிடையாதாகையால், இதனை விலக்க 'உத்தர'வென்றது பயன்பெறு கிறதெனில்: தஹி ப்ரதம ப்ரவ்ருத்தி ஹேதுக்களான ஜ்ஞாந சிகீர்ஷாதிகளில் ஈச்வரனுக்கு அஸாதாரண காரணத்வ மில்லையா மாகில் அதன்மூலம் அவனுக்கு அங்கு காரயித்ருத்வ மில்லையென்று பலித்துவிடு மாதலால், வாக்யார்த்த வர்ணம் ஸ்வாமிக்கு விபரீதத்தில் முடிவடையும். ஆகையால் இந்த ஸ்வாமி 'விசேஷித்து' என்கிற பதம் அசேதநஸாதாரண மல்லாமையைக் குறிக்கிற தென்றது உசிதமாகாது. எனவே அந்த வாக்யத்திற் குள்ளதான குறைசொல்வதற் கிடமில்லாத பொருளை யாம் இங்கு வரைந்து காட்டுகின்றோம். சேதந ப்ரவ்ருத்திகளில் ஈச்வரனுக்கு ஸாதாரண காரணத்வம். விசேஷ ஹேதுத்வமென்று இரண்டுவிதமான ஸம்பந்தமுண்டு. இவற் றுள் காலாத்ருஷ்டாதிகளுடையது போன்ற ஸாதாரண காரணத்வம் ப்ரதம ப்ர வ்ருத்தி விஷயம். தத்தத் ப்ரவ்ருத்யநுகுண ஜ்ஞாந சிகீர்ஷாத்யுத்பாதகத்வத்தை யிட்டு வருமதான விசேஷஹேதுத்வ ரூபமான ப்ரேரகத்வம் உத்தர ப்ரவ்ருத்தி களைச் சார்ந்ததென்பது வ்யவஸ்திதமான விஷயம். இனி இப்பதத்தின் அந்வய க்ரமங்களை யாராய்வோம். இங்குள்ள 'விசேஷித்து' என்பதை 'உத்தர காரியங்களைப் பற்ற' என்பதோடு அந்வயித்தால், இந்த ப்ரோகத்வத்துக்கு ப்ரதம ப்ரவ்ருத்தியி

னின்று வ்யாவ்ருத்தி யேற்படும். 'ஜ்ஞாந சிகீர்ஷாதிகளைக் கொடுக்குமது என்றதோடு கூட்டினால் உத்பாதகத்வ போதகமான கொடுக்குமதைக் கொண்டு ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஜ்ஞாந சிகீர்ஷாதிகளைப் பற்றியுள்ள ஸாதாரண காரணத்வம் வ்யாவ்ருத்தமாகும். ப்ரேரகத்வ மென்பதோடு இணைத்தாலோ, உத்தர ப்ரவ்ருத்யநுகுண ஜ்ஞாந சிகீர்ஷாத்யுத்பாதகத்வமே ப்ரேரகத்வ மென்கிற விசேஷத்தைக் காட்டும். எப்படியிலும் ப்ரவ்ருத்தி ஹேதுக்களான ஜ்ஞாந சிகீர்ஷாதிகளைப்பற்றி ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஸாதாரண காரணத்வம் த்விதீயாதி ப்ரவ்ருத்திகளில் விசேஷஹேதுத்வ மென்கிற விசேஷம் ஸித்தித்துவிடுகிறது. இதன்மேல் ப்ரவ்ருத்தி ஹேதுக்களான ஜ்ஞாந சிகீர்ஷாதிகளில் ஸாதாரண ரூபமாகவோ அஸாதாரண ரூபமாகவோ காரணமாயிருப்பதே ஈஶ்வரனுக்கு ப்ரேரகத்வமானால் இது அசேதந வர்க்கத்துக்குப் பொருந்தாததலின், அங்கும் அவனை ப்ரேரக னென்பது அஸங்கதமாகுமே என்று வர, இதை "கார்யாந்தராநுகுண விகார மாத்ரஹேதுத்வமே அசேதநங்களைப்பற்றிய ப்ரேரகத்வ" மென்று பிருத்கரித்துப் பரிஹரிப்பதற்காக உத்தர வாக்யம் தோன்றலாயிற்று. எதற்காகவோ தோன்றிய வாக்யத்தை இந்த ஸ்வாமி தமக்காகவே யென்கிறார். சந்தைக்குப் போவார் வழித்துணையாவரா!

இதற்கு அநுபதம் "ஆகையால் இங்கு விசேஷித்து என்பதனால் உத்தர கார்யங்களைப் பற்றப் பொதுவான காரணத்வத்தைப் பாதிப்பதாகக் கொள்ளக்கூடாது" என்று ஸஹேதுகமாக ஒரு நிஷேதத்தைப் பண்ணுகிறார். ஹேதுவின் வலிவுதான் விளங்கிவிட்டது. அதிருக்கட்டும். இந்த ஸ்வாமி எதற்காக இப்படியொரு நிஷேதத்தை இடையிற் புகவிடுகிறார்! ப்ரக்ருத வாக்யம் உத்தர கார்யாநுகுண ஜ்ஞாந சிகீர்ஷாதிகளில் ஈஶ்வரனுக்கு அஸாதாரண காரணத்வத்தைச் சொல்கிறது உண்மைதானென்றாலும், இதனால் ஸாதாரண காரணத்வ மில்லையென்று போய்விடாதே. அப்படி எவரும் இல்லையென்று சொல்லவு மில்லையே. ஏனிந்த அப்ரஸக்த ப்ரதிஷேத மென்று வாசகர்கள் கேட்கலாம். இதில்தானொரு விநோத மிருக்கின்றது கேளுங்கள்.

ஸம்பாதகர் சேதநருடைய ப்ரதம ப்ரவ்ருத்தி விஷயத்தில் ஈஶ்வரனுக்குள்ள ஸம்பந்தம் த்விதீயாதி ப்ரவ்ருத்திகளி லுள்ளதைவிட தளர்ச்சியுள்ள தென்று ஸாதித்தார். இது ப்ரவசந கர்த்தாவுக்குப் பிடிக்கவில்லை. ஏகரூப மென்று ஸாதிக்க நினைத்தார்போலும். உத்தர கார்யங்களிலுள்ள அஸாதாரண காரணத்வத்தை ப்ரதம ப்ரவ்ருத்தியின் மாட்டிழுத்துப் போவதற்கு ப்ரமாணங்கள் தடையாக நின்றன. இனி இரண்டிடத்திலு முள்ளதான ஸாதாரண காரணத்வத்திற்கே காரயித்ருத்வ முகமூடி போட்டு, முற்கூறியபடி ஸாதாரண காரயித்ருத்வமாக்கி மெல்லென அதை ப்ரதம ப்ரவ்ருத்தி யறையிற் கொண்டுபோய் அடைத்துவிடுவோ மென்று ஆலோசித்தார்.

அங்கும் இந்த 'விசேஷித்து'ப் 'பிசாசு "நான் உத்தர கார்யங்களின் கண்ணுள்ள ஸாதாரண காரணத்வத்தை விழுங்கிவிடுவேன் பூச்சாண்டீ! யென்று பயமுறுத்திற்று. ஆயிரம் 'விசேஷித்து' ஒன்று கூடினாலும் ஒரு 'ஸாதாரணத்தை' அசைக்க முடியாதென்று தேறி யிராமல் அகாண்டத்தில் பயந்தார். என்றாலும் தம்மைத் தாமே தேற்றிக்கொண்டு 'ஏ விசேஷித்தே! நீ நல்ல பிள்ளை யல்லவோ! உத்தர கார்ய ஸாதாரண காரணத்வத்தை நீ வாயிற் போட்டுக்கொண்டு விடாதே. அதை நான் சிரமப்பட்டு ஸம்பாதித்தேன். தின்பதற்கென்று திறந்திட்ட வாயை சும்மா மூடுவதற்கு மனமில்லை யானால், இறைந்து கிடக்கிற அசேதந ஸாதாரண்யத்தைப் பலியிடுகிறேன்; கொண்டுபோ' வென்று நயங்காட்டி உத்தர கார்யத்தைப் பற்றிய ஸாதாரண காரணத்தை 'விசேஷித்து' வ்யாக்ரத்தின் வாயிலிருந்து மீட்டு, ப்ரதம ப்ரவ்ருத்தியிடம் கொண்டு சென்றார். அங்கு அஸாதாரண வாடையைக் கூட ஸஹிக்காத ஸாதாரண காரணத்வம் ஏற்கெனவே வெகு காலமாய்த் தனிமையில் உல்லாஸமாய் வாழ்ந்துகொண்டிருந்தது. அது இந்த முகமூடி ஆஸாமியை

உள்ளே விடுவதற்குக் கண்டிப்பாய் மறுத்துவிட்டது. இருந்தாலும், எத்துணையோ ஶ்ரமப்பட்டு ஸம்பாதித்துக் கொணர்ந்ததை உத்தேச பலமின்றிக்கே விட்டுவிட ஸ்வாமிக்கு மனமில்லை போலும். முகமூடியைக் களைந்து தொலையில் எறிந்துவிட்டு, 'இதோபார்; உன் இனத்தான்தான்; சற்று இடங்கொடு' வென்று வேண்டிக்கொண்டு மெல்லென ப்ரதம ப்ரவ்ருத்தியினுள் அதனைப் புகுத்தினர். என்ன பயன்! பழைய பெத்தான் வெறுங் காரணத்வந்தான். ஏதேனுமொரு சூழ்ச்சி செய்து அதை காரயித்ருத்வமென்று அதற்கு நாமகரணஞ் செய்து வைத்தார். ஆக்ஷேப மொன்று மில்லையா! இருக்கும். ஆனல், முன் ஜாக்ரதையாக 'ஸாதாரண' என்பதையும் அப்பெயருடன் சேர்த்துவிட்டார். பொருள் பொருந்தாதே யென்கிறீர்களா? வேண்டாமே; வெறும் பெயராக மட்டுமாவது இருப்பதில் உங்களுக்கென்ன ஆக்ஷேபம்! அது ஸாதாரண காரணத்வத்துக்கே அந்த ஸ்வாமி வைத்திருக்கிற பெயர். நாடோடிப் பிள்ளைக்கும் இராமனென்று பெயர் வைத்தபின், அவனை இராமனென்று சொல்லாமல் வேறென்ன சொல்லி யழைப்பார்கள். ஆனல் இப்படி ஸாதாரண காரயித்ருத்வ மென்பதை ஔபசாரிகமென்று விடலாமே யென்கிறீர்களா! நாம் சொல்லிவிடலாம்; சொல்லியு மிருக்கின்றேம். ஆனல் அக் கூற்றை இந்த ஸ்வாமி ஏற்றுக்கொள்ள வேண்டாமா! அப்படியாயின் எடுத்துக் கொண்டதை ஸாதிக்கட்டுமே யென்று பதற்றமாய்ப் பேசாதீர்கள். ஸாதிப்பதற் காகத்தான் அடுத்தாற்போல் ஶ்ருதப்பிரகாசிகாதி ஸ்ரீ ஸூக்திகளை வரிசை வரி சையாக விரிக்கின்றார். ஆனல் அவற்று ளொன்றிலாவது ஸாதாரணதயா கார யித்ருத்வ மென்கிற பேச்சேயில்லை. 'ஸாதாரண காரணத்வம்', 'ஸாதாரணோபகாரம்' இப்படிதான் வழங்குவது; இது காரயித்ருத்வ மாகாதென்பதை முன்னமே நிரூபித் திருக்கின்றேம்.

இதனிறுதியில் "இப்படி உபக்ரமோபஸஹம்ஹாராப்யாஸங்க ளாகிற தாத் பர்யலிங்கங்களினல் ப்ராதமிக இச்சா ப்ரயத்நங்களுக்குக் காரணமாகிறன் ஈஶ்வர னென்பதே ஶ்ருதப்ரகாசிகாசார்யருடைய திருவுள்ளமென்று தெளிவாகிறது. இப்படி ஸ்பஷ்டமாயிருக்கிற இந்த வாக்யங்களையே நமது ஸம்பாதக ஸ்வாமி உதாஹரித்து, இச்சாஜநகத்வ ரூபமான ப்ரேரகத்வம் ப்ரதம ப்ரவ்ருத்தி தசை யில் பரமாத்மாவுக்கு இல்லை யென்பது இவற்ரு லேற்படுவதாக 5-வது ஸஞ்சிகையில் நிஷ்கர்ஷம் செய்திருப்பது எப்படி உபபந்நம்!' என்றெரு கேள்வியும் போடுகிறர். யாமிவரை யொன்று கேட்கின்றேம். உதாஹரித்த வாக்யங்களினல் ப்ராதமிகேச்சா ப்ரயத்நங்களுக்கு ஈஶ்வரன் ஸாதாரண காரணமாகிரு னென்று தாராளமாய் ஸித்திக்கட்டும். இதனல் அஸாதாரணதயா இச்சாஜநகத்வ ரூபமான ப்ரேரகத்வம் ப்ரதம ப்ரவ்ருத்தி தசையில் பரமாத்மாவுக் கில்லையென்று ஸம்பாதக ஸ்வாமியினல் ப்ரதிஜ்ஞாதமான அர்த்தத்துக்கு நேரிடும் பாதகமென்ன! இவர் காலாத்ருஷ்டாதி ஸாதாரணமான ஸாமாந்ய ஹேதுத்வத்தையும் ஸுஸாதாரண காரண ஸாரங்களான ப்ரேரயித்ருத்வ காரயித்ருத்வாதிகளையும் பிரித்தறியமட்டாமற் குழப்புவதைத் தமக் குப் பாதகமென்று உணராமல் விபரீதமாக மாற்றிப்பேசுகின்ருர். இம்மட்டா! 'இல்லை' யென்கிற பதத்தின் ஸ்தாநத்தில் 'உண்டு' என்று நிகமநஞ் செய்வதன்றே உதா ஹ்ருத வாக்யாநுகுணமாகு மென்கிருர். இவர் சொல்லட்டும். அப்படிச் சொல்வது இந்த ஸ்வாமியின் அபிப்ராயத்திற்கு அநுகுணமே யன்றி, உதாஹ்ருத ப்ரமாணம் அநுகுணமாகா தென்பதை வாசக மகாசயர்கள் தாமாகவே தெரிந்துகொள்வார்கள். இவையெல்லாவற்றையுந் தள்ளிவிட்டாலும், ஸம்பாதக ஸ்வாமி ஆசார்ய ஸ்ரீஸூக்தி களின் ஆநுகுண்யத்தைப்பற்றிச் சிந்திக்காமலே எழுதிவிட்டதாக ப்ரமித்து, இவர் இப்படி ப்ரௌட பாவனையில் திருத்த முற்பட்டது ஸூதராம் தகாத செயலென்ப தும் நண்பர்களின் உள்ளத்தில் தைக்காமற் போகாது. இந்த ஸ்வாமியின் ஸமுசித

உக்தியில் குறைகூறுவதற்குப் பயன் பெருத வீண்பாடு படுவதைவிட, தாம் சொல்லும் விஷயத்திற்கு ப்ரமாண யுக்திகளோடு பொருத்த மிருக்கிறதா வென்று சிந்தித்திருந்தால் ப்ரமாதங்கள் இவ்வளவில்லாமல் சற்றேனுங் குறையச் செய்திருக்கலா மென்று யாம் இந்த ஸ்வாமிக்குப் பரிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இது கிடக்கட்டும். அவசிஷ்டாம்சத்ததைக் கவனிப்போம். அடுத்தபடியாக ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்ஜந தத்வ்யாக்யாந ஸ்ரீ ஸூக்திகளை இந்த ஸ்வாமி எடுத்துக் கொண்டு ஏதேதோ ஸாதிக்கின்ருர். ஆனல் அதற்கு நாமிப்போது புதிதாகச் சொல்லவேண்டிய தொன்றுமில்லை. ஏற்கனவே அது விஷயமான இந்த ஸ்வாமியின் வ்யாக்யாநத்தின்மீது நாம் சொல்லியிருக்கிற குறைகளை நிவர்த்திக்கும் விதமாக இந்த ஸ்வாமி இவ்விடத்தில் நூதநமாக ஒன்றையும் ஸாதித்துவிடவில்லை. ஆதலால் இதை இம்மட்டோடு நிறுத்திக்கொண்டு, இனி ஸ்ரீதேசிகனுக்கும் ஸ்ரீ ஶ்ருதப்ரகாசிகாசார்ய ப்ரப்ருதிகளுக்கும் இவ்விஷயத்தில் அபிப்ராயபேத முளது இல்லையென்கிற இவ்விரண்டு பெரியார்களின் ஆசய ஸாரத்தை ப்ராப்த காலத்தில் விமர்சிப்போம்.

இதி ஸ்ரீ:

ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமியினுடைய அபிமதத்திற்கு ஸாதகங்களான ப்ரமாண வசநங்கள்.

𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍁 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍁 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣 𑌕𑍃𑌤𑌂 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌂 𑌉𑌦𑍍𑌯𑍋𑌗𑌮𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍀 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌤𑌦𑌨𑍁𑌮𑌤𑌿𑌦𑌾𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑌿 | 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌮𑌤𑌿𑌮𑌨𑍍𑌤𑌰𑍇𑌣𑌾𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌨𑍋𑌪𑌪𑌦𑍍𑌯𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 [𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌷𑍍𑌯𑌂 𑌪𑌰𑌾𑌯𑌤𑍍𑌤𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑌂]

𑌉𑌦𑍍𑌯𑍋𑌗𑌮𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑍇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌦𑌶𑌾𑌯𑌾𑌂 𑌪𑌰𑌸𑍍𑌯𑍋𑌦𑌾𑌸𑍀𑌨𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌂 | 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌮𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 | 𑌉𑌤𑍍𑌤𑌰𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌪𑌿𑌤𑌦𑌨𑍁𑌮𑌤𑌿𑌦𑌾𑌨𑍇𑌨𑍋𑌪𑌪𑌦𑍍𑌯𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 [𑌶𑍍𑌰𑍁𑌤𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌕𑌾]

𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌕𑌤𑍍𑌵𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑌨𑍁𑌗𑍍𑌰𑌾𑌹𑌕𑌤𑍍𑌵𑌂 𑌕𑍃𑌤𑌿𑌵𑌿𑌷𑌯𑍇 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌕𑌤𑍍𑌵𑌂 | 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌔𑌦𑌾𑌸𑍀𑌨𑍍𑌯𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌾𑌹𑌕𑌤𑍍𑌵 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌕𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑍍𑌯𑌃 | 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍌𑌦𑌾𑌸𑍀𑌨𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑌵𑌂 | 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌾𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌯𑍋𑌰𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌂 𑌜𑍀𑌵𑌃 | 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌚 𑌤𑌯𑍋𑌰𑍁𑌦𑌾𑌸𑍀𑌨𑌃 𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌂 𑌨𑌿𑌯𑌮𑌨𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑌃 𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌸𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌕𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌤𑌿 𑌨𑌤𑌦𑍍𑌨𑌿𑌷𑍍𑌪𑍍𑌰𑌸𑌂𑌜𑌨𑌂 𑌨𑌿𑌯𑌨𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌪𑌶𑍍𑌚 𑌸𑌙𑍍𑌗𑍋𑌽𑌭𑍍𑌯𑌪𑌿𑌹𑌿𑌤𑌃 | 𑌯𑌾𑌵𑌤𑌾 𑌵𑌿𑌧𑌿𑌨𑌿𑌷𑍇𑌧𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑌰𑍍𑌥𑌕𑍍𑌯𑌂 𑌪𑌰𑌿𑌹𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 | 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂𑌭𑌾𑌵𑌃 . 𑌪𑍍𑌰𑌸𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌨𑌸𑍍𑌤𑌾𑌤𑌸𑍍𑌯𑍈𑌵𑍇𑌤𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌵𑌹𑌃 [𑌪𑌰𑌾𑌯𑌤𑍍𑌤𑌾𑌧𑌿𑌕𑌰𑌣 𑌶𑍍𑌰𑍁𑌤𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌕𑌾]

परमात्मायत्तमेव कर्तृत्वं, तच्च जीवेन स्वभावाद्याकृतं प्रयत्नमपेक्ष्य तदनुमतिदानेनेति विधिनिषेधयोर्वैयर्थ्यम् [वेदान्तदीपः]

तत्रापेक्ष्य तदानुमत्य इत्यादि । [तत्त्वसारः]

अत्र, चेतनानां प्रयत्नप्रवृत्तौ, अपेक्ष्य, सर्वाधार
सहितवशः साधारणकारणतया उदासीनो नाहं क्वा
[इति तद्व्याख्या]

चेतनक्षेत्रज्ञाः तदाहितशक्तयः तत्प्रदिष्टकरणकलेबरादिकाः तदाधाराः स्वयमेवेच्छाज्ञानप्रयत्नान् प्राप्य पुण्यापुण्ये कर्मणी उपाददते [शास्त्रार्थदीपिका]

प्रथमप्रवृत्तौ भगवानुदासीनः द्वितीयादिप्रवृत्तावनुमन्ता स्वभक्तानां स्वद्वेषिणाञ्च श्रेष्ठानिष्टकर्मसु कारयितेति भगवतोऽवश्यापेक्ष्यत्वम् । प्रथमं जीवस्य करणकलेबरादिकं दत्वा कियम् कर्षिप्रीतिवशादुदासीनो भगवानेव [न्यायपरिशोधिका]

प्रयत्नपूर्वकं जीवकर्तृत्वं तदपेक्षस्तु कर्मबाह्यकृत उपकरणप्रदानापेक्षितं तच्च जीवेन केवलेन सम्पादयितुमशक्यं ; अतस्तत्सम्पादनद्वारा स्वयमेव कारयति । तद्दृष्टान्तेयथाप्रवृत्तिरिति [भाष्यप्रकाशः]

प्रयत्नपूर्वकं जीवकर्तृत्वं कर्म तस्याशक्तस्य स्वयमेव कारयति । यथा पात्रं यतमानं बालं वहन् मार्गदोषान् पश्यन्नपि तत्प्रयत्नाभिनिवेशं दृष्ट्वा तमेव कारयति [श्रीसूक्ष्मभाष्यम्]

इत्यादीनि बहूनि प्रमाणवचांसि सन्ति ।

इति श्रीः

பிழை திருத்தம்

ஸஞ்சிகை 11-பக்கம் 383-ல், ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்திர மஹா தேசிகன் விஷயமான அந்தாதி ப்ரபந்தத்தில் 9-வது பாசுரத்தின் அவதாரிகை :—

இப்படி ஸ்வாமியைப் பகவதவதாரமென்று ஸாதித்துவிட்டுப் பகவானை, ''மாதா பிதா ப்ராதா'' என்று ஸர்வ விதமான பந்துவாக உபநிஷத்தில் சொல்லியிருப்பதால், அவ்விதமே பகவ தவதாரமான ஸ்வாமியும் சிஷ்யர்களுக்கு ஸர்வ விதமான பந்துவென்று இப்பாசுரத்தில் அருளிச் செய்கிறார்.''

[இதனை அந்த இடத்தில் சேர்த்துப் படிக்க வேண்டுகிறேன். ரா. ப.]

ஸ்ரீ:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

செய்திகள்

[வித்வான் அம். வ. நரஸிம்மாசாரியர் ஸ்ரீகார்யம்]

---

(1)

ஸ்ரீ அழகியசிங்கரின் திருக்கோவலூர் மங்களாசாஸனம்

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி பிருதலங்கிருத ஸ்ரீ அழகியசிங்கர், ஸ்ரீ எம்பெருமானர் ஜீயர் ஸாம்ராஜ்ய மூர்த்தாபிஷிக்தரான ஸ்ரீ ராகவாசார்யர் ஸ்வாமியின் ஏஜண்டும் திருக்கோவலூர் தாசில்தார் ஸ்ரீ. உ. வே. நாராயணசாரியர் ஸ்வாமியும் கள்ளக்குரிச்சி வக்கில் ஸ்ரீ, உ. வே. T. A. தாதாசாரியர் ஸ்வாமியுமாகிற இவர்களாலே பூர்வமே செய்யப்பட்டிருந்த ப்ரார்த்தனைக்கு இணங்கி புரட்டாசிமீ 14வ (3-9-42) புதன்கிழமை திருக்கோவலூருக்கு எழுந்தருளினர். அன்று காலை அனுதினமும் பெருமாள் திருவடி ஸம்பந்தம் பெற்றபடியால் கங்கைக்கும் மேல்பட்டதான பிநாகினியில் அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஸ்வாராதநான சிங்கப்பிரான் ஸுஹிரமநத்தை முடித்துக்கொண்டு, அச்சிங்கவேழ்குன்றமுடையானுடனும் ஸகல பரிஜன பரிச்சதங்களுடனும் எழுந்தருள, ஸ்ரீ எம்பெருமானர் ஜீயர் ஸ்வாமி நிய மிக்க கீழ்கோபுர வாசலின்கண் அரவணம் கொண்டு அருளப்பாடிட்டு ஸமர்ப்பிக்க ஸ்ரீ அழகியசிங்கரும் "தந்யோஸ்மி" என்று ஸ்வீகரித்து எழுந்தருள, த்வஜஸ்தம்ப கோபுர வாசலில் ஸ்ரீசடாரியை சகல பிருதோடு எழுந்தருளப்பண்ணி நிற்க ஸ்ரீஅழகியசிங்கர் மிக்க பக்தியோடு ஸஹஸ்ரவாரம் தண்டன் ஸமர்பித்து நிற்க, திருச்சின்னத்துடன் அருளப்பாடிட்டு திருமாலை பரிவட்டத்துடன் ஸ்ரீசடாரி ஸாதிக்கப்பட்டது. பிறகு முறையே த்வாரபாலகர்கள் வரை பிருதுகளை நிறுத்தி உள்சென்று பெருமாளை மங்களாசாஸனம் செய்து நிற்க, தீர்த்தம் திருமாலை பரிவட்டம் ஸ்ரீசடாரிகளை அருளிப்பாடுடன் ப்ரஸாதிக்க அதை ஸ்ரீ அழகியசிங்கர் அவ்வரிசைகளை முறையே பக்தியோடு பரிக்ரஹித்து அனேக ப்ரதக்ஷிண ப்ரணாமாதிகளைச் செய்து தாயார் ஸன்னிதியிலும் இப்படியே மங்களாசாஸநம் செய்து நியமனம்பெற்று ஸகல பரிவாரங்களோடும் தமது நிவாஸார்த்தமாய் க்லுப்தமான ஸ்தலத்துக்கு எழுந்தருளியாச்சுது. பிறகு ஸமஸ்த ப்ரஸாதங்களோடு கோயில் துரையார் ஸ்ரீஅழகிய சிங்கரை ஸேவிக்க, பிறகு அவர்களுக்கு யதாவத்தான ஸம்பாவனைகளை செய்யப்பட்டன.

---

(2)

ஸ்ரீ அழகியசிங்கரின் திருவஹீந்த்ரபுர மங்களாசாஸநம்

ஸ்ரீ அழகியசிங்கர் திருக்கோவலூர் மங்களாசாஸனத்துக்குப் பிறகு அங்கிருந்து ஆவியூர் பெண்ணவலம் வீரபபெருமாநல்லூர் பன்னுருட்டி முதலான அக்ரஹாரங்களுக்கு எழுந்தருளி ஆங்காங்கு சிஷ்யகோடிகள் உஜ்ஜீவிக்குமாறு அவர்கள் ப்ரார்த்தனைக்கிணங்கி பஞ்சஸம்ஸ்காரம் பரஸமர்ப்பணம் முதலியதை அனுஷ்டித்து ஆங்காங்கு பக்தர்களைக் கொண்டு ஸ்ரீ சிங்கப்பிரானின் நித்யாராதனாதிகளை நிர்வஹித்துக்கொண்டு புரட்டாசிமீ 23வ (9—10—42) வெள்ளிக்கிழமை திரு

வஹீந்திரபுரத்துக்கு ஏள்ளி, ஸ்ரீ தேசிக்ன் திருமாளிகையில் நம் சிங்கவேழ்குன்றத்துக்குச் செல்வனுக்கு அபிகமனம் செய்தருளினன். பிறகு ஸ்ரீ அழகியசிங்கர் பரிஜன பரிவாரங்களுடன் ஸ்ரீ தேவநாதன் மங்களாசாஸனத்துக்கு எழுந்தருள திருவீதியின் நடுபாதியில் சத்ரசாமரங்களுடன் தோளுக்கினியானில் ஸ்ரீசடாரியை எழுந்தருளப்பண்ணி மாலை பரிவட்டத்துடன் அருளப்பாடிட்டு ஸ்ரீசடாரியை ஸாதித்தார்கள், ஸ்ரீ அழகியசிங்கரும் ஸ்ரீ தேவநாதன் ஸன்னிதிக்கு எழுந்தருளி பெருமாளை ஆபாதசூடம் ஸேவித்து கண் பனிசோர ரோமாஞ்சத்துடன் நின்றனுபவித்தார். பிறகு திருச்சின்னம் பரிமார அருளிப்பாடுடன் தீர்த்தம் சடாரி முதலிய வரிசைகளை ப்ரஸாதிக்க ஸ்ரீ அழகியசிங்கரும் ஸ்வீகரித்து விடைபெற்று ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன், தாயார், ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் ஸன்னிதிகளில் மங்களாசாஸனம் செய்து ஸ்ரீ தேசிகன் திருமாளிகைக்கு எழுந்தருளினர். 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸமர்ப்பித்த ஸ்ரீ தேசிகன் வைர திருமண்காப்பையும் ஸேவை பண்ணி வைத்தார். கோயில் துரையார்க்கு திட்டப்படி ஸம்பாவனைகளும் அளிக்கப்பட்டன.

---

(3)

ஸ்ரீ அழகிய சிங்கரின் ஸ்ரீ மதுராந்தக மங்களாசாஸனம்

ஸ்ரீ அழகியசிங்கர் திண்டிவனமிருந்து ஓலக்கூர் சிறுதாமூர் பழவேரி தையாறு சோகநல்லூர்பாதிரி முதலிய ஸ்ரீ ஸன்னிதியில் ஹக்திமான்களின் ஸ்ரீமத் அக்ரஹாரங்களை அலங்கரித்து பிறகு ஸ்ரீ மதுராந்தகத்து ஸ்வாமிகளின் ப்ரார்த்தனையைக் கிணங்கி, ஸ்ரீ மதுராந்தகம் எழுந்தருளினர், ஐப்பசிமீ 18உ (3—11—42) செவ்வாய்க்கிழமை ஸ்ரீ அழகியசிங்கர் மதுராந்தகத்தின் ஸமீபமான சிலாவட்டத்தில் அபிகமனம் செய்தருளி எழுந்தருளும்போது பூர்ண கும்பத்துடன் ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்கிருத காலேஜ் அத்யக்ஷர் ஸ்ரீ உவே திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமியை முன்னிட்டுக்கொண்டு ஸ்ரீ மதுராந்தகம் ஸ்வாமிகள் எதிர்கொண்டு எழுந்தருளப் பண்ணினர்கள். பிறகு கைக்கோளப்பைட்ட மதகினருகில் ஸ்ரீ சடாரியை எழுந்தருளப் பண்ணி அருளப்பாடிட்டு மாலைபரியட்டதுடன் ஸ்ரீ சடாரியை ஸாதித்தார்கள். ஸ்ரீ அழகிய சிங்கரும் யதேஷ்டாஸி என்று ஸ்வீகரித்தார். பிறகு ஸகல பிருதோடும் சத்ர சாமரங்களோடும் அநந்த பரிஜன பரிச்சதத்தோடும் அழகிய வாத்யங்களோடும் ஸ்ரீ ஹவிஷ்மத்ரஸரர்களுடைய யதிராஜஸ்தவத்தின் பாராயணங்களோடும் ஆயிரம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் சூழ சிலர் ஸ்ரீதேசிகஸ்தோத்ராதி பிருதுகளை உத்கோஷிக்க, ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீ ஸன்னிதி கோபுர வாசலுக்கு எழுந்தருளினர். பிறகு த்வஜஸ்தம்பத்தினடியில் தண்டனிட்டு ஸ்ரீ விபண்டக மஹர்ஷிக்கு அருள் புரிய புஷ்பக விமானத்திலிருந்து பெரிய பிராட்டியாரின் கைபிடித்து இரங்கிய ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனை ஸேவிக்க பெருமாள் ஸன்னிதிக்கு எழுந்தருளினர், அங்கு தசரதன் பெற்ற மரகத மணியை ஸேவித்து, ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனை ஸ்தோத்திரம் செய்து உபஹாரங்களையும் ஸமர்ப்பித்தவாரே ஆபாத சூடம் கர்பூர நீராஜனத்தினல் தனி வீரனை ஸேவித்து நின்ற பிறகு, அருளப்பாடிட்டு தீர்த்த ப்ரஸாத ஸ்ரீ சடாரி முதலிய வரிசைகளை ஸமர்பிக்க அவைகளை ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்வீகரித்து அப்படியே ஸ்ரீ ஜனகவல்லித்தாயார் ஸன்னிதியையும் ஸ்ரீ ஆண்டாள் ந்ருஸிம்மன் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ மந்நிகமாந்த மஹா தேசிகன் ஸன்னிதிகளிலும் மங்களாசாஸனம் செய்தருளினர். பிறகு ஸ்ரீ அஹோபிலமடத்துக்கு எழுந்தருளினர். பிறகு ஸ்ரீ அஹோபிலமட திவ்யாஸ்தானத்தில்

28 வது பட்டத்தில் மூர்த்தாபிஷித்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி விஶிஷ்ட ஸ்ரீ அழகிய சிங்கரின் பிருந்தாவனத்துக்கு எழுந்தருளி மங்களாசாஸனமும் நடந்தது.

---

(4)

41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கருடைய வர்ஷாராதநம், ஸ்ரீரங்கம்

[ஸ்ரீ. உப. என். ராமஸ்வாமி ஐயங்கார்]

பூலோக வைகுண்டமென்கிற ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தில், ஸ்ரீ அஹோபிலமடம் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்து பரமபதமடைந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்ர மஹாதேசிகனுடைய வர்ஷாராதந மஹோத்ஸவம் நிரம்பவும் விமர்சையாய் ஶிஷ்ய கோஷ்டிகளால் கொண்டாடப்பட்டு, அர்ச்சா ரூபியாக எழுந்தருளப்பட்டிருக்கும் ஸ்ரீ அழகியசிங்க ருக்கு மர்யாதை முதலியவைகள் செய்வித்து, ஜட்ஜு ஸ்ரீ. உப. ராகவய்யங்கார், பூரட்டாதி ஸ்வாமி ஸ்ரீநிவாஸ ஐயங்கார் முதலியவர்களால் விசேஷமாக ததீயாராத நம் செய்விக்கப்பெற்று, மறுதினம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் கோஷ்டீபுரம் ஸ்ரீ. உப. ராய தேசிகாசார்ய ஸ்வாமியால் உபந்யாஸமும் விடாயாத்தி உத்ஸவமும் கொண்டாடப்பட்டு, ஆராதநம் பூர்த்தி அடைந்தது.

---

(5)

திருவெவ்வுளூரில் பகவத்கீதோபந்யாஸம்

[ஸ்ரீ. உப. டி. ஸி. வேதாந்தாசார்யார்]

திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸம்ஸ்க்ருத பாடஶாலை ஸபை ஆதரவின் கீழ் பெரியோர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, ப்ரஹ்ம ஸ்ரீ. ஆசார்யதர்மதுரந்தர மல்லூர். நல்லான் சக்ரவர்த்தி, சக்ரவர்த்தி ஐயங்கார் அவர்கள் அக்டோபர் மீ 6-தேதி தர்மஸ்வரூப மென்கிற விஷயத்தைப்பற்றி மிக அழகாகவும் தெளிவாகவும் உபந்யஸித்தார். அப்போது ப்ரஹ்ம ஸ்ரீ. M. S. திருமலை ஐயங்கார் அவர்கள் அக்ராஸனம் வஹித்தார். அவ்வரிய உபந்யாஸத்தைக்கேட்டு ஆநந்தித்த வைதிக லௌகிக மஹான்களின் ப்ரார்த்தனைக்கிணங்கி அந்த ஸ்வாமியே அக்டோபர் மீ 9-தேதி டெபுடிகலெக்டர் ஸ்ரீ ராகவய்யங்கார் அவர்கள் அக்ராஸனத்தின் கீழ் ஸ்ரீ ஶரணாகதி விஷயத்தைப்பற்றி செய்த ஸபாரஞ்சகமான ஓரரிய உபந்யாஸத் தைக் கேட்டு ஆநந்த பரிதர்களான ஸபையோர்களுடைய வேண்டுகோளுக் கிசைந்து அக்டோபர் மீ 11-தேதி முதல் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீமத் பகவத்கீதா விஷயங் களைப் பற்றி உபந்யஸிக்க ஆரம்பித்து ஸ்ரீ கீதாமஹாத்ம்யம் முதலாக க்ரமமாக நவம்பர் மீ 14-தேதி வரையிலும் மிக்க அழகாக, எல்லா ஶாஸ்த்ரார்த்தங்களும் ஸ்ரீ கீதையிலிருப்பதாகத் தெளிவுற விளக்கி உபந்யஸித்தார். மறுநாள் நவம்பர் 15-தேதி காலை 7 மணி முதல் 3 மணி காலம் 18-ம் அத்யாயத்தை ப்ரஸங்கம் செய்து, மாலை 4 மணி முதல் 6 மணி வரையில் சரமஶ்லோகத்தின் ஸாராம்ஶத்தையும், ஸ்ரீராமாயண சரமஶ்லோகம், ஸ்ரீ வராஹசரமஶ்லோகம் முதலியவைகளை ஒன்று சேர்த்து விளக்கினார். ஸ்ரீ அஹோபில மடத்தில் அன்றையதினம் ஸ்ரீ வீரராகவ னுக்கு நிவேதிதமான குடான்னம் முதலிய பணியாரங்களின் விநியோகம் நடந்தது, பிறகு சாத்துமுறை நடந்து கடைசியில் தாம்பூல சர்வணத்துடனும் வேதகோஷத் துடனும் உத்ஸவம் விஶேஷமாக நடந்தது.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ ந்ருஸிம்ம ப்ரியையின் அப்த பூர்த்தி

இந்த ஸஞ்சிகையுடன் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியைக்கு முதல் ஸம்வத்ஸரம் பூர்த்தி அடைகின்றது. ஸ்ரீ அழகிய சிங்கர், இம்மாதிரி பத்ரிகை ஒன்றை நடத்த வேண்டுமென்று ஸங்கல்பித்தபொழுதே க்ருபா மாத்ர மநோ வ்ருத்தியாய்த் தாஸனை ஆஹ்வாநம் செய்து, 'நீ இந்தக் கைங்கர்யத்தை நடத்தி வா' என்று நியமித்தருளினர். அடியேனும் விஷயத்தின் கௌரவத்தையும் அடியேனுடைய ஜ்ஞாந ஶக்திக் குறைவையும் கொஞ்சமேனும் பாராமல் 'ஸ்வாமி நியமநம் அநதிலங்கநீயம்' என்று அந்த நியமநத்தை ஸ்வீகரித்தேன். இப்பொழுது ஒரு ஸம்வத்ஸரம் சென்றுவிட்டது. ப்ராயேண ஆரம்பம் முதல் முடிவு பர்யந்தம் ப்ரயோகம் முழுவதும் தோஷ துஷ்டமாகவும் வித்வாங்களுக்கு எவ்வித பரிதோஷத்தையும் ஜநிப்பியாததாகவும் இருக்கலாம். அப்படி இருந்தபோதிலும், கம்பீரமான மநோ பாவத்தை உடைய மஹாங்கள் "न कश्चिन्नापराध्यति" என்னும் ந்யாயத்தை உணர்ந்து, அநுக்ரஹாதிஶய வ்யஞ்ஜகமான அவலோகந தாநத்தைச் செய்து இந்தக் கைங்கர்யம் இனி நிர்த்துஷ்டமாகவும் நிர்விக்நமாகவும் எல்லாருக்கும் ரஞ்ஜகமாகவும் நடைபெறும்படிக் கடாக்ஷிக்க வேணுமென்று ஸப்ரஶ்ரயம் ப்ரார்த்திக்கிறோம். ஸ்ரீ அழகியசிங்கருடைய நியமநமே நமக்கு ப்ரமாணம்.

धनञ्जयनयाद्दासस्वामिना प्रतिबोधितः ।
अशक्तिकृतवैमुख्यान्निवृत्तः पुनरेधते ॥

* * * *

ஸ்ரீ மதுராந்தகம் ஶாஸ்த்ர பாடசாலையின் உபயோகத்தை உத்தேஶித்து நிர்மாணம் செய்யப் பெற்றிருக்கும் புதிய கட்டிடத்தின் க்ருஹ ப்ரவேஶ மஹோத்ஸவம், சென்ற ஐப்பசி மாஸம்

ஸ்ரீ மதுராந்தகம் பாடஶாலா க்ருஹப்ரவேஶம்.

24-உ திங்கட்கிழமை பின்னிரவு 5 மணிக்குக் கந்யா லக்நத்தில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய அநுக்ரஹ விஶேஷத்தால் நிர்விக்நமாக நடைபெற்றது. கந்யா லக்நம் வந்தவுடன் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு ஶுபமான வாத்யம் வேதகோஷம் முதலியவைகளுடன் தமது பரிஜந பரிச்சதங்களும் அநேக வைதிக லௌகிகப் பெரியோர்களு மடங்கிய மஹத்தான ஸ்ரீ வைஷ்ணவ ஸமாஜத்தால் அநுயாத்ரை செய்யப்பட்டவராய் அந்தப் புதிய கட்டிடத்தினுள் ப்ரவேஶித்தார். பிறகு வாஸ்து ஹோமம் முதலிய ஶாந்திகளும் பூர்ணமாக நடைபெற்றன. அப்பொழுது அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்த எல்லாரும் சந்தநம் புஷ்பம் தாம்பூலம் முதலிய புரஸ்காராதிகளால் ஸத்கரிக்கப்பட்டார்கள். அன்று முழுவதும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ரும்ஸிஹன் அங்கேயே எழுந்தருளியிருந்து, அபிகமநம் இஜ்யை முதலிய ஆராதநங்களைக் கண்டருளினார். அபிகமநாராதநம் முடிந்தவுடன் ஸ்ரீ அழகிய சிங்கர் ஶுபமான சில ஸூக்திகளால் பாடஶாலையின் நோக்கங்களையும் அதை நடத்தும் ரீதியையும் விஸ்தரித்து விளக்கிப் பாடஶாலை மேன்மேல் அபிவ்ருத்தமாகி மஹா ஜநங்க ளெல்லாருக்கும் உண்மையான ஜ்ஞாநத்தைக் கொடுத்துப் பேருபகாரத்தைச் செய்துவரவேண்டு மென்று ஸ்ரீ ஶரண்யனை ப்ரார்த்தித்தார். அன்று ஸாயம் ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளியிருந்த திருமாளிகையில் அநேக ப்ரபுக்களும் வித்வாங்களும் சேர்ந்திருந்தபொழுது பாடசாலையின் ப்ரவசநகர்த்தாக்களால் ஸ்வாகதரூபமாக இயற்றப்பெற்றிருந்த அநேக ஸம்ஸ்க்ருத ஶ்லோகங்களும், மற்றும் சில தமிழ் வித்வான்கள் செய்திருந்தத் தமிழ்ச் செய்யுட்களும் படிக்கப்பட்டன. இரவில் புதிய கட்டிடத்தில் ஸ்ரீ கண்ணன் கண்டருளின டோலோ த்ஸவத்துடன் உத்ஸவம் முடிவு பெற்றது.

இந்தப்பாடஶாலையில் இப்பொழுது சற்றேறக்குறைய அறுபது வித்யார்த்திகளும் பத்து ப்ரவசநகர்த்தாக்களும் இருக்கிறார்கள். இத்தேஶ வாஸிகளான வித்வாங்களுள் மிக ப்ரஸித்தராயும் ஆத்ம குண பூர்த்தியுள்ளவராயு மிருக்கும் திருக்கோட்டியூர் வித்வாங் ஸ்ரீ. உப. ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி இதன் அத்யக்ஷ பதவியை வஹித்து வருகிறார். ஶாஸ்த்ரங்களுள் ந்யாயமும் வ்யாகரணமும் ப்ரவசநம் செய்யப்பட்டு வருகின்றன. வித்யார்த்திக ளெல்லாருக்கும் தர்மமாக அந்நம் அளிக்கப்பட்டு வருகின்றது: அதற்காக த்ருப்திகரமான ஒரு போஜந ஶாலையும் நிர்மாணம் செய்யப்

பட்டிருக்கின்றது. ராஜாங்கத்தாருடைய உதவியை எதிர்பாராமலே இந்தப் பாடசாலையின் நிர்வாஹம் முழுவதையும் ஸ்ரீ அழகிய சிங்கரே பரிக்குமாறு ஸம்விதாநங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. சற்றேறக்குறைய மாஸம் ஒன்றுக்கு ஆயிர ரூபாய் பர்யந்தம் செலவாகின்றது. இது எக்காலத்திலும் நிர்விக்நமாக நடைபெற்று வரும்படியான வ்யவஸ்தைகளெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் இதைக் குளிரக் கடாக்ஷித்தருள வேணுமென்பதே நமது ப்ரார்த்தநை.

* * * * *

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள "வைராக்ய பஞ்சகம்" என்னும் க்ரந்தத்திற்குத் திருவஹீந்த்ரபுர வாஸியான ஸ்ரீ திருமலை ஈச்சம்பாடி சடகோபாசார்ய ஸ்வாமியால் ஸம்ஸ்க்ருதத்தில் ஒரு வ்யாக்யாநம் எழுதப் பெற்று "உத்யாந பத்ரிகை" என்னும் ஒரு ஸம்ஸ்க்ருத பத்ரிகையில் ஸ்வல்ப காலம் முன் ப்ரகாசமடைந்துவந்தது. அது இப்பொழுது ஒரு தனிப் புஸ்தக ரூபமாக வெளி வந்திருக்கின்றது. அதில் ஒரு ப்ரதியை நாம் வரப்பெற்றோம்; அதைப் படித்து மிக்க ஆநந்தத்தையும் அடைந்தோம். ஸ்ரீ சடகோபாசார்யர் ச்லாக்யமான ஸம்ஸ்க்ருதஜ்ஞாந முள்ளவர்; நமது ஸித்தாந்தத்தின் ஸாராம்சத்தை நன்றாக உணர்ந்தவர்; ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளின் ரஸ பரத்தின் ஸேவையால் காலத்தைக் கழிப்பவர். இப்படிப் பட்ட ஒரு மஹான், தமக்கு அத்யந்தம் ப்ரியரான ஆசார்யனுடைய திவ்ய ஸூக்திகளுக்குத் தாத்பர்ய விவரணம் செய்தால், அந்த விவரணம் ச்லாக்யமாக இருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆங்காங்கு வெளியிடப்பட்டிருக்கும் பதப்ரயோக ஸ்வாரஸ்யமும், சுக ப்ரஹ்மம் போன்ற வைராக்ய நிஷ்டர்களுடைய ஸூக்திகளுக்கும் ஸ்ரீ தேசிகனுடைய ஸூக்திகளுக்குமுள்ள ஸாத்ருச்யாம்சத்தை ஸூசிப்பித்திருக்கும் அழகும் ஸஹ்ருதயர்களுடைய ஹ்ருதயத்தை ஆவர்ஜநம் செய்யத் தகுந்ததாகவே இருக்கின்றன.

வைராக்யபஞ்சகம்: ஸ்ரீ. தி. ஈ. சடகோபாசார்யருடைய உரையுடன்

"वहु व्याहरताऽनेन न किञ्चिदपशब्दितम्"

என்கிறபடி அபசப்தம் என்னும் தோஷ கந்தமே யிராத லளிதமான ஸம்ஸ்க்ருதத்தில் கம்பீரமான தாத்பர்யங்கள் ப்ரகாசிக்கப்பட்டிருப்பதும் இந்த வ்யாக்யாநத்திற்கு ஒருவித அஸாதாரண சோபையைக் கொடுக்கின்றது. இம்மாதிரி அவர் ஒரு

க்ருதி செய்ய ஆரம்பித்தது பற்றி நாம் அவரை ஹார்த்தமாக ஸபாஜநம் செய்கின்றோம்.

ஆறு ஶ்லோகங்கள் அடங்கிய இந்த க்ரந்தத்திற்கு "வைராக்ய பஞ்சகம்" என்று பெயரிடப்பட்டிருப்பதன் காரணத்தை விளக்கும் இடத்தில் ஸ்ரீ. ஶடகோபாசார்யர் பின் வருமாறு எழுதி இருக்கிறார். "முதலில் வித்யாரண்யரால் அனுப்பப்பட்ட பத்ரிகைக்கு "க்ஷோணி" இத்யாதியான ஶ்லோகம் ஸ்ரீ தேசிகனால் ப்ரத்யுத்தரமாக அனுப்பப்பட்டது. ஸ்ரீ தேஶிகனுடைய மநஸ்ஸின் பரிபாகத்தை உள்ளபடி அறியாத வித்யாரண்யர், அந்த ஶ்லோகத்திற்கு வேறு அபிப்பிராயத்தை உத்ப்ரேக்ஷித்துக்கொண்டு மறுபடியும் ஒரு பத்ரிகையை அனுப்ப, அதைப் பார்த்த ஸ்ரீ தேசிகன், முதலில் தாம் அனுப்பிய ஸந்தேஶத்தின் தாத்பர்ய விவரணமாக "सिलम्" இத்யாதியான ஐந்து ஶ்லோகங்களை ரசனை செய்து அவைகளை வித்யாரண்யருக்கு அனுப்பினார். இந்த ஐந்துமே 'வைராக்ய பஞ்சகம்' என்னும் க்ரந்தமாகும்." இதுதான் அவர் எழுதி இருப்பது. நாம் பெரியோர்களிடமிருந்து கேட்டுள்ள விவரணமோ, இந்த விவரணத்திலிருந்து ஒரு அம்ஶத்தில் ஸ்வல்பம் வேறு பட்டதாக இருக்கிறது.

தமது யோக்யதைக்கு அநுகுணமாக ராஜ ஸதஸ்ஸில் புரஸ்காரம் நடக்குமோ நடக்காதோ என்னும் ஶங்கையினால் ஸ்ரீ தேஶிகன் இம்மாதிரி பதில் எழுதி விட்டாரென்று உத்ப்ரேக்ஷித்த வித்யாரண்யர், தாமே மறுபடியும் ஒரு பத்ரிகையை அனுப்பியதாக ஸ்ரீ சடகோபாசார்யருடைய அபிப்ராயம்; தாமே அனுப்பாமல், ராஜாவைக் கொண்டே மிக்க கௌரவத்துடன் ஸ்வாமியை ஆஹ்வாநம் செய்து ஒரு பத்ரிகையை அவர் அனுப்புவித்தாரென்பது நாம் கேள்விப்பட்டிருக்கும் ரீதி. இதுவே ஸம்பாவிதமாக இருக்கலாமோ என்பதற்கு ஒரு லிங்கமும் இருக்கின்றது. அதாவது, முதல் ஶ்லோகத்தில் காணப்படும் ராஜ நிந்தை மற்றை ஐந்து ஶ்லோகங்களில் காணப்படாமல் இருப்பதே. ஸாக்ஷாத்தாக ராஜாவினாலேயே செய்யப்பட்டுள்ள ஆஹ்வாநத்திற்கு அதிமாத்ரம் கடுவாக ராஜாக்களையே நிந்தித்துப் பதில் எழுதுவது மர்யாதைக் குறைவாக இருக்குமென்று நினைத்தே ராஜநிந்தை யின்றிக்கே வைராக்யத்தையே பலமாக வற்புறுத்தி ஶ்லோகங்களை எழுதியிருக்கலாமோ வென்று நினைக்க ஹேது உண்டு. வித்யாரண்யரிடமிருந்தே இரண்டாவது ஆஹ்வாநம் கிடைத்திருக்கும் பக்ஷத்தில் முதல் ஶ்லோகத்தில் இருக்கும் நிந்தை இன்னும் பதின்மடங்கு அதிகமாக வெளிவந்திருக்குமன்றோ? "दुरीश्वर"

இத்யாதியானது ஸாமாந்யமான துரீஶ்வர நிந்தையே ஒழிய ராஜநிந்தை ஆகமாட்டாது.

இது நிற்க: ஶ்லோகங்களில் ப்ரயோகம் செய்யப் பட்டிருக்கும் பதங்களின் ப்ரயோஜநத்தைக் காட்டுவதிலும் சில விசேஷங்கள் உண்டு. "**पुरा दत्ते स्म**" என்று முதல் ஶ்லோகத்தில் காணப்படும் "**पुरा**" என்னும் ஶப்தத்திற்குப் பின் வருமாறு ரஸவத்தான ஒரு தாத்பர்யத்தை நாம் கேட்டிருக்கிறோம். "**पुरा**" என்பதற்கு, 'பூர்வகாலத்தில், அதாவது: த்வாபரயுக முடிவில்' என்பது ஸ்ரீ ஶடகோபாசார்யருடைய உரை. '**स्म**' என்பதாலேயே பூர்வகாலம் வெளிப்படுவதால், '**पुरा**' என்று மறுபடியும் அந்த அர்த்தத்தைச் சொல்வதைக் காட்டிலும், வேறு ஒரு தாத்பர்யத்தைச் சொல்வது உபபந்நமாக இருக்குமென்று நினைத்து '**पुरा दत्ते**' என்பதற்கு 'முன்பே கொடுத்தான்' அதாவது, 'குசேலர் அவல் முடிச்சை விடுவதற்கு முந்தியே அவருக்கு ஐஶ்வர்யத்தைக் கொடுத்தான்' என்று சில பெரியோர்கள் தாத்பர்ய விவரணம் செய்திருக்கிறார்கள். யாசகன் கேட்பதற்கு முன்னதாகவே அவனுக்கு யதேஷ்டமாகக் கொடுப்பது மஹோதாரனான பகவானுடைய வைலக்ஷண்யமன்றோ?

இரண்டாவது ஶ்லோகத்தில் '**भजन्ति**' என்னும் பதமும் ஸாபிப்ராயம். பஜநம் என்பது ஈஶ்வரனுக்கே ஒக்கும். 'ஈஶ்வரனைப்போல் ஒரு மநுஷ்யனைப் பஜிக்கிறார்களே; இது என்ன மௌட்யம்?' என்னும் ஶோகத்தை இந்தப் பதம் த்யோதிப்பிக்கின்றதன்றோ? '**सेवन्ते**' என்பது போன்ற ஒரு பதத்தை ப்ரயோகியாமல் இந்தப் பதத்தை ப்ரயோகித்ததன் கருத்து இதுவாகவே இருத்தல் வேண்டுமென்று நமக்குத் தோன்றுகின்றது.

'**दुरासिकायै रचितोऽयमञ्जलिः**' என்பது '**दुर्जनः प्रथमं पूज्यः**' என்னும் ந்யாயத்தைக் காண்பிப்பதுடன், அந்தத் துராஸிகையைத் தமக்கு வைராக்ய உபதேஶம் செய்த ஒரு ஆசார்யனாகப் பாவித்து, அதற்கு ஒரு அஞ்ஜலியைச் செய்வதான தாத்பர்யத்தையும் த்யோதிப்பிக்கின்றது என்று சொல்லக்கூடாதா? அவதூதர் இருபத்து நான்கு ஆசார்யர்களிடமிருந்து தாம் ஜ்ஞாநத்தைப் பெற்றதாக யதுவுக்கு உபதேஶித்தாரன்றோ?

ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக அதிக விஷயத்தில் நாம் ப்ரவர்த்தித்து விட்டோம். உத்ஸாஹமடியாக நேர்ந்த இந்த அதிப்ரஸங்கத்தை க்ருபையுடன் ஸ்ரீ சடகோபாசார்ய ஸ்வாமி க்ஷமித்தருள வேணும்.

तृतीयः खण्डः

हरिः ओम्

ब्रह्म ह देवेभ्यो विजिग्ये । तस्य ह ब्रह्मणो विजये देवा अमहीयन्त । त ऐक्षन्त 'अस्माकमेवायं विजयोऽस्माकमेवायं महिमा' इति ॥ १

இரண்டாவது கண்டத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கும் "आत्मना विन्दते वीर्यम्" [ப்ரஹ்ம வித்யையின் நிஷ்பத்திக்கு அநுகூலமான வீர்யம் ப்ரஸந்நனான பரமாத்மாவிடமிருந்தே அடையப்படுகின்றது] என்னும் அர்த்தத்தை நிரூபிக்கும் பொருட்டு இந்தக் கண்டத்தில் ஒரு ஆக்யாயிகை சொல்லப்படுகின்றது.

1. [ப - ரை] **ब्रह्म**-ஸ்ரீபகவான், **देवेभ्य:**-தேவர்களுக்காக [அதாவது : தேவர்களை அநுக்ரஹிக்கும் பொருட்டு], **विजिग्ये** - ஜயித்தான். **तस्य ह ब्रह्मणः** - அந்தப் பகவானுடைய [அதாவது : அந்தப் பகவானால் ஸம்பாதித்துக் கொடுக்கப்பட்ட], **विजये** - ஜயத்தில், **देवाः** - தேவர்கள், **अमहीयन्त** - கொண்டாடப்பட்டார்கள். **ते** - அவர்கள் [அந்தத் தேவர்கள்], **'अयं विजयः** - இந்த விஜயமானது, **अस्माकमेव** - நம்முடையதே [அதாவது : நம்முடைய ஸாமர்த்யத்தாலேயே பெறப்பட்டது]; **अयं महिमा** - இந்தப் பெருமையும், **अस्माकमेव** - நம்முடையதே,' **इति** - என்று, **ऐक्षन्त** - எண்ணினார்கள்.

பஹுகாலமாகத் தேவர்களும் அஸுரர்களும் பரஸ்பரம் கலஹம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது ப்ரஸித்தம். ஆனால் தேவர்கள் தார்மிஷ்டர்களாதலால், அவர்களிடம் பகவானுக்கு ஒரு ப்ரீதி விசேஷம் உண்டு. இந்த ஆக்யாயிகையில், 'ஒருகாலத்தில் அவர்கள் இருவரும் சண்டை செய்துகொண்டிருந்தபொழுது, பகவான் தேவர்களுடைய கக்ஷியில் நின்று அஸுரர்களை ஜயித்துத் தேவர்களுக்கு ஆநுகூல்யத்தைச் செய்துகொடுத்தார்' என்று சொல்லப்படுகின்றது. **देवेभ्यो** [தேவர்களுக்காக] என்பதற்கு, 'தேவர்களை அநுக்ரஹிக்கும் பொருட்டு' என்று பொருள் கொள்ளவேண்டும். 'யாரை ஜயித்தான்?' என்று பிறக்கும் வினவிற்கு 'அஸுரர்களை' என்னும் விடைசேர்த்துக்கொள்ளப்படுகிறது. இம்மாதிரி பகவான் இந்த ஜயத்தைத் தமக்கு ஸம்பாதித்துக்கொடுத்தான் என்பதை அறியாத தேவர்கள், தம்முடைய ஸாமர்த்யத்தாலேயே இந்த விஜயம் தமக்குக் கிடைத்ததென்று எண்ணினார்கள். இந்த அஹங்காரம் மநுஷ்யர்களாயிருக்கும் நமக்குத்தான் இருக்கின்றதென்றால், தேவர்களுக்கும் அது உண்டு என்பதை இந்த ஆக்யாயிகையிலிருந்து நாம் அறிகிறோம்.

तद्धैषां विजज्ञौ । तेभ्यो ह प्रादुर्बभूव । तन्न व्यजानन्त किमिदं यक्षमिति ॥ २

तेऽग्निमब्रुवन् ' जातवेदः एतद्विजानीहि किमेतद्यक्षमिति ' । तथेति ॥ ३

तदभ्यद्रवत् । तमभ्यवदत् ' कोऽसि ? ' इति । ' अग्निर्वा अहमस्मि ' इत्यब्रवीत् , ' जातवेदा वा अहमस्मि ' इति ॥ ४

' तस्मिंस्त्वयि किं वीर्यम् ? ' इति । ' अपीदँ सर्वं दहेयं यदिदं पृथिव्याम् ' इति ॥ ५

---

2. [ப-ரை] **एष** - இவர்களுடைய, **तत् ह** - அதை [அதாவது : அபிமாநத்தை], **विजज्ञौ** - [பகவான்] அறிந்தான். **तेभ्यो ह** - அவர்களுக்காக [அதாவது : அவர்களுக்கு நல்ல எண்ணத்தைப் புகட்டும்பொருட்டு], **प्रादुर्बभूव** - [ஒரு யக்ஷரூபமாக] ஆவிர்ப்பவித்தான். **तत्** - அதை, **किमिदं यक्षमिति** - இது என்ன ய்க்ஷமென்று, **न व्यजानन्** - [தேவர்கள்] அறியவில்லை.

---

3. [ப-ரை] **ते** - அவர்கள், **अग्निम्** - அக்நியை நோக்கி, **' जातवेदः** - ஹே அக்நியே ! **एतत्** - இது, **किमेतद्यक्षमिति** - என்ன யக்ஷமென்று, **विजानीहि** - அறிந்துவா,' **इति** - என்று, **अब्रुवन्** - சொன்னார்கள். **तथेति** - அப்படியே செய்கிறேன் [என்று அக்நி பகவான் மறுமொழி கூறினர்].

---

4. [ப-ரை] **तत्** - அந்த அக்நிபகவான், **अभ्यद्रवत्** - [அந்த யக்ஷத்தை நோக்கி] அதன் ஸமீபம் சென்றார். **कोऽसीति** - நீ யார் ? [என்று அந்த யக்ஷம் கேட்டது]. **' अग्निर्वा अहमस्मि** - நான் அக்நி ; **जातवेदा वा अहमस्मि** - எனக்கு ஜாதவேதஸ் என்றும் பெயருண்டு', **इति** - என்று, **अब्रवीत्** - [அக்நி பதில்] சொல்லிற்று. [அக்நி பகவானுக்கு இந்த இரண்டு பெயரும் ப்ரஸித்தமான பெயர்கள். அவை இரண்டையும் சொல்லிற்று.]

---

5. [ப-ரை]. **' तस्मिन् त्वयि '** - அந்த உன்னிடத்தில், **किं वीर्यम्** என்ன வீர்யமுண்டு ? **इति** - என்று [யக்ஷம் கேட்டது]. **'पृथिव्याम्** - பூமியில், **यदिदम्** - எந்த எந்த வஸ்து உண்டோ, **इदं सर्वमपि** - அவையெல்லாவற்றையும், **दहेयम्** - எரித்து விடுவேன்', **इति** - என்று [அக்நி பதில் சொல்லிற்று].

तस्मै तृणन्निदधौ 'एतद्दह' इति। तदुपप्रेयाय सर्वजवेन। तन्न शशाक दग्धुम्। सतत एव निववृते 'नैतदशकं विज्ञातुं यदेतद्यक्षमिति'॥ ६

अथ वायुमब्रुवन् 'वायवेतद्विजानीहि किमेतद्यक्षम्' इति। तथेति॥ ७

तदभ्यद्रवत्। तमभ्यवदत् 'कोऽसि' इति। 'वायुर्वा अहमस्मि' इत्यब्रवीत्, 'मातरिश्वा वा अहमस्मि' इति॥ ८

'तस्मिंस्त्वयि किं वीर्यम्?' इति। 'अपीदँ सर्वमाददीयं यदिदं पृथिव्याम्' इति॥ ९

तस्मै तृणन्निदधौ 'एतदादत्स्व' इति। तदुपप्रेयाय सर्वजवेन। तन्न शशाकादातुम्। सतत एव निववृते 'नैतदशकं विज्ञातुं यदेतद्यक्षमिति'॥ १०

கீழில் "**आत्मनो विन्दते वीर्यम्**" என்னுமிடத்தில் பேசப்பட்டுள்ள வீர்யமே, இவ்விடத்திலும் "**किं वीर्यम्**"; என்று பேசப்படுகின்றது. அந்த வீர்யம் பகவானுல் கொடுக்கப்பட்டது என்பதை அறியாத அக்நி "**अहं सर्वं दहेयम्**" என்று மஹத்தான அபிமாநத்துடன் பதில் கூறிற்று என்பது நோக்கத்தக்கது.

---

6. [ப - ரை] '**एतद् दह** - இதை எரி" **इति** - என்று, **तस्मै** - அந்த அக்நிக்கு முன், **तृणम्** - ஒரு [சிறிய] த்ருணத்தை], **निदधे** - [அந்த யக்ஷம்] எடுத்துப் போட்டது. [அதைப் பார்த்த அந்த அக்நி] **सर्वजवेन** - பஹு வேகமாக, **तत्** - அந்த த்ருணத்தை நோக்கி, **उपप्रेयाय** - (அதன்) ஸமீபத்தில் சென்றது. **तत्** - அதை, **दग्धुम्** - எரிப்பதற்கு, **न शशाक** - [அந்த அக்நி] ஶக்தியற்றதாகவே நின்றது. **स :**—அந்த அக்நி, **तत एव** - அந்த இடத்தையே விட்டுவிட்டு, **निववृते** - திரும்பி [தேவர்களிடம்] வந்து விட்டது. '**एतत्** - இது, **यदेतद्यक्षमिति** - என்ன யக்ஷமென்று, **विज्ञातुम्** - அறிவதற்கு, **न अशकम्** - ஶக்தியற்றவனுகி விட்டேன். [என்று அக்நி தேவர்களிடம் சொல்லிற்று].

7—10. இந்த வாக்யங்களுக்கும், கீழ் விவரித்திருப்பதுபோலவே பொருள் கொள்ளவேண்டும். அக்நியை அனுப்பியது போலவே வாயுவை அனுப்புகிறுர்கள். முன்போலவே ப்ரஶ்நோத்தரங்கள் நடைபெறுகின்றன. யக்ஷம் ஒரு த்ருணத்தை வாயுவின்முன் எறிந்து, 'இதைப் புரட்டு' என்று சொல்ல, வாயு அதைக் கொஞ்சம்கூடச் சலிப்பிக்க ஶக்தியற்றதாய்த் தேவர்களிடம் திரும்பி வந்துவிட்டது. **वायो एतत्** என்று பதவிபாகம்.

अथेन्द्रमब्रुवन् ‘मघवन्नेतद्विजानीहि किमेतद्यक्षमिति । तथेति ।
तदभ्यद्रवत् । तस्मात्तिरोदधे ॥ ११

एतस्मिन्नेवाकाशे स्त्रियमाजगाम बहुशोभमानामुमां हैमवतीम् । तां
होवाच किमेतद्यक्षमिति ॥ १२

इति तृतीयः खण्डः ॥

---

11. [ப - ரை] **अथ** - பிறகு, **मघवन्** - ஹே இந்த்ரனே! **एतद्विजानीहि किमेतद्यक्षमिति** - இது என்ன யக்ஷம் என்பதை நீங்கள் அறிந்து வரவேண்டுமென்று [தேவர்கள் இந்த்ரனை ஏவினார்கள்]. **तथेति तदभ्यद्रवत्** - அப்படியே செய்கிறேனென்று இந்த்ரனும் அந்த யக்ஷம் இருக்குமிடம் போனான். **तस्मात्** - அந்த இந்த்ரனுடைய ஸந்நிதானத்திலிருந்து, **तिरोदधे** - [அந்த யக்ஷம்] மறைந்துவிட்டது.

அக்நியையும் வாயுவையும் கர்வ பங்கம் செய்த யக்ஷம், ஏன் இந்த்ரனிடமிருந்து மறைந்து விட்டதென்றால், இந்த்ரன் தேவர்களுக்கெல்லாம் அதிபதியாக இருப்பதால் அவனுக்குப் பராபவத்தைச் செய்வது உசிதமன்று என்னும் அபிஸந்தியால்தான் என்று தெரிகின்றது.

---

12. [ப - ரை] **एतस्मिन्नेवावकाशे** - அந்த ஸமயத்தில் [அதாவது: இந்த்ரன் எவ்விடத்தில் இருந்தானோ அந்த இடத்திலேயே அந்தக் காலத்திலேயே], **बहु शोभमानाम्** - அநேக ஆபரணாதிகளால் மிகவும் ஶோபித்துக்கொண்டிருந்த, **हैमवतीम्** - ஹிமவத் பர்வதத்தின் புத்ரியான, **उमाम्** - பார்வதியை, **आजगाम** - [பார்த்து அவளை நோக்கி அந்த இந்த்ரன்] வந்தான். **किमेतद्यक्षमिति** - இந்த யக்ஷம் யாது என்று, **ताम्** - அந்தப் பார்வதியை, **ह उवाच** - கேட்டான்.

இந்த்ரனை அநுக்ரஹிக்கும் பொருட்டே பகவத் ஸங்கல்பத்தால், அவ்விடத்தில் அப்பொழுது பார்வதி தோன்றினாள் என்று ஊஹிக்க வேண்டும்.

மூன்றாவது கண்டம் முற்றிற்று.

चतुर्थः खण्डः

हरिः ओम्

सा ब्रह्मेतिहोवाच। ब्रह्मणो वा एतद्विजये महीयध्वमिति। ततो हैव विदाञ्चकार ब्रह्मेति॥ १

तस्माद्वा एते देवा अतितरामिवान्यान्देवान्; यदग्निर्वायुरिन्द्रस्ते ह्येनन्नेदिष्ठं पस्पर्शु, स ह्येनत् प्रथमो विदाञ्चकार ब्रह्मेति॥ २

---

1. [ப-ரை] **सा** - அந்தப் பார்வதி தேவி, '**ब्रह्म** - [அந்த யக்ஷம் ஸாக்ஷாத்] ப்ரஹ்மமே', **इति** - என்று, **ह उवाच** - சொன்னாள். '**ब्रह्मणः** - ப்ரஹ்மத்தினுடைய, **एतद्विजये** - இந்த விஜயத்தில், **महीयध्वम्** - [நீங்கள்] பெருமை அடையுங்கள்', **इति** - என்றும், [**उवाच** - சொன்னாள்]. **ततो ह एव** - அந்த உபதேசத்திலிருந்தே, **ब्रह्मेति** - [அந்த யக்ஷம்] ப்ரஹ்மமென்று, **विदाञ्चकार** - [இந்த்ரன்] அறிந்துகொண்டான்.

பார்வதி செய்த உபதேசமாவது—'ஹே இந்த்ரனே! உங்களுடைய மோஹத்தை சமனம் செய்யும்பொருட்டு ஸாக்ஷாத் பகவானே யக்ஷ ரூபமாக ப்ராதுர்ப்பூதனானான். நீங்கள் உங்களுடைய ஸாமர்த்யத்தாலேயே அஸுரர்களை ஜயித்துவிட்டதாக எண்ணிக்கொண்டிருக்கிறீர்களே! அது துரபிமானம். ஜயத்தை ஸம்பாதித்துக் கொடுத்தவன் பகவான். அவனால் கொடுக்கப்பட்ட விஜயத்தால் நீங்கள் பெருமை அடைகிறீர்கள். இந்த உண்மையை அறிந்துகொண்டு உங்களுடைய துரபிமானத்தைத் தூர விலக்கிவிட வேண்டும். பகவான் யக்ஷரூபமாக வந்து அக்நி வாயு இவர்களுடைய கர்வத்தைப் பங்கம் செய்ததன் கருத்தும் இதுவே' என்பதுதான்.

---

2. [ப-ரை] **तस्माद्वा** - அந்தக் காரணத்தால், **अग्निः** - அக்நி பகவான், **वायुः** - வாயு பகவான், **इन्द्रः** - இந்த்ரன், **यत् एते देवाः** - என்னும் இந்தத் தேவர்கள், **अन्यान् देवान्** - மற்றைத் தேவதைகளெல்லாரையும், **अतितरामिवत** - மிகவும் அதிசயித்தே [நிற்கிறார்கள்]. [எந்தக் காரணத்தால் என்பதைப் பின்வரும் வாக்யம் விளக்குகின்றது.] **हि** - ஏனென்றால், **ते** - இவர்கள் [இம்மூவரும்], **एनम्** - இந்தப் பகவானை, **नेदिष्ठम्** - [தமது] ஸமீபத்தில் இருப்பவனாக, **पस्पृशुः** - பார்த்தார்களோ, **हि** - எந்தக் காரணத்தால், **ते** - இவர்கள், **एनत्** - இந்த யக்ஷத்தை, **ब्रह्मेति**- ப்ரஹ்மமென்று, **प्रथमःविदाञ्चकार** - எல்லாருக்கும் முன்னதாக அறிந்தார்களோ.

'**पस्पृशुः**' என்பதற்குத் தொட்டார்கள் என்பது பொருள்; இவ்விடத்தில் 'பார்த்தார்கள்' என்னும் அர்த்தத்தில் கொள்ள வேண்டும். அக்நியும் வாயுவும் மாத்ரம் அந்த யக்ஷத்தைப் பார்த்

तस्माद्वा इन्द्रोऽतितरामिवान्यान्देवान् ; सह्येनन्नेदिष्ठं पस्पर्श, स ह्येनत्
प्रथमो विदाञ्चकार ब्रह्मेति ॥ ३

तस्यैष आदेशो यदेतद्विद्युतो व्यद्युतत् आ इति, इन्न्यमीमिषत् आ,
इत्यधिदैवतम् ॥ ४

தார்கள்; இந்த்ரன் பார்க்கவில்லை. ஆனால் இந்த்ரனுக்குப் பார்வதீ தேவியின் தர்ஶநமும் அவளிடமிருந்து உபதேஶமும் கிடைத்தன. இவை யெல்லாவற்றையும் ஒன்று சேர்த்துக் காண்பிக்கிறது '**पस्पृशु:**' என்னும் ஶப்தம். '**एनम्**' என்று ஓரிடத்தில் புல்லிங்கம் '**एतत्**' என்று மற்றோரிடத்தில் நபும்ஸகலிங்கம்; '**विदाञ्चक्रु:**' என்று பஹுவசநம் இருக்கவேண்டு மிடத்தில் '**विदाञ्चकार**' என்று ஏகவசநம், இம்மாதிரியான முரண்பாடுகள் வேத வாக்யங்களுக்கு ஸஹஜம். '**अति**' என்றால் 'அதிகமாக'; '**अतितराम्**' என்றால் 'மிகவும் அதிகமாக' என்று மாத்ரம் அர்த்தம் கிடைக்கும். '**शेरते**' என்னும் ஒரு பதத்தைச் சேர்த்துக்கொண்டு '**अतितरां शेरते**' 'மிகவும் அதிஶயித்துக் கிடக்கின்றன' என்று பொருள் கொள்ளுகிறோம். '**इव**' என்பதற்கு '**एव**' என்று அர்த்தம்.

---

3. [ப - ரை] **तस्माद्वा** - அந்தக் காரணத்தால், **इन्द्रः** - இந்த்ரன், **अन्यान् देवान् अतितरामिव** - [அக்நி வாயுக்கள் உள்பட] மற்றை எல்லாத் தேவர்களைக்காட்டிலும் மிகவும் அதிஶயித்து இருக்கிறான். **हि** - ஏனென்றால், **सः** - அவன், **एनन्नेदिष्ठं पस्पर्श** - இந்தப் பகவானை ஸமீபத்தில் பார்த்தானே. **हि** - ஏனென்றால், **सः** - அவன், **एनत्** - அந்த யக்ஷத்தை, **ब्रह्मेति प्रथमो विदाञ्चकार** - ப்ரஹ்மமென்று எல்லாருக்கும் முன்னதாகவே அறிந்து கொண்டானே.

4—5. இந்த வாக்யங்களில், 'மின்னல் மின்னி மறைவது போலவும், மநஸ்ஸில் ப்ரஹ்மத்தின் நினைவு தோன்றி மறைவது போலவும், ப்ரஹ்மமும் ஒரு க்ஷணம் மாத்ரம் ப்ரகாஶித்து உடனே திரோதாநம் அடைகிறான்' என்று இரண்டு த்ருஷ்டாந்தங்கள் ப்ரஸ்தாவிக்கப்படுகின்றன. முதல் த்ருஷ்டாந்தம் அதிதைவதம்; இரண்டாவது அத்யாத்மம். ஆத்மாவைக்காட்டிலும் வேறுபட்டதான ஆகாஶாதிகளுள் அடங்கிய மின்னலை த்ருஷ்டாந்தமாக எடுத்தபடியால் முதலாவது அதிதைவதம். தேஹத்தினுள் இருக்கும்படியான மநஸ்ஸை த்ருஷ்டாந்தமாக எடுத்தபடியால் இரண்டாவது அத்யாத்மம். 'அத்யாத்மம்' என்னும் ஶப்தத்திலுள்ள 'ஆத்மா' என்பது தேஹத்தைக் குறிக்கின்றது. ஶ்ருதியில் அநேக இடங்களில் 'ஆத்மா' என்பதற்குத் 'தேஹம்'என்னும் பொருளுடன் ப்ரயோகமுண்டு.

अथाध्यात्मम् । यदेतद्गच्छतीव मनो नचैतदुपस्मरत्यभीक्ष्णं सङ्कल्पः ॥ ५

तद्ध तद्वनन्नाम । तद्वनमित्युपासितव्यम् । स य एतदेवं वेद अभि हैनं सर्वाणि भूतानि संवाञ्छन्ति ॥ ६

---

4. [ப - ரை] **तस्य** - அந்த ப்ரஹ்மத்திற்கு, **एषः** - இது [அதாவது: மேல் சொல்லப்படப்போவது], **आदेशः** - உபமாந ரூபமான உபதேசம். **एतत्** - இந்த ப்ரஹ்மமானது, **विद्युतः** - மின்னல் போல், **व्यद्युतत् आ** - ப்ரகாசித்தது; **इत्** - மிற்க, **न्यमीमिषत् आ** - [அந்த மின்னல் போலவே] மறைந்தது; **इति यत्** - என்று யாதொன்று உண்டோ [அது ஒரு த்ருஷ்டாந்தம்]. **इत्यधिदैवतम्** - இது ஆத்மாவைக்காட்டிலும் வேறுபட்டதான தேவதா ஸம்பந்தமான உபமாநம். இந்த வாக்யத்தில் '**आ**' என்பது ப்ரஸித்தியைக் குறிக்கும் அவ்யயம். '**इत्**' என்பது ஸமுச்சயத்தைக் குறிக்கின்றது.

---

5. [ப - ரை] **अथ अध्यात्मम्** - பிறகு தேஹத்திலிருக்குமதைப் பற்றிய [த்ருஷ்டாந்தம்]. **एतत्** - இந்த ப்ரஹ்மமானது, **मनो गच्छतीव** - மநஸ் போவது போலவே [மநஸ் ப்ரஹ்மத்தை நினைப்பது போல], **सङ्कल्पः**- [மநஸ்ஸில் ஜநிக்கும்] த்யாந விசேஷமானது, **अभीक्ष्णम्** - நீடித்த காலம், **एतत्** - இந்த ப்ரஹ்மத்தை, **न च उपस्मरति** - விஷயீகரிக்கவில்லை.

ப்ரஹ்மம் ப்ரகாசிப்பது, மநஸ் ப்ரஹமத்தை விஷயீகரிப்பது போல ஒரு க்ஷணமாத்ர காலமே. ப்ரஹ்மம் திரோதாநம் அடைவதும் ப்ரஹ்மத்தின் த்யாநம் மநஸ்ஸில் நிலைபெறாமல் பறந்து போவது போல ஒரு க்ஷணத்திலேயே நேர்கின்றது. இந்த த்ருஷ்டாந்தங்களை இவ்விடத்தில் ப்ரஸ்தாவித்திருப்பது ஒரு வ்யாஜமே. ப்ரஹ்மத்தை உபாஸிக்க வேண்டும் என்று அடுத்த வாக்யத்தில் சொல்லப்படப் போகின்றது. அதற்கு முன், 'ப்ரஹ்மத்தை இடைவிடாமல் த்யாநிப்பதானது துஶ்ஶகம்' என்பதை ப்ரஸ்தாவிப்பது ஸங்கதமே. அம்மாதிரியான த்யாநாநுவ்ருத்தி ஸுலபமன்று என்பதைச் சொல்லவேண்டும் என்பதே முக்ய கருத்து

---

6. இதில், ப்ரஹ்மத்தை உபாஸிப்பதால் கிடைக்கும் பலம் சொல்லப்படுகின்றது. ப்ரஹ்மத்தை உபாஸித்தால் சதுர்வித புருஷார்த்தங்களும் அந்த உபாஸநத்தின் பலமாகக் கிடைக்கும். ஆனால், மோக்ஷ புருஷார்த்தத்தை அபேக்ஷிக்குமவன் உபாஸிக்கும் ப்ரகாரத்திற்கும் மற்றைப் புருஷார்த்தங்களை அபேக்ஷிக்குமவன் உபாஸிக்கும் ப்ரகாரத்திற்கும் வாசி உண்டு. இவ்விடத்தில் மற்றைப் புருஷார்த்தங்களைப் பலமாக உடைய ப்ரகாரம் சொல்லப்படுகின்றது.

[ப - ரை] **तत् ह** - அந்த ப்ரஹ்மம், **वनं नाम** - வநம் என்னும் பெயரை உடையது. **तद्वनमिति** - அது வநமென்றே [உபாஸிக்கத் தகுந்தது.] **स यः**- எவனொருவன், **एतत्** - இந்த ப்ரஹ்மத்தை, **एवम्** - இவ்வா

'उपनिषदं भो ब्रूहि' इति । 'उक्ता त उपनिषत्; ब्राह्मीं वाव त उपनिषदमब्रूम' इति ॥ ८

'तस्यै तपो दमः कर्मेति प्रतिष्ठा; वेदास्सर्वाङ्गानि सत्यमायतनम् ॥

ஞக [அதாவது: அதை வநமென்று த்யாநித்து], **वेद** - உபாஸிக்கிறுனே, **एनम्** - அவனை, **सर्वाणि भूतानि** - எல்லா ப்ராணிகளும், **अभिसंवाञ्छन्ति ह** - ப்ரார்த்திக்கின்றன.

ப்ரஹ்மத்தை 'வநம்' என்று த்யாநித்தல் வேண்டும் என்று சொல்வதற்கு உபபத்தி என்னவென்றுல் - **वन्** என்னும் தாதுவுக்கு 'ப்ரார்த்திக்கிறது' என்பது பொருள். எல்லாராலும் அவன் ப்ராத்திக்கப்படத் தகுந்தவனுதலால், அவனை 'வநம்' என்று அழைப்பது உபபந்நமே. **वननीयत्वेन [प्रार्थनीयत्वेन] वननामकं भवति ॥**

---

7. ப்ரஹ்மவித்யையை நிஷ்பத்தி செய்துகொள்வதற்குப் பகவத் ப்ரஸாதமே காரணமென்று அறிந்தவுடன், அந்தப் பகவத் ப்ரஸாதத்திற்கு எது ஸாதநமோ அதைச் சொல்லும் உபநிஷத்தை விளக்கவேண்டுமென்று சிஷ்யன் ப்ரார்த்திக்கிறுன். அதற்கு ஆசார்யன், 'ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கும் ப்ரதாந உபநிஷத் உனக்குச் சொல்லப்பட்டதாகி விட்டது; இப்பொழுது ப்ரஹ்மத்தை அடைவதற்கு எது முக்யமான ஸாதநமோ அதைச் சொல்லுகிறேன்' என்று பதில் கூறுகிறுர்.

2/10/08

[ப - ரை] '**भो** - ஹே [ஆசார்யனே], **उपनिषदम्** - உபநிஷத்தை [அதாவது: பகவதநுக்ரஹத்திற்கு எது ஸாதநமோ அதை ப்ரதி பாதிக்கும் வித்யையை], **ब्रूहि** - சொல்லும்', **इति** - என்று [ஶிஷ்யன் ப்ரஶ்நம் செய்தான்]. '**ते** - உனக்கு, **उपनिषत्** - [ப்ரஹ்மத்தை ப்ரதி பாதிக்கும்] வித்யையானது, **उक्ता** - சொல்லப்பட்டதாயிற்று. **ब्राह्मीं वाव उपनिषदम्** - ப்ரஹ்மத்தின் ப்ரஸாதத்திற்கு ஸாதநமான வித்யையை, **ते** - உனக்கு, **अब्रूम** - சொல்லுகிறேன்'. **इति** - என்று [ஆசார்யன் பதில் அளித்தார்].

---

8. இப்படிப் பதில் அளித்துவிட்டு, ப்ரஹ்ம வித்யையின் ஸாதநத்தை இரண்டு வகுப்பாகப் பிரித்து, ஒரு வகுப்பு ப்ரஹ்ம வித்யையின் உத்பத்திக்குக் காரணமென்றும், மற்றென்று அந்த வித்யையின் தார்ட்யத்திற்குக் காரணமென்றும் விபஜித்து அவைகளை விவரிக்கிறுர்.

[ப - ரை] **तस्यै** - அந்த உபநிஷத்திற்கு [அதாவது: அந்த வித்யைக்கு], **तपः** - தபஸ், **दमः** - உபஶாந்தி, **कर्म** - கர்மாநுஷ்டாநம், **इति** - என்று [இவை மூன்றும்], **प्रतिष्ठा** - தார்ட்யத்தைக் கொடுக்குமவை; **सर्वाङ्गानि** - எல்லா அங்கங்களுடன் கூடிய, **वेदाः** - வேதங்களும், **सत्यम्** - ஸத்யவசநமும், **आयतनम्** - உத்பத்தி காரணங்கள்.

2/10/08

ஸ்ரீ :

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—11—'42 to 30—11—'42

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

		Rs.
1.	Sri T. A. Rajagopala Iyengar, Sannidhi Street, Therazhandur ...	1
2.	,, S. T. Srinivasachariar, M.A., L.T., Kalyanapuram, via Tiruvadi ...	3
3.	,, V. Sundararaghava Reddy, Omanthur Post ...	3
4.	,, Mysore Rangachariar, Valayapatty Post ...	1½
5.	,, E. M. Narasimhachariar, Trivellore ...	2
6.	,, Raghavachariar Swami, Acharya Peet, Kumarapur, Baverley, V.P. ...	3
7.	,, Satagopathathachariar, Lakshminarayana Mandir' Patin, N. Guzarat ...	3
8.	,, T. Srinivasa Iyengar, Rtd. Sub-Judge, Mannargudi ...	3
9.	,, K. Sundaram Iyengar, Station Master, Sathur ..	1½
10.	,, V. Srinivasa Iyengar, Triplicane	2
11.	Sri K. Parthasarathy Iyengar, Panrutti ...	3
12.	,, K. V. Rajagopala Iyengar, Panruti ...	3
13.	,, D. Sundararaja Iyengar, Panrutti ...	3
14.	,, R. Chakkarapani Iyengar, Anatur Post ...	3
15.	,, V. S. Narasimhachariar, 11, Krishna Iyer Street, Nungambakkam ...	3
16.	,, R. Kuppuswami Iyengar, Emapur ...	3
17.	,, K. D. Rajagopala Iyengar, Tirukkoilur ...	3
18.	,, R. Varadachariar, B.A., L.T., Saidapet ...	3
19.	,, B. T. Seshadrachariar, Belu ...	3
20.	,, C. Rajagopalachariar, B.A., B.L., Mambalam ...	1

[இந்த ஸஞ்சிகையுடன் பனிரெண்டு ஸஞ்சிகைகள் வெளியாகி இருக்கின்றன. இதுவரையில் சந்தாவைச் செலுத்தாதவர்களுக்கு ஸஞ்சிகை இனி அனுப்பப்பட மாட்டாது.]

ஸ்ரீ :

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபனம்

1. இந்தப் பத்ரிகையின் வருஷச் சந்தா ரூபா 3. இப் பத்ரிகையை அபேக்ஷிப்பவர்கள் இந்த ஆபீஸ் விலாஸத்திற்கு எழுதிப் பத்ரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. வருஷச் சந்தாவை முன் பணமாகக் கீழ்க்கண்டுள்ள விலாஸத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாதாரர்கள், பத்ரிகைக்காக மனுச் செய்துகொள்ளும் காலத்தில், தங்களுடைய விலாஸத்தைப் பூர்ணமாக எழுதி அனுப்புதல் வேண்டும். பிறகு விலாஸம் எப்பொழுதாவது மாறினால், அந்த மாறுதலையும் உடனே பத்ரிகை ஆபீஸுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

3. சந்தாதாரர்கள் ஆபீஸுக்கு எழுதும் கடிதங்கள் எல்லாவற்றிலும், தங்கள் பெயருடன் தங்கள் ரிஜிஸ்தர் நம்பரையும் எழுத ப்ரார்த்திக்கிறோம். அந்த நம்பர் அச்சிட்ட விலாஸத்தில் காணப்படும்.

Regd. No. M. **4437**

ஸ்ரீ:

புத்தக விளம்பரம்

ஸ்ரீமத் வேதாந்த தேசிக க்ரந்த மாலா

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் அருளிச்செய்த ஸம்ஸ்க்ருத க்ரந்தங்கள் யாவும் தேவநாகர லிபியில் வெகு நேர்த்தியாகவும் சுத்தமாகவும் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவர் அருளிச்செய்த 32 ரஹஸ்யங்களும் தேசிக ப்ரபந்தங்களும் தெலுங்கு லிபியில் அச்சிடப்பட்டிருக்கின்றன. மொத்தம் 9 ஸம்புடங்கள் விலை ரூ. 30—0—0

தனித்தனி ஸம்புடங்களின் விலை விவரம்

1. **ஸ்தோத்ராவளீ விபாகம்.**—ஹயக்ரீவ ஸ்தோத்ரம் முதல் பாதுகா ஸஹஸ்ரம் வரை ஸகல ஸ்தோத்ரங்களும் ... ரூ. 2—0—0
2. **வேதாந்த விபாகம்—1.** அதிகரண ஸாராவளியும் சத தூஷணியும் ... ரூ. 3—0—0
3. ஷை **2.** மீமாம்ஸாபாதுகா, ஸேச்வரமீமாம்ஸா, ந்யாய பரிசுத்தி, ந்யாய ஸித்தாஞ்ஜநம் ரூ. 3—0—0
4. ஷை 3. ஸர்வார்த்த ஸித்தியோடு கூடின தத்வ முக்தாகலாபம், ... ரூ. 4—0—0
5. **காவ்ய நாடக விபாகம்.**—ஹம்ஸ ஸந்தேசம், ஸுபாஷிதநீவி, யாதவாப்யுதயம், ஸங்கல்ப ஸூர்யோதயம் ... .. ரூ. 3—0—0
6. **வ்யாக்யாந விபாகம் 1.**—ஈசாவாஸ்யோபநிஷத் பாஷ்யம், சதுச்லோகி பாஷ்யம், ஸ்தோத்ர பாஷ்யம், கத்ய பாஷ்யம் ... ரூ. 2—0—0
7. ஷை 2. கீதார்த்த ஸங்க்ரஹரக்ஷா, கீதா பாஷ்யமும் தாத்பர்ய சந்த்ரிகையும் ... ரூ. 5—0—0
8. ஷை 3. தத்வடீகை, நிக்ஷேபரக்ஷை, ஸச்சரித்ர ரக்ஷை, பாஞ்சராத்ரரக்ஷை முதலியவை ... ரூ. 4—0—0
9. **தேசிக ப்ரபந்த ரஹஸ்யங்கள்** (தெலுங்கு லிபி) ... ரூ. 5—0—0

ஸ்ரீ பகவத் ராமாநுஜ க்ரந்த மாலா.—உடையவர் அருளிச்செய்த ஸ்ரீ பாஷ்யம் கீதா பாஷ்யம் முதலிய ஸகல க்ரந்தங்களும் ஒரே ஸம்புடமாக (தெலுங்கு லிபி) ... ... ரூ. 6—0—0

ஸ்ரீமத்வரவரமுநீந்த்ர க்ரந்தமாலா.—மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஸ்ரீ வசநபூஷண, தத்வத்ரய, முமுக்ஷுப்படி, ஆசார்ய ஹ்ருதய வ்யாக்யாநங்களெல்லாம் ஒரே ஸம்புடமாகத் தெலுங்கு லிபி ரூ. 6—0—0

ஸ்தோத்ர மாலா ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் வழங்கும் ஸகல ஸ்தோத்ரங்களும். (நாகர லிபி) ... ... ரூ. 1—8—0

ஸ்ரீ வைஷ்ணவஸுதா—ஸம்ஸ்க்ருத பாஷையிலும் ஹிந்தி பாஷையிலும் மாதந்தோறும் வெளிவரும் பத்ரிகை. வருஷச் சந்தா .. ரூ. 2—0—0

: கிடைக்குமிடம் :

P. B. அண்ணங்கராசாரியர்,

க்ரந்தமாலா ஆபீஸ் : : காஞ்சீபுரம்

Printed by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramasami Street, Tyagarayanagar, Madras.